# விவேகவாணி

ஏப்ரல் 2011 – கர பங்குனி–சித்திரை கலி 5112 ரூ.7/–






# விவேகவாணி

**விவேகானந்த கேந்திர மாத இதழ்**

**விவேகானந்தபுரம், கன்னியாகுமரி – 629 702**


## வணக்கம் வாருங்கள்!!

அன்புள்ள வாசக நேயர்களுக்கு,
நமஸ்காரம்.

**விவேகவாணியின் ஏப்ரல் – 2011** உடன் 26 ஆண்டுகள் முடிவுற்று 26 தொகுதிகள் நிறைவாகின்றன. இவ்விதழில் ஸ்ரீராமநவமியைக் குறிக்கும் வண்ணம் அழகிய அட்டைப்படம் வெளியாகிறது.

மாதந்தோறும் வெளியாகும் ஹிந்துப் பண்டிகைகளின் பட்டியலைத் தயார் செய்ய விவேகானந்த கேந்திரத்தின் அருணாச்சல் பிரதேச அலுவலகம் நன்முயற்சி எடுத்து நமக்கென தொகுத்து கொடுக்கிறது. குடும்ப வாழ்க்கை பற்றிய கட்டுரையும், வாசகர்களின் சிறப்பு கவனத்திற்குரியது. சகோதரி நிவேதிதை இறைவனடி சேர்ந்த நூற்றாண்டின் போது அவருடைய வாழ்க்கை வரலாறு **விவேகவாணியில்** வருவது மிகுந்த பொருத்தமுடையது ஆகும். இப்பத்திரிக்கையில் தொடராக வரும். ஸ்ரீ ஏக்நாத்ஜியின் வாழ்க்கை வரலாறு புத்தக வடிவம் பெற்று வெளியாகி உள்ளது. ஆசிரியர்களுக்கான கட்டுரைப் போட்டியில் பரிசு பெற்றோர் பட்டியலும், சென்ற ஆண்டு பரிசு பெற்ற ஆங்கில கட்டுரையின் தமிழாக்கமும் வெளியாகின்றன. தமிழ்ப் புத்தாண்டை ஒட்டி வாசகர்கள் வாழ்வில் நலன்கள் அனைத்தும் பெருகப் பிரார்த்திக்கிறோம்

**இப்படிக்கு,**

**இறைவன் பணியில்,**

**விவேகவாணி**

ஏப்ரல் 2011


**தொலைபேசி: (044) – 28440042/28442843**

**ஈமெயில்: vkpt@vkendra.org**



**தவம் 26 ஏப்ரல் 2011 சேவை 12**

**தனிப்பிரதி ரூ. 7/–, ஆண்டுச்சந்தா ரூ. 75/–, இரண்டாண்டுச் சந்தா ரூ. 140/–, மூன்றாண்டுச் சந்தா ரூ. 200/–, ஆயுட்சந்தா (10 ஆண்டுகள்) ரூ. 700/–, வெளிநாட்டு ஆண்டுச் சந்தா 20 டாலர்கள்.**

# மாதம் ஒரு மந்திரம்

ஜகதாமாதிபூதஸ் த்வம் ஜகத் த்வம் ஜகதாச்ரய:
ஸர்வபூதேஷ்வஸம்யுக்த ஏகோ பாதி பவான் பர:
(அத்யாத்ம ராமாயணம்)

நீங்களே பரமாத்மா. ஆதிகாரணம், உலகின் தோற்றமும், ஆதாரமும் நீங்களே. உலக விஷயங்களில் மாற்றங்கள் வரும் போதும் அவற்றால் நீங்கள் மாறுபாடு அடையாமல் ஒரே முழுப்பொருளாக நீங்கள் ஒளி வீசுகின்றீர்கள்.

## கரவருஷம் சித்திரை மாத ஹிந்துப் பண்டிகைகள்

2011 – ஏப்ரல் 14 முதல் மே – 13 வரை

**ஏப்ரல் –14** கரவருஷப் பிறப்பு, தமிழ்ப் புத்தாண்டு தினம், **17** – சித்ரா பௌர்ணமி, குரு ஹரிகிஷன் புண்யதிதி, உலக ஹீமேபீலியாதினம், **18** – மதுரை கள்ளழகர் ஆற்றில் இறங்கும் விழா, உலக பாரம்பரிய நாள், தாத்தியா டோப்பே பலிதான நாள், **21** – அநசூயா பிறந்த நாள், செயலாளர்கள் தினம்/ தேசீய சிவில் சேவை நாள், **22** – குருதேக்பஹாதூர் பிறந்த நாள்/நல்லவெள்ளி/ பூமி தினம், **23** – உலக பதிப்புரிமை/நூல் நாள், **24** – ஈஸ்டர், **26** – உலக அறிவுசார் காப்புரிமை தினம், **28** – வரூத்தினி ஏகாதசி/ வல்லபாச்சாரியார் பிறந்தநாள், அப்பர் சுவாமிகள் ஆராதனை,**30** – ரமணமகரிஷி ஆராதனை, முனிவர் துக்கடோஜி மஹாராஜ் பிறந்த நாள்.

**மே – 1** தேசீய தொழிலாளர் தினம், **3** – உலக பத்திரிக்கை சுதந்திர தினம்/ உலக ஆஸ்த்மா தினம்/ உலக எரிசக்தி தினம், **4** – உலக நிலக்கரி சுரங்கத் தொழிலாளர் தினம், சியாமாசாஸ்திரி (சங்கீத மூவருள் ஒருவர்) நினைவு நாள், **5** – சிவாஜி பிறந்த நாள்/ பரசுராமர் பிறந்த நாள், உலக தடகள விளையாட்டு நாள், **6** – சுவாமி சின்மயானந்தர் பிறந்த நாள், அட்சய திருதியை, இறைநாம ஜபத்துக்கு உரிய நாள், **8** – ஆதிசங்கரர் அவதாரநாள் (ஸ்ரீராமானுஜர் அவதார நாள்) சூர்தாசர், ரவீந்திரநாத தாகூர் பிறந்த நாள், உலக ரெட்கிராஸ் தினம், **10** – அன்னையர் தினம், **11** – தேசீய தொழில் நுணுக்கதினம், **12** – உலக ரத்த அழுத்த எச்சரிக்கை தினம், செவிலியர் தினம், **13** – மோஹினி ஏகாதசி.

# வேதத்தின் உட்பொருள்

# பிரணவம் எனும் ஓம்காரம் (242)

ஓம்காரம்

*மாண்டூக்கிய உபநிஷதத்தின் அடிப்படையில் சுவாமி பிரணவ சைதன்யபுரி ஹிந்தியில் எழுதி வாராணசி பரமார்த்த சாதக சங்கம் வெளியிட்டது*

*அத்தியாயம் - (2) ஓம்காரத்தின் மறைபொருள் - ஓம்காரமே அனைத்தும்*

**மத்யமா வாக்கு:** பராவாணியும், அதை உச்சரிக்கும் உயிருள்ள மனிதரும் ஒன்றில் இருந்து ஒன்று பிரிக்க முடியாதவை. வாணியும், பேசுபவரும் தனித்தனி இல்லை. நீங்கள் காணும் உலகம் பிரம்மத்தின் உச்சாரண ஓசை ஆகும். பிரம்மம் உச்சரித்ததே ஜகத் ஆகும். இப்படைப்பு ஆகும். பிரம்மத்தின் மனத்தில் செயல் துடிப்பு ஏற்பட்டது. அவர் எதைப் பேசினாரோ அதுவே இந்தப் படைப்பு ஆகும். நீங்கள் இக்கருத்தைப் பிடித்துக் கொண்டால் அது ஒரு கவிதையைப் போல இருக்கும்.



வைக்கரீ என்ற வாக்கு நம் கையில் பிடிபடவில்லை என்றால் மத்யமா என்பதைப் பிடிப்பதிலும் இடையூறு ஏற்படுகிறது. நாம் மனத்தில் செய்யும் ஜபம் வைக்கரீயின் சூக்கும வடிவம் ஆகும். மத்யமா என்பது என்ன? இது இன்னொரு படிக்கட்டு ஆகும். ஓம் தான் எல்லாம் என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும். காரிய வடிவில், செயப்படுபொருள் வடிவில் இருப்பது வெறும் காட்சி தான் உண்மையில் இல்லை என்பது விளக்கப்பட்டது. இப்போது கண்ணுக்குத் தெரிவது ஓசையின் மாற்று வடிவம் தான் என்பதை பார்ப்போம். விவர்த்தம் என்பதைப் பார்ப்போம்.

எந்த அர்த்தத்தையும் எடுத்துச் செல்லும் ஓசைக்கு வாசகம் என்று பெயர், நாமம் என்று பெயர். பானை என்ற வடிவமுடைய பொருளின் பெயர் பானை ஆகும். வாசகம் என்றால் பெயர். நான் பானை என்ற சொல்லை உச்சரித்தேன். பத்து மனிதர்கள் இவ்விதத்தில் பானை என்ற சொல்லை உச்சரித்தார்கள். எத்தனை பெயர்கள் உச்சரிக்கப்பட்டன? நான் பத்து தடவைகள் சொன்னால் பத்து

பெயர் ஆகிவிடுமா. பத்து தடவை பானை என்ற சொல்லை உச்சரித்தேன் என்று கூறினால் பத்து பானைகளைச் சொன்னதாகக் கூறிவிட முடியுமா? பானை என்ற சொல்லைத் தான் பத்து தடவை சொன்னேன். இதன் பொருள் பானை என்ற சொல் ஒன்றே ஒன்று தான். பத்து அல்ல.

ஒரே ஓசையைப் பத்து தடவை கூறினோம். நீங்கள் பானை என்ற சொல்லை, ஒரே சொல்லை பத்து தடவை காதால் கேட்டீர்கள். அதாவது உங்கள் காது என்ற புலனில் பத்து தடவை இந்த ஓசை கேட்டது. பத்து தடவை உங்கள் காதில் வந்து மோதியது வேறு. ஆனால் எதைக் கேட்டீர்களோ, எதைப் புரிந்து கொண்டீர்களோ அந்தப் பானை ஒன்றே ஒன்று தான். ஒரேயொரு பானையை பத்து தடவை எப்படிக் கேட்க முடிந்தது? நான் பானை என்று சொன்னேன். உங்கள் காதில் விழுந்தது. விஷயம் முடிந்தது. பிறகு திரும்பி எது வருகிறது? இன்னொரு தடவை பானை என்று சொல்கிறோமா? ஓசையைப் பிடித்துக் கொள்ளுங்கள். இதனால் பானை என்னும் ஓசை எல்லா இடங்களிலும் இருக்கிறது. அது நித்தியமானது. நாம் வாயால் உச்சரிக்கும் போது அது வெளிப்படுகிறது, தெரிகிறது. உங்களை மத்யமா என்ற நிலைக்குக் கொண்டு போக வேண்டுமானால் நீங்கள் உயர எழும்பாமல் அதைப் புரிந்து கொள்வது கடினமாகும்.



ஒரு பொருளை நடுவில் வைத்து அதைச் சுற்றிலும் பத்து கண்ணாடிகளை வைத்து விட்டால் அது பத்து பொருள்களாகக் காட்சி தரும். ஆனால் அது உண்மையில் ஒரு பொருள் தான். இதேபோன்று பானை என்ற ஒரு ஓசை உங்கள் உணர்வில் பட்டது. முதலிலே இருந்தது மிக சூக்குமமானது. நாம் முயற்சி செய்வது, நடவடிக்கைகள் செய்வது, அவையெல்லாம் கண்ணாடியைப் போன்றவை. கண்ணாடியில் பானை என்ற ஓசை பிரதிபலிப்பது முயற்சிக்குத் தகுந்தாற்போல் திரும்பத்திரும்ப பிரதிபிம்பம் வந்து போகும். மூல ஓசை ஒன்றே ஒன்று தான்.

இதை இன்னொரு விதமாகவும் புரிந்து கொள்ளலாம். பானை ஆகிய ஒரு பொருளைப் பார்த்து உங்கள் மனத்தில் அதன் பெயர் தோன்றிற்று. இது பானை என்று கூறினீர்கள். ஆங்கிலம் பேசுபவர்கள் ‘பாட்’ என்று கூறுவார்கள். குஜராத்தியில் ‘கடோம்’ என்று சொல்வர். பத்து வெவ்வேறு மொழியாளர்கள் பேசினால் ஒவ்வொருவருடைய மனத்திலும், தனித்தனி ஓசைச் சொற்கள். ஆனால் எல்லோரும் இந்தப் பொருளைத் தான் குறிப்பிடுகிறோம் என்பதை அறிந்து இருக்கிறார்கள். வெவ்வேறு சொற்களில் பானையைப் புரிய வைக்கும்

சக்தி இருக்கிறது. ஒரு மொழி பேசும் மனிதரின் மனத்தில் உதித்து எழுவது, வெளித்தோன்றுவது, இன்னொரு மொழி பேசுபவரின் மனத்துக்குப் புரியாது. வைக்கரீ மொழிகள் வெவ்வேறாக இருக்கும். ஆனால் எல்லாவற்றுக்கும் முதலில் இதயத்தில் தோன்றும் மூல ஓசை, உணர்வுமயமான ஓசை வெவ்வேறாக இருக்காது.

பானையைப் பார்த்த உடனே இதயத்தில் சூக்குமமான ஒரு செயல் தொடங்கியது. அந்த உணர்வு, அந்த அசைவு, குரலில் வெளித் தோன்றியது. அது பானை என்றோ, பாட் என்றோ, கடோம் என்றோ வெளி வரலாம். இந்த வெவ்வேறு சொற்கள் எங்கிருந்து உதித்து எழுகின்றன? ஒரு சூக்கும ஓசை, உணர்வுமயமான ஓசையில் இருந்து அதை எட்டிப் பிடிக்க வேண்டும். அதைத்தான் மத்யமா என்று கூறுகின்றோம். இது எல்லா நாடுகளிலும், எல்லா மனிதர்களாலும் ஏற்கப்படும் மொழி ஆகும். அங்கு இதயத்தில் வேற்றுமை எதுவும் கிடையாது. இதயம் வரை நாம் போய் விட்டால் போதும்.



நான் வைக்கரீ மொழியில் உங்களுக்குப் புரிய வைக்க இயலவில்லை. புரிந்து கொள்பவர்கள் மத்யமா வாணியின் அருளால் புரிந்து கொள்கிறார்கள். அந்த மத்யமா வாணி உங்களிடத்தில் இருக்கிறது. என்னிடத்தில் இருக்கிறது. இதனால் தான் ஒருவர் பேசுவது இன்னொருவருக்குப் புரிகிறது. இதயத்தின் மொழி எது? அது சம்ஸ்கிருதத்திலும் இல்லை. ஹிந்தியிலும் இல்லை. குஜராத்தியிலும் இல்லை. ஆங்கிலத்திலும் இல்லை. இதயத்தின் மொழி மத்யமா வாணி ஆகும்.

வெவ்வேறு கருவிகள் இருக்கின்றன. வீணை, புல்லாங்குழல் முதலியவை. அவையெல்லாம் ஒரே ராகத்தை எழுப்புகின்றன. ராகம் ஒன்று தான். கருவிகளில் தான் வேறுபாடு. அதுபோல மொழிகள் வெவ்வேறாயினும் உணர்வில் வேறுபாடு இல்லை. வைக்கரீயில் பானை என்ற சொல் ஓசையை கேட்டதுமே உங்கள் இதயத்தில் இந்த எண்ணம் தோன்றி விடுகிறது. சுவாமிஜி பானையைப் பற்றிப் புரிய வைக்க முயற்சி செய்கிறார். இது வைக்கரீ ஓசை, என் இதயத்தின் மத்யமா வடிவத்தில் பெயர் இருக்கிறது. மத்யமாவில் இருந்து வைக்கரீ தோன்றியது. உங்கள் காதில் வந்து விழுந்தது. உங்கள் இதயத்தில் இருக்கும் பெயரைத் தட்டி எழுப்பிற்று. இப்போது தான் உரையாடல் நடக்கிறது. பகவானே புரிய வைப்பார் என்று அவரிடம் விட்டு விடுகிறோம்.

ஓசைகளின் மத்யமா வடிவம் தான் மந்திரங்களின் அடிப்படை ஆகும். இதைத்தான் மந்திர தரிசனம் என்று கூறுகிறோம். அங்கு போய்ச் சேர்ந்தால் மந்திர தரிசனம் நடக்கிறது. ஜபம் செய்து மனம் சூக்குமத் தன்மையை அடைகிறது. அப்போது உணர்ச்சி வடிவில் விளங்குகின்ற மந்திரங்களைப் பார்க்கிறோம். வைக்கரீ ஓசையின் வேரில் எந்த உணர்ச்சி இருக்கிறதோ, அந்த உணர்ச்சியின் பின்னணி வரை நீங்கள் போய்ச் சேர்ந்தால் உங்களையும், **மந்திர த்ரஷ்டா** (மந்திரத்தைக் கண்டுபிடித்தவர்) என்று சொல்லலாம். மத்யமா என்பது எழுத்துக்களை ஒன்றுகூட்டி பா+னை, இப்படியான பெயர் இல்லை. ஒன்றேயான, கண்ணுக்குப் புலப்படாத பெயர் ஆகும். தோன்றா நிலையில் பெயர் அங்கு விளங்குகிறது.

பத்து பானைகள் இருக்கின்றன என்று எப்படிப் புரிந்து கொள்வது? பத்து பானைகள் எதனால் செய்தவை? மண்ணினால் செய்தவை? மண்ணில் இருந்து இத்தனை வடிவங்கள் வெளித் தோன்றுகின்றன. சில பெரியவை, சில சிறியவை, சில நீண்டவை, சில கோணலானவை. ஆனால் களிமண் என்பது ஒன்று தான். இதேபோல பானை என்று சுருக்கிச் சொன்னாலும் பாாானை என்று நீட்டிச் சொன்னாலும் பொருள் ஒன்று. இவை அனைத்தும் வைக்கரீ வடிவம் எடுத்து வருகின்றன. எல்லாவற்றுக்கும் உள்ளே மூலப் பொருளாக விளங்குவது மத்யமா தான். ஒரே பானை என்ற சொல் ஓசையை நாம் பத்து விதங்களில் உச்சரித்தோம். நாம் அர்த்தத்தை, சொற்பொருளை உச்சரிப்பது இல்லை. சொல் ஓசையைத் தான் உச்சரிக்கிறோம். பானை என்ற அர்த்தத்தை, பொருளைப் புரிய வைக்கும் சக்தி எந்த ஒலியில் இருக்கிறதோ அதைப்பற்றிப் பேசிக் கொண்டிருக்கிறோம். ஒரே சொல்லை பத்து பேர் தனித்தனிக் குரலில் சொன்னார்கள். ஒலியில் பெருத்த வேறுபாடு இருக்கிறது. ஒலி தான் பொருளின் பெயரா அல்லது ஒலிக்குள்ளே ஏதோ இருக்கிறதே அது பெயரா? இதைப் புரிந்து கொள்ள வேண்டும். நம்மிடத்தில் மண் இருக்கிறது. அந்த மண்ணைப் பிசைந்து மெலிதான சுவருடன் கூடிய பெரிய குடிசை ஒன்று கட்டினோம். பிறகு அதை உடைத்து அதே மண்ணில் இருந்து ஒரு சிறிய குடிசையை தடித்த சுவருடன் கட்டினோம். இரண்டு வெவ்வேறு குடிசைகள். மண் ஒன்று தான். இதேபோல பத்து விதமான பானைகள் ஆனாலும் மண் ஒன்று தான். பானை என்ற பொருளின் பெயர், பானை என்ற பொருளை வெளிப்படுத்துவது, அந்தப் பெயர் நமக்குள் மண் வடிவத்தில் இருக்கிறது. அது ஒன்றே ஆகும். நாம் வேகமாகப் பேசினால் ஒலியில் வேறுபாடு தோன்றலாம். வடிவம் வேறு ஆகலாம், பத்து தொண்டைகளில் இருந்து பத்து ஒலிகள் தோன்றலாம். பத்து விதமான, ஓசையில் அந்த அர்த்தத்தைப் புரிய வைக்கும் சக்தி இருக்கிறது. அதுவே உண்மையான சக்தி ஆகும்.



# ஓம்

**பேராசிரியர் சி.எஸ். மஹாதேவன்**

**முன்னுரை:** புனிதர் சுவாமி சச்சிதானந்தாஜி (யோகவில்ல) அண்மையில் கூறினார். ஹிமாலயப் பகுதிகளில் அடிக்கடி ஓம் ஓசை கேட்கின்றது; ஹிமயமலையின் பகுதி ஒவ்வொன்றும் ஓம்–இனை உச்சரிக்கிறது. நதி ஓம் என்கின்றது; காட்டு விலங்குகளும் ஓம் என்று கர்ஜிக்கின்றன. எல்லா இடங்களிலும் ஓம் ஓசையை நீங்கள் கேட்க முடியும்; உங்கள் உடலின் ஒவ்வொரு திசுவிலும் ஓம் எனும் அதிர்வு காணக் கிடைக்கிறது. உங்களை உடல் மன அமைப்பில் ஒரு சிறப்பான தாளக்கட்டினை ஓம் உண்டாக்குகின்றது. நீங்கள் ஆனந்த நிலைக்குப் போகின்றீர்கள்.

ஸ்ரீமத் சுவாமிகள் அண்மையில் ஒரு கருத்தை வற்புறுத்தி கூறினார். இறைவனை அடைவதற்கான இறை ரகசியப் பாதைகள் யாவிலும் மிக எளியது. மிகுந்த நாடகத்தன்மை வாய்ந்தது. சரியாகப் புரிந்து கொண்டால் ஓம் தான் பேரற்புதமானது; ஆன்மாவானது மானுடக்குரலில் தங்கி இருந்து, ஓம் எனும் ஓசையை நாம் எழுப்பும்போது, மேலே எழுந்து பறக்கிறது; உலகியல் தடைகளைத் தாண்டிச் செல்கின்றது; உலகாயதத் தடைகளின் வடிவமும், பொருளும் 'ஓம்' என்று நாம் உச்சரித்த உடன் நலிவுற்று விலகிப் போய்விடுகின்றன. ஸ்வர்க்கமயமான இசையின் இனிய நிறைவு எப்போது கிட்டும் நமக்கு? இப்பிரபஞ்சம் முழுவதும் ஓம் என்று அதிர்வதை உணரும்போது கிட்டும்! அந்த ஓம் ஓசைக்கு எதிரொலி எதுவும் இருக்காது! இந்தச் சொல்லில் இருந்து தான் தேவர்களும் தோன்றினர் என்றும், உலகமே அதில் இருந்து தான் தோன்றிற்று என்றும் கூறுவதும் சரியாக இருக்கும். அதுவே இறுதியான படைப்பாளி என்று ஹிந்துக்கள் கருதுகின்றனர். அதன் ஓசையினை ஹிந்துக்கள் பரம்பொருளாகக் காணுகின்றனர்.

**அனைத்திலும் பரவி நிற்பது; அனைத்தையும் கடந்து நிற்பது அனைத்துள்ளும் இருப்பது:** ஓம் தெய்வீகமானது, அனைத்திலும் அது பரவி நிற்கின்றது; அது அனைத்தையும் கடந்தும், அனைத்தின் உள்ளும் இருப்பது. ஹிந்து தர்மம் இப்பிரபஞ்சப் படைப்பு முழுவதையும் ஒன்றாகக் காண்கின்றது; ஒரே துடிப்புடைய அலகாக (யூனிட்டாக)ப் பார்க்கின்றது. ஓம் ஓசையின் அதிர்வுகளில் இருந்து உண்டாக்கப்பட்டதாகப் பார்க்கின்றது. ஹிந்துக்கள் கூறுகின்றனர். ஓம் என்பது புலன்களால் அறியப்படாத ஆதாரத் தத்துவம் ஆகும். அதில் இருந்து தான் புலன்படு பொருள்கள் தோன்றின. சில அலைத்துளிகள் தற்காலிகமாக, வெவ்வேறு இடங்களில் மையப்புள்ளிகளைச் சுற்றித் திரண்டபோது புலன்படு பொருள்கள் தோன்றின. ஓம் என்பது பிரம்மமே. ஓம்

உலகளாவியது. ஓம் என்பது ஆங்காங்கே திரளுவதும் கலைவதுமாக உள்ளது. இப்பணி தொடர்ந்து நடக்கிறது. இதனை நாம் உயிர் என்கின்றோம். உயிருக்கு ஒரு திறமை உள்ளது. ஓம்-இனை சிறிய அளவில் நகல் எடுக்க உயிரால் முடியும். அதுதான் மனிதக்குரல் அதனால் தான் மனிதக்குரலுக்கு இத்தகைய கவர்ச்சி இருக்கின்றது. அதாவது, படைப்பளாவிய பிரம்மத்தின் சின்னஞ்சிறிய தோற்றம் தான், அற்புதத் தோற்றம் தான் மனிதன்!

ஓம் என்பதன் உயிர்ச்சக்தி ஊடுருவி நிற்கிறவரை தான் மனிதனும் மனிதப் பண்பாடும் மதிப்புக்குரியவை ஆகின்றன. இதுதான் புலன்படு உலகிற்கும், அதற்கு அடிப்படையான புலன் தாண்டிய அதீத உலகுக்கும் உள்ள உண்மையான தொடர்பு ஓம் தான். பருப்பொருளுக்கும், ஆத்மாவுக்கும் உள்ள தொடர்பு ஓம் தான். இந்தத் தொடர்பு அறுந்து போய்விட்டால் என்ன ஆகும்? பருப்பொருள் மேலும் மேலும் உயிரற்ற வெறும் பருப்பொருள் ஆகிவிடும். இவ்விதம் ஓம்-க்குப் பருப்பொருள் தன்மையும் உண்டு; ஆன்மீகத் தன்மையும் உண்டு. ஓம் ஆன்மீகத் தன்மை கொண்டு திகழ்கிறது. பருப்பொருள் ஓம் மனிதக்குரலில் தோன்றுவது. காதால் கேட்கப்படும் ஓம், ஆன்மீகமயமான ஓமில் போய் இணைந்து மறைகின்றது.

ஓம் என்பது வெளியில் தோன்றும் உலகுக்கும், உண்மை உலகுக்கும் இணைப்பாகப் பணிபுரிகிறது. ஓம் என்பதே ஒரு புறந்தோன்றும் புலனறிவுதான். இல்லாவிட்டால் மனிதர்கட்கு அப்பாற்பட்டதாக அது போய்விடுமே! இந்த இறைரகசியமான புலன்படு பொருளை நாம் எங்கே காண்பது? மனிதக்குரல் எழுப்பிய முதல் ஓசை ஓம் தான். பழங்காலத்தில் மனிதர்கள் தூயவர்களாக இருந்தார்கள். முனிவர்களாக இருந்தார்கள். அக்காலத்தில் இறைவன் பற்றிய ரகசியம் எதுவும் இல்லை. ஆனால் நாம் நம் தூய்மையை இழந்தோம். தேவைகள், ஆசைகளை அதிகரித்துக் கொண்டோம். இறை ரகசிய ஓம்-இன் முக்கியத்துவத்தை மறந்தோம்.

கிறிஸ்தவ மறையின் முதல் வரிகளில் வருகின்றது. முதலில் சொல் இருந்தது. சொல் இறைவனாயிற்று. இச்சொற்கள் இந்து தத்துவத்தை எதிரொலிக்கின்றவை? இக்கருத்து இம்மறைக்கு முந்தியதாகும். ஓம் கிறிஸ்தவ மதத்திற்கு ஹிந்து மதத்தில் இருந்து, இந்தியாவில் இருந்து வந்ததா?

மூலச்சொல்லான அ-உ-ம எனும் இறைரகசியச் சொல்தான் ஓம் என்றாகிவிட்டது. அது மிகுந்த சக்தி வாய்ந்தது; ஹிந்து சமயச் சிந்தனையின் வீச்சு முழுவதையும் பரப்பளவு முழுவதையும் சாரமாக ஓம் தன்னுள் கொண்டுள்ளது. சாஸ்திரக் கட்டளைப்படி ஓம்-இனைச் சரியாக ஓதினால் ஓம்-க்கு அசாதாரணமான ஆன்மீகச் சக்திகள் உண்டு. அடிப்படையான குரல் ஓசைகளான அ, உ, ம என்பனவற்றை வரிசையாகச் சொல்லும்போது இறை ரகசிய ஓசையான ஓம் உண்டாகும் என்று சாத்திரங்கள் நிச்சயமாகக் கூறுகின்றன.

# நசிகேதமன்றம்

அருப்புக்கோட்டை, தேவாங்கர் கலைக் கல்லூரி மாணவர்கள்


**1677) கூட்டுக் குடும்பச் சிதைவிற்குக் காரணம் சூழ்நிலையா? சுயநலமா? விளக்கவும்?**

பாரதநாட்டைப் பொறுத்தவரை கூட்டுக் குடும்பம் பலப்பல விதங்களில் உயிர் தப்பிப் பிழைத்திருக்கிறது. சுயநலமும், தொழில் மயமாவதும் மேற்கத்தையத் தாக்கமும் காரணங்களாக இருக்கும். ஆனால் நிறையப் பெண்கள் வேலைக்குப் போகும்போது, குடும்பத்தைப் பார்த்துக் கொள்ள மாமியாரும் உடன் இருந்தால் சவுகரியம் என்று எண்ணும் போக்குப் புத்துயிர் பெற்றிருக்கிறது.

ற்றி. ராதா, அனந்தமங்கலம், கன்னியாகுமரி மாவட்டம்

**1678) முருகனுக்கு வேலவன் என்று பெயர் வரக்காரணம் என்ன?**

தெய்வத் திருமேனிகளை அவை அமர்ந்திருக்கும் விதம், உடை, உடன் இருக்கும் வாகனம், கையில் இருக்கும் ஆயுதம், முதலிய அடையாளங்களைக் கொண்டு புரிந்து கொள்வது நம் பண்பாட்டில் வழக்கம் ஆகும். சிவனுக்கு திரிசூலம், ராமனுக்கு வில், திருமாலுக்கு சங்கு, சக்கரம், இப்படி. முருகனின் அடையாளமாக அசுரர்களை வதைக்க பராசக்தி வேலாயுதத்தைக் கொடுத்தாள். அந்தத்தலம் நாகப்பட்டிணம் மாவட்டத்தில் சிக்கல் என்ற ஊரில் உள்ளது. வேல் வாங்கும் விழா மிகப்பெரிய திருவிழாவாகக் கொண்டாடப்படுகிறது. முருகப்பெருமானின் அவதாரப் பணியை ஆற்ற வேல் உதவியதால் வேல்-ஐ முருகப் பெருமானின் வடிவமாகவே வைத்து வணங்குகிறோம். முருகன் கோவில் கட்டும் முன் முதலில் அங்கு வேல்-ஐ நிலை நிறுத்தி படிப்படியாக கோவிலை எழுப்பி நிறைவு செய்வர்.



போத்தி ஆச்சி, ஏட்டரம்பட்டி, திருநெல்வேலி மாவட்டம்

## 1679) பெண்கள் எதற்காகக் கையில் வளையல் அணிகிறார்கள்?

உடல் முழுவதும் பரவி இருக்கும் நாடிகள் என்னும் பிராண வாயுக் குழாய்கள் தங்கள் துடிப்பினைத் தெளிவாகக் காட்டுவது இதயத்திலும், மணிக்கட்டிலும் ஆகும். ஆகவே மருத்துவர்கள் இதயத் துடிப்பையும், நாடித் துடிப்பையும் பார்த்து நோய் நிர்ணயம் செய்கிறார்கள். ஆகையால் இப்பகுதிகளை உறையிடுவது போல் பாதுகாக்கும் வழக்கம் உண்டு. சங்கிலியிலோ, நூலிலோ, மாலையிலோ பதக்கம் இதயப் பகுதியைப் பாதுகாக்கும்படி அணிந்து கொள்வார்கள். வளையல், காப்புக்கயிறு ஆகியவற்றை மணிக்கட்டைப் பாதுகாக்கும்படி அணிந்து கொள்வார்கள். ஆண்களும், தோடா என்ற ஆபரணத்தை அணிந்து கொள்வது உண்டு. மற்ற நாட்களில் இந்த மாதிரிக் காப்பினை அணிந்து கொள்ளாதவர்கள் கூட கோவில் திருவிழா, வீட்டுத் திருமணம், புனிதச் சடங்கு ஆகியவற்றின் போது காப்பு அணிவது உண்டு. டென்னிஸ் வீரர்களும் கைப்பலம் கொடுக்க மணிக்கட்டில் ஒரு பட்டையைச் சுற்றிக் கொள்வது உண்டு. சீக்கிய மதத்திலும், கடா என்ற பெயரில் காப்பு கையில் அணிந்து கொள்ளும் பழக்கம் உண்டு. மணிக்கட்டைப் பாதுகாப்பது ஒரு அலங்காரமாக, வளையலாக ஆகிவிட்டது.



சி. முத்துசாமி, பாளையங்கோட்டை

## 1680) தத்துவ அறிஞரான ஹெகல் தன்னுடைய தர்க்க முறையான முரணியக்க முறை (டயலெக்டிகல்) இந்தியாவில் தோன்றியது என்பதை ஏற்றுக் கொண்டார் என்றும், ஹெகல் உருவாக்கிய முரணியக்க முறையை அடிப்படையாகக் கொண்டே காரல்மார்க்ஸ் வரலாற்றை அளந்தார் என்றும் கூறுகிறார்கள். முரணியக்க முறை என்றால் என்ன? இது இந்தியாவில் தான் தோன்றியது என்றால், வேதங்களிலா, உபநிஷதங்களிலா அல்லது புராணங்களிலா எதில் இது வருகிறது?


பாரதப் பண்பாட்டில் சத்தியத்தை எதிரெதிர் வாதங்களின் விளைவாகக் கருதிப் பார்ப்பது ஈசாவாஸ்ய உபநிஷதத்தில் காணக் கிடைக்கிறது. ஆனால் இதை ஆதிசங்கரரின் வேதாந்த உரைகளில் அதிகம் பார்க்கலாம். அதைப் பின்பற்றி

எழுந்த வேதாந்த தத்துவ நூல்களிலும் எதிரெதிர் கோணங்களில் இருந்து சத்தியத்தை அணுகுவது கூறப்பட்டுள்ளது. உதாரணம் பஞ்சதசீ. மேலெழுந்தவாரியாகப் பார்க்கும் போது முரண்படுவது போல், மோதிக் கொள்வது போல் தோன்றும் சக்திகள் அடிஆழத்தில் ஒன்றாகவே இருப்பது வேதாந்தத்தின் ஆழ்ந்த தரிசனம் ஆகும்.

'தான்' அறக்கட்டளை

### 1681) வளர்ச்சிப் பணி என்பது முற்றிலும் அரசின் பொறுப்பு தானே? ஏன் தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் அப்பணியைச் செய்ய வேண்டும்?

அரசு என்பது எங்கிருந்தோ கொண்டு வந்து சமுதாயத்தின் மீது திணிக்கப்பட்ட ஒரு கட்டமைப்பு அல்ல. ஒரு தேச மக்களின் பண்பாடு, வரலாறு, லட்சியங்கள், பழக்கவழக்கங்கள் இவற்றைப் பொதுமைப்படுத்தி அவர்களுடைய வாழ்க்கை லட்சியங்களுக்கு உந்துதல் தரும் சட்ட வடிவத்தினை நிறைவேற்றுவதே அரசின் பணி ஆகும். துரதிருஷ்டவசமாக தொழில்புரட்சியை அடுத்து மக்களாட்சி, மேற்கு நாடுகளில் பரவியபோது சமுதாயம் செய்ய வேண்டிய பல பணிகளை அரசு இழுத்து தன் மேல் போட்டுக் கொண்டது. எக்காரியத்தையும், தன்னார்வத் தொண்டர்கள் செய்தால் அதில் உற்சாகம் இருக்கும். எளிமை இருக்கும். இதயம் கலந்த அன்பு இருக்கும். செயல் திறமை இருக்கும். கலை அழகு இருக்கும். இவற்றை அரசினால் ஓரளவுக்குத்தான் செய்து காட்ட முடியும். தொழில்புரட்சியின் ஆரம்பகாலத்தில் முதலாளித்துவ அரசுகளும், கம்யூனிச அரசுகளும் நலத்திட்டங்கள் அனைத்தையும் சமுதாயத்தின் கையில் இருந்து பிடுங்கி, தங்கள் கையில் எடுத்துக் கொண்டன. வேலையும் நடக்கவில்லை. செலவும் அதிகமாயிற்று. அதனால் சில கடமைகளையாவது மக்களிடையே திரும்பவும் ஒப்படைத்துவிட வேண்டும் என்ற புத்தி அரசுகளுக்கு வர ஆரம்பித்து விட்டது. இவற்றில் நம்பிக்கை இல்லாத பல கொள்கைகளும், கட்சிகளும் நலத்திட்ட அரசுகளையே வற்புறுத்துகின்றன. இதனால் மக்கள் அனைத்துக்கும் அரசையே சார்ந்து நின்று கையால் ஆகாதவர்களாக மாறி விடுகிறார்கள். கொள்கைப் பிடிப்பு



கொண்ட அரசுகளால் உற்பத்தியைப் பெருக்கி மக்களுக்குச் சோறு போட முடியவில்லை. இத்தகைய கொள்கைப் பிடிப்பு கொண்ட அரசுகள் இரண்டு மூன்று தலைமுறைக்குள் தங்கள் கொள்கைகளையெல்லாம் காலைவாரி விட்டு விட்டு எப்படியாவது தங்கள் மக்களுக்குச் சோறு போட்டால் போதும் என்ற நிர்ப்பந்தத்திற்கு தள்ளப்பட்டன. சீனத்தலைவராகிய டெங்சியாவோபிங் **என் பூனை எலியைப் பிடித்தால் போதும். பூனையின் நிறம் என்னவென்று நான் கவலைப்பட மாட்டேன்** என்று கூறினார். இன்று உலகம் முழுவதும் அரசுகள் நலத்திட்டப் பணிகளின் பொருளாதாரச் சுமைகளில் இருந்து எப்படி வெளிவரலாம் என்று தவித்துக் கொண்டிருக்கின்றன. மக்களின் சுய மரியாதை, சுயசார்பு இவற்றுக்கு வடிவம் கொடுப்பது சட்டப்பூர்வமான அரசைக் காட்டிலும் சிறிய அளவிலான தன்னார்வத் தொண்டு நிறுவனங்களில் எளிதாக நடக்கும். பெரிய அளவில் பார்த்தாலும் பிளாட்டோ என்ற கிரேக்க விஞ்ஞானி, எந்த அரசு குறைவாகச் சட்டங்கள் போடுகிறதோ அதுவே தலைசிறந்த அரசு என்று கூறினார். மார்க்ஸ் அரசு என்பது வாடி உதிர்ந்து விடும் என்று அரசு தேவைப்படாத தற்சார்புச் சமுதாயத்தை வலியுறுத்தினார். சுவாமி விவேகானந்தர் சத்திய யுகத்தில் காவல்காரனே கிடையாது. எல்லோரும் தங்கள் வேலையை தானே செய்வார்கள் என்று கூறினார். இப்படி அரசின் பணியை மக்கள் தாங்களே செய்து கொண்டு புறச்சட்டங்கள் குறையும் அளவுக்கு நாட்டை முன்னேற்ற வேண்டும். இப்பணியில் துவக்கநிலை சமுதாயக் கருவிகளாக, தொண்டு நிறுவனங்கள் விளங்கும். இத்தொண்டு நிறுவனங்களும் காலப்போக்கில் சமுதாயத்தில் கரைந்து போய் காணாமல் போய்விட வேண்டும். நிறுவனப்படுத்தப்பட்டு சமுதாயத்தில் இருந்து விலகிப் போய்விடாமல் அவை எச்சரிக்கையுடன் இருக்க வேண்டும். இதுவே உலகத்தின் மாபெரும் தீர்க்கதரிசிகள் கண்டது. இப்பின்னணியில் மகத்தான சிந்தனையாளரான மனு கூறுவதைக் கேட்போம். வலுக்கட்டாயமாகக் கொடுக்கப்பட்டது, வலுக்கட்டாயமாக பிடுங்கி அனுபவிக்கப்பட்டது, வலுக்கட்டாயமாக எழுதி வாங்கப்பட்டது. இவை செய்யப்படாதவையே ஆகும் (பலன் கொடுக்காது) இந்த நடைமுறையை சமுதாயத்தில் புகுத்த தொண்டு நிறுவனங்களால் தான் இயலும்.

ஆர்.கே. லிங்கேசன், மேலகிருஷ்ணன்புதூர், கன்னியாகுமரி மாவட்டம்

## 1682) இறையுணர்வைப் பொறுத்தவரை 'தேடல்' இருந்து கொண்டே இருக்க வேண்டுமா; இல்லை இதுவே போதும் – என்ற திருப்தி நிலையில் காலச்சக்கரத்தை நகர்த்த வேண்டுமா?

இந்தக் கேள்வி பகவத்கீதையில் முழுமையாக அலசிப் பார்க்கப் பட்டுள்ளது. வினைகள், முயற்சிகள், கருமங்கள், தேடல்கள் அற்ற நிலையை விரும்பாமல் சாதகன் முயற்சியிலேயே மகிழ்ந்து இருக்க வேண்டும். **வினையற்றிருக்கவும் விரும்பாதே. முயற்சியற்ற நிலையிலும், மோட்சத்திலும், ஆசை வைக்காதே** என்று கீதை கூறுகிறது. இதற்கு வினோபாஜி தரும் விளக்கமாவது. *வாழ்க்கையினால் எய்த வேண்டிய மிகப்பெரிய பயன் மோட்சம்.*

*அம்மோட்சத்திற்கும், அந்த அகர்ம நிலைக்கும் நாம் ஆசை கொள்ளல் ஆகாது. அந்நிலை தானாகவே நமக்குத் தெரியாமலே எய்தப் பெறும். நிறைநிலை என்பது இரண்டு மணி அடித்து ஐந்து நிமிடம் ஆனதும் திடீரென நம்மிடம் வந்து சேரும் என்று சொல்லக்கூடிய ஒரு பண்டம் அன்று. நி றை நி லை இயந்திரத்தினால் இயங்கும் ஒரு பொ ரு ள ல் ல. அது உன் வாழ்க்கையில் எவ்வாறு வளர்ந்து கொண்டே போகிறது என்பது கூட உனக்குத் தெரியாது. ஆகையால் மோட்சம் பற்றிய (தேடல் நின்று போகும் நிலை பற்றிய) கவலையை விடு. இதேபோன்ற கருத்தை ஈசாவாஸ்ய உபநிஷதத்தின் இரண்டாவது மந்திரமும் கூறுகிறது.* இப்போது பகவத்கீதையின் இப்பாடலைப் பார்ப்போம்.



கர்மண்யேவாதிகாரஸ்தே மா பலேஷு கதாசன
மா கர்மபலஹேதுர்ப்பூர்-மா தே ஸங்கோSஸ்த்-வகர்மணி

'வினையே புரிதல் உன்கடனாய்க் கொள்
பலனில் உரிமை உனக்கில்லை
வினைப்பயன் நல்கும் ஏதுவும் நீயல
வினையற்றிருக்கவும் விரும்பாதே.' பகவத்கீதை 2/47

முயற்சி செய்பவன் எப்போது இந்த முயற்சி முடியும், நின்று போகும் என்று எண்ணிக் கொண்டே இருந்தால் அவன் அந்த முயற்சியை ரசித்து இன்பத்துடன் செய்யவில்லை என்று பொருள்.

யோக முகாம் உறுப்பினர்

## 1683) ஞான யோகத்தை பிற யோக நெறிகளோடு இணைத்துப் பயில முடியுமா?

ஞான யோகம் தன்னளவிலே நிறைவானது தான் என்றாலும் ராஜயோகம், கருமயோகம், பக்தியோகம் ஆகியவை ஞான யோகத்திற்கு முன் தயாரிப்பாக உதவி செய்ய முடியும். ராஜயோகத்தினால் மனவுறுதி அதிகரிக்கிறது. மனம் குவிந்து கூர்மை அடைவது அதிகரிக்கிறது. பக்தியோகத்தினால் அன்பு பெருகுகிறது. கருமயோகத்தினால் செயல் திறமையும், மனக்கூர்மையும் உருவாகின்றன. இவையெல்லாம் ஞானயோகத்திற்கு உதவக்கூடிய நல்ல

கருவிகள் ஆகும். ஞானம் பெற்ற பின்பும் அது நிலைத்து இருக்க ராஜயோகம் உதவும். பிறரிடம் அறிவுகலந்த அன்பு காட்ட பக்தியோகம் உதவி செய்யும். சமுதாயத்திற்குத் தொண்டு புரிய கருமயோகம் பயன்படும்.

வி. ராஜகுமாரி, பேயன்குழி, கன்னியாகுமரி மாவட்டம்


## 1684) சிவராத்திரி அன்று நாம் விழித்து இருப்பதால் நமக்கு என்ன பயன் கிடைக்கும் ?



தூக்கத்தை வெல்லுவது மனவுறுதிக்கு உதவும் ஒரு பயிற்சி ஆகும். இதை நன்கு பயில வேண்டும் என்பதற்காக வருடத்தில் ஒரு நாளாவது இரவு முழுவதும் விழித்து இருக்க வேண்டுமென்று விரதம் வைத்து இருக்கிறார்கள். தூக்கத்தை வென்றவர், எப்போதும் விழிப்புணர்வுடன் இருப்பவர், நிறைந்த திருப்தியும், மனமகிழ்ச்சியும், அறிவுக்கூர்மையும் கொண்டிருப்பார். இப்படி அர்ஜுனன் இருந்ததால் அவனுக்கு குடாகேசன் என்று பெயர்.

எஸ். ஜானகி, பெருநாழி, இராமாதபுரம் மாவட்டம்

## 1685) நந்தியின் காதுகளில் ஏன் ரகசியம் சொல்லுகிறோம்?



திரயோதசி திதி அன்று சூரியன் மறையும் வேளை பிரதோஷம் என்று சொல்லப்படும். அந்த நேரத்தில் நந்தியின் கொம்புகளுக்கு இடையில் நின்று சிவபெருமான் நடனமாடுவதாக நம்பிக்கை. அப்போது நந்தியின் காதில் சிவநாமத்தை உச்சரித்தால் நம் பிரார்த்தனை சிவபெருமானிடம் போய்ச்சேரும். தினமும் சூரியன் மறையும் வேளையிலும் இவ்வாறு செய்வதுண்டு.

எஸ். சத்யா, சண்முகபுரம், கோவில்பட்டி

## 1686) மந்திரங்கள் சொல்வதால் ஏற்படும் நன்மையைக் கூறுங்கள்?

மந்திரங்கள் உடலில் மென்மையான அதிர்வுகளை ஏற்படுத்தி உடல் நல்ல ஓய்வுணர்வு பெற உதவுகின்றன. ஒவ்வொரு மந்திரத்தையும் அதை முதலில் சொன்ன ரிஷி, அதற்குரிய யாப்பு இலக்கணம், அதற்குரிய தேவதை

இவற்றை நினைத்து வழிபட வேண்டும். அதனால் ஆழ்மனத்தில் அம்மந்திரம் நன்கு பதிகிறது. என்னென்ன நன்மைகளைக் குறித்து அம்மந்திரத்தை ஓதுகிறோமோ அவை விரைந்து கிடைக்க வழி கிட்டுகிறது. உடலில் பிராண சக்தியின் ஓட்டம் இடையறாமல் நடக்க வழி திறக்கிறது. இதனால் மனத்தின் ஆரோக்கியமும், உடல் நலமும் பெருகுகின்றன. மந்திரத்தால் தெய்வக் காட்சி சுலபமாக எட்டுகிறது. இப்படி மந்திரம் பல நன்மைகளை நமக்குத் தருகிறது.

## கண் பரிசோதனை முகாம்

விவேகானந்தபுரம் அவைக்கூடம்

மருத்துவ உதவி: திருநெல்வேலி அரவிந்த் கண் மருத்துவமனை

| மாதம் | வெளி நோயாளிகள் | மறுசோதனை | அறுவைச் சிகிச்சைக்குப் பரிந்துரைக்கப் பட்டவர்கள் | அறுவைச் சிகிச்சைக்குச் சென்றவர்கள் | ரிப்ராக்ஷன் |
|---|---|---|---|---|---|
| நவம்பர் | 143 | 47 | 58 | 33 | 62 |
| டிசம்பர் | 104 | 34 | 40 | 38 | 40 |
| ஜனவரி | 155 | 35 | 54 | 54 | 33 |
| பிப்ரவரி | 146 | 48 | 42 | 42 | 35 |
| மார்ச் | 158 | 38 | 44 | 36 | 35 |

நவம்பர் – 2010 நிதி உதவி: மும்பை திரு. ஹெச். நாராயணன் குடும்பம்

டிசம்பர் நிதி உதவி : கன்னியாகுமரி சுழற்சங்கம்

ஜனவரி – 2011 நிதி உதவி: நாகர்கோவில் சுதர்சன் புக்ஸ்

பிப்ரவரி நிதி உதவி: இந்தியன் ஓவர்சீஸ் பேங்க், ரீஜினல் அலுவலகம், வெட்டூர்ணிமடம், நாகர்கோவில்

மார்ச் நிதி உதவி : குமாரி எஸ். காயத்ரீ குடும்பம், திருவனந்தபுரம்

## *பிழை திருத்தம்*

மார்ச் 2011 விவேகவாணி இதழில் 48-ம் பக்க மேல்படத் தலைப்பு ‘‘சவால்களை எதிர் கொள்ளும் பாரதம்’’ என்றிருக்க வேண்டும்.

வினோபாஜி கூறியது

## 1690) நாதம் விளங்கவேண்டும் என்றால் நாதனைச் சரண் அடையுங்கள்



இவன் என் அருகிலிருப்பவன், அவன் தொலைவிலிருப்பவன், இவன் என்னைச் சேர்ந்தவன், அவன் அந்நியன் என்ற இவ்வெண்ணங்கள் மனத்திலெழுந்து சில சந்தர்ப்பங்களில் நம்மைக் கடமையிலிருந்து வழுவத் தூண்டுவதற்குக் காரணம் மோகமே. இம்மோகத்திற்குத் தப்பவேண்டுமெனில், அந்த சிருஷ்டி கர்த்தாவின் விரல்களது அற்புதத் திறமையின் இரகசியத்தை அறிந்து கொள்ள வேண்டும். 'பிருஹதாரண்யக உபநிடத'த்தில் பேரிகை உதாரணமாய்க் கூறப்பட்டிருக்கிறது. ஒரே பேரிகையிலிருந்து வெவ்வேறு நாதங்கள் எழுகின்றன. சிலவற்றைக் கேட்க எனக்கு நடுக்கமாகிறது; சிலவற்றைக் கேட்டதும் துள்ளி எழுகிறேன். இந்த எல்லா பாவங்களையும் வெல்ல வேண்டுமானால் நாம் பேரிகை வாசிப்பவனைக் கையில் போட்டுக் கொள்ள வேண்டும். அவன் நம் வயமானதும் எல்லா நாதங்களும் நமக்குக் கட்டுப்பட்டு விடும். பகவான் ஒரே வாக்கியத்தில், ''மாயையைக் கடக்க விரும்புவோர் என்னிடம் சரண் புகுவாராக'' என்று சொல்லுகிறார்.

''என்னையே சரண்புக்கவர் மாயலீலையின் கையில் சிக்கிடார்.''

ஏக்நாத்ஜி கூறியது

## 1691) நீயோர் கருவி என்றே பணிபுரி


சேவை என்பதுதான் என்ன? கடவுளிடம் பூரணமான சரணாகதி மனப்பான்மையுடன் செய்யும் சேவையே உன்னதமானது, மெச்சத் தகுந்தது. ''அவன் எனக்கு எல்லாவிதமான வசதிகளையும் அளித்துள்ளான். அவ்விதம் அளித்துள்ள ஒவ்வொரு துளி சக்தி, அறிவு, பலம் மற்றும் எல்லாவகையான உடமைகளையும் என்னுடைய முழுத்திறமைக்கேற்ற வகையில் என் ஆத்ம திருப்திக்கெனவே பயன்படுத்த வேண்டும். அவன் உலகம் மேம்பாடு அடைய வேண்டும் என விரும்புகிறான். அவனுடைய திட்டத்தை நடத்திக் கொடுக்கும் பணியினில் நான் ஒரு அங்கத்தை ஏற்று அவனுடைய கரங்களின் துணை கொண்டு இயங்கும் ஒரு கருவி மட்டுமே'' என்ற மனப்பான்மையுடன் மனிதகுலம் இயங்க வேண்டிய தன்மையைப் பற்றி ஸ்ரீமத் பகவத்கீதையில் கண்ணன் அர்ஜுனனுக்குக் கூறி வழி காட்டுகிறான். நாம் உலகமாகிய பயிற்சி சாலையில் நம் பங்கைத் திறமையாக உற்சாகத்துடன் ஆற்ற வேண்டியுள்ளது. இதற்கு நல்ல எடுத்துக்காட்டாக ஆஸ்பத்திரியில் பணிபுரியும் நர்சைக் குறிப்பிடலாம். அவள் எவ்வளவு அன்போடும் நேர்மையோடும் நோயாளிகளைக் கவனித்துக் கொள்கிறாள்? அவளுடைய அன்றாடக் கடமை முடிந்தவுடன் அடுத்த நர்சுக்குத் தன் வேலையை ஒப்பித்துவிட்டு ஏது பற்றுமில்லாமல் விடைபெறுகிறாள். நோயாளி குணமடைந்து வீட்டுக்குச் செல்லுகையில் அவனுடைய பிரிவு குறித்து அந்த தாதி ஏதும் உணர்ச்சி வசப்படாமல் அடுத்து வரும் நோயாளிக்கு அதேவிடக் கடமை உணர்ச்சியுடன் செயல்புரிவாள். நோயாளிக்கு வியாதி முற்றினால் அது குறித்து கவலையும் கொள்ளமாட்டாள். அல்லது அவன் இறக்க நேரிட்டாலும் வருந்தவும் மாட்டாள். ஏதும் பற்றுணர்ச்சியோ, பிடிப்போ அவளிடம் சிறிதும் இருக்காது. ஆனால் அவள் கவனக் குறைவோடோ, மனமின்றியோ தன் பணியைப் புரிகிறாள் என்று நாம் இதை கணிக்கலாகாது. அவள் தன் முழு மனதுடன் தான் நோயாளியின் தேகநலனைப் பராமரிக்கிறாள். ஆனால் இந்த விஷயங்களை அவள் பொது நோக்குடனேயே கவனிக்க வேண்டியுள்ளது. நோயுற்றவர் நம் உறவினராக இருந்து நாமே அவரை நர்சைப்போல் கவனிக்க வேண்டியிருந்தால், நமக்கு அவரிடம் பிடிப்பு உள்ளதால், அவருக்கு வியாதி கடுமையாகும் சமயத்தில் நாம் மிகவும் உணர்ச்சி வசப்பட நேரிடும். அது நோயாளியின்பால் நமக்கு உள்ள ஆழ்ந்த பிடிப்பு உணர்ச்சியினால் எழும்.

நரேந்திரவாணியில் இருந்து

## 1692) முள்ளும், மலரும்

வசந்த காலத்தில் ஒரு பூந்தோட்டத்தில் ஒரு சிவப்பு ரோஜா அழகாகப் பூத்து இருந்தது. அதைப்பார்த்த பைன் மரம் இந்தப்பூ எவ்வளவு அழகாக இருக்கிறது. நானும் அதுபோல் அழகாக இல்லையே என்று வருந்திற்று. இன்னொரு மரம் கூறிற்று. பைன் மரமே வருந்தாதே. உன்னிடம் வேறு நற்குணங்கள் இருக்கின்றன. மணமுள்ள கோந்து இருக்கிறது. ரோஜாப்பூ தலையைச் சுழற்றிப் பார்த்தது. இந்தத் தோட்டத்தில் நான் தான் எல்லோரையும்

விட அழகு. சூரியகாந்திச் செடி தன் மஞ்சள் தலையை உயர்த்தியது. பேசிற்று. ஏன் அப்படி கர்வம் கொள்கிறாய்? இத்தோட்டத்தில் அழகான மலர்கள் பல இருக்கின்றன. அவற்றில் நீயும் ஒன்று தான். ரோஜா பதில் சொல்லிற்று. எல்லோரும் என்னையே பார்க்கிறார்கள், பாராட்டுகிறார்கள். ரோஜாவின் பக்கத்தில் ஒரு சப்பாத்தி கள்ளிச் செடி வளர்ந்திருந்தது. அந்தக் கள்ளிச் செடியைப் பார். ஒரே முள்ளாக குத்துகிறதே. பைன்மரம் பதில் சொல்லிற்று. சிவப்பு ரோஜாவே ஏன் இப்படிப் பேசுகிறாய். அழகு என்றால் என்ன என்று யாரால் கூற முடியும். உன்னிடம் கூட முள் இருக்கிறது. கர்வம் கொண்ட ரோஜாப்பூவுக்குக் கோபம் வந்தது. பைன் மரமே உனக்கு நல்ல அழகுணர்வு இருக்கும் என்று நினைத்தேனே. உனக்கு அழகு என்றால் என்னவென்றே தெரியாது. கள்ளிச் செடியின் மு ட் க ளை யு ம், என்னுடைய மு ட் க ளை யு ம் ஒப்பிடலாமா? மற்ற மரங்கள் இந்த ரோஜாப் பூவுக்குத் தான் எவ்வளவு கர்வம் என்று எண்ணிக் கொண்டன. ரோஜாச் செடி தன் வேர்களைச் சுருட்டிக் கொண்டு கள்ளிச் செடியில் இருந்து தொலைவில் போய்விட முயன்றது. ஆனால் அதனால் நகர முடியவில்லை. நாட்கள் செல்லச்செல்ல ரோஜாப்பூ, கள்ளிச் செடியை அவமானப்படுத்தி வசைபாடும். இந்தச் செடியால் ஒரு பயனும் இல்லையே. அதன் பக்கத்தில் நிற்கவே எனக்கு அவமானமாக இருக்கிறது என்று கூறும்.



கள்ளிச் செடிக்குக் கோபமே வரவில்லை. அது ரோஜாச் செடியைச் சமாதானப்படுத்த முயன்றது. இறைவன் எந்தவொரு உயிரினத்தையும், பயன் இல்லாமல் படைக்கவே இல்லை.

வசந்தகாலம் போயிற்று. கோடைக்காலம் வந்து விட்டது. தோட்டத்தில் வாழ்வதே கஷ்டமாகப் போய்விட்டது. செடிகளுக்கும், மிருகங்களுக்கும் தண்ணீரே கிடைக்கவில்லை. மழையும் பெய்யவில்லை. சிவப்பு ரோஜா வாடத் துவங்கியது. அப்போது சில சிட்டுக் குருவிகள் சப்பாத்திக் கள்ளிக்குள் தன் அலகுகளால் கொத்திவிட்டுப் பறந்து போவதைப் பார்த்தது. பறக்கும் குருவிகள் புத்துணர்வுடன் இருந்தன. திகைப்புற்ற சிவப்பு ரோஜா, பைன் மரத்தைக் கேட்டது. இந்தக் குருவிகள் என்ன செய்கின்றன? பைன் மரம் விளக்கம் கொடுத்தது. சிட்டுக் குருவிகள் சப்பாத்தி கள்ளிச் செடியில் இருந்து குடிதண்ணீரை உறிஞ்சிக் கொள்கின்றன. பறவைகள் கொத்தும் போது கள்ளிக்கு வலி எடுக்காதா? என்று ரோஜா கேட்டது. பைன் மரம் பதில் சொன்னது. எந்த உயிரும் துன்புறுவது கள்ளிச்

செடிக்குப் பிடிக்காது. ரோஜாச் செடி வியப்பினால் கண்களை விரித்தது. கள்ளிச் செடியில் தண்ணீர் இருக்கிறதா? பைன் மரம் சொன்னது. ஆமாம். உனக்கும் குடிதண்ணீர் வேண்டுமா? நீ கள்ளிச் செடியிடம் கேட்டுக் கொண்டால் குருவி மூலம் உனக்கும் தண்ணீர் அனுப்பி வைக்கும். சிவப்பு ரோஜாவுக்கு அவமானமாக இருந்தது. முன்பு தான் பேசிய பேச்சையெல்லாம் நினைத்துக் கொண்டது. கடைசியில் ரோஜாச் செடியும் தண்ணீர் கேட்டது. கள்ளிச் செடியும் அன்புடன் சம்மதித்தது. குருவிகள் அலகில் தண்ணீரை நிரப்பி ரோஜாச் செடியின் வேருக்கு நீர் பாய்ச்சின. இக்கதையின் நீதி: வெளித்தோற்றத்தைப் பார்த்து யாரையும் குறைத்து மதிப்பிடக் கூடாது.


நரேந்திரவாணியில் இருந்து

## 1693) தோல்வியைக் கண்டு துவளாதே

மைக்கேல் ஜோர்டான் உலகத்தின் தலைசிறந்த கூடைப்பந்து விளையாட்டு வீரர் ஆவார். அவர் கூறுவதைக் கேளுங்கள். என்னுடைய விளையாட்டு வாழ்க்கையில் ஒன்பதாயிரம் தடவைகள் நான் கூடையில் பந்தைப்போட முயற்சி செய்து தோற்றுப் போய் இருக்கிறேன். 26 தடவைகள் விளையாட்டின் முடிவைத் தீர்மானிக்கும் பந்து வீச்சை என்னிடம் நம்பிக் கொடுத்தார்கள். நான் பந்தை கூடையில் போடாமல் என் சகவீரர்களை ஏமாற்றத்திற்கு உள்ளாக்கினேன். என் வாழ்க்கையில் திரும்பத்திரும்ப பல தடவை நான் தோற்றுப் போயிருக்கிறேன். தோற்றதினால் தான் என்னால் வெற்றி பெற முடிந்தது.

நரேந்திரவாணியில் இருந்து

## 1694) அன்பில் பிறந்த நம்பிக்கை




ஒரு விமானப் பயணத்தில் சிறு இடைஞ்சல் ஏற்பட்டது. அறிவிப்பு வந்தது. உங்கள் இருக்கைவார்களை, பட்டிகளை இறுக்கிக் கட்டிக் கொள்ளுங்கள். சிறிது நேரம் கழித்து இன்னொரு அறிவிப்பு தொடர்ந்தது. இப்போது விமானம் தடதடவென்று ஆடும். அதனால் நாங்கள் குடிநீரோ, குளிர்பானங்களோ வழங்க மாட்டோம். தோல்பட்டிகளால் இருக்கையோடு சேர்த்து உங்களைக் கட்டிக் கொள்ளுங்கள். பயணிகள் பலர் பயந்து போனார்கள். விமான

அறிவிப்பாளர் கூறினார். இந்தப் பயணத்தில் உணவு வழங்கப்பட மாட்டாது. விமானம் தடதடவென்று ஆடப் போகிறது. திடீரென்று மழையும், புயலும் வந்தன. இயந்திரங்களின் ஓசையைத் தாண்டி இடி ஓசை கேட்டது. மின்னல் தெரிந்தது. சிறிது நேரத்தில் அந்த விமானம் கடலில் தூக்கி எறியப்பட்ட மரக்கட்டையைப் போன்று தத்தளித்தது. ஒருகணம் அந்த விமானம் மேலே எழுந்தது. அடுத்த கணம் கீழே விழுந்து விடுவதைப் போல உயரம் குறைந்தது. அறிவிப்பாளர் தன் அச்சத்தையும், துன்பத்தையும் வெளியிட்டார். விமானப் பயணிகள் பயந்து போனார்கள். கலவரமுற்றார்கள். புயல் மழையில் புகுந்து புறப்பட்டு வீடு போய்ச் சேருவோமா என்பதில் சந்தேகம். ஆனால் ஒரே ஒரு குழந்தை குட்டிராணி மட்டும் பயப்படவே இல்லை. அவள் தன் கால்களை மடித்து இருக்கையில் உட்கார்ந்து கொண்டு ஒரு படக் கதையைப் படித்துக் கொண்டிருந்தாள். அவளுடைய சின்னஞ்சிறு உலகத்தில் அமைதியும், ஒழுங்கும் தான் நிலவின. அவள் கண்ணை மூடுவாள். திறப்பாள். காலை நீட்டுவாள். மடித்து வைத்துக் கொள்வாள். ஆனால் கவலையோ, பயமோ அவளுக்கு கிடையாது. விமானம் மேலே எழுந்தாலும், கீழே நழுவினாலும் உடன் இருக்கும் பயணிகள் அலறுவார்கள். ஆனால் குட்டிராணியோ பயப்படாமல் அமைதியுடன் இருந்தாள். எப்படியோ விமானம் ஊர் போய் சேர்ந்தது. பயணிகள் அடித்து, பிடித்துக் கொண்டு விமானத்தில் இருந்து இறங்கி ஓடினார்கள். அறிவிப்பாளர் குட்டி ராணியைப் பார்த்து பயமே இல்லையா என்று கேட்டார். குட்டி ராணி பதில் சொன்னாள். என்னுடைய அப்பா தான் விமான ஓட்டி. அவர் என்னை எங்கள் வீட்டுக்கு அழைத்துக் கொண்டு போய் விடுவார். அதனால் எனக்கு பயமே இல்லை.

ராதாஸ்வாமி சத்சங்கத்தினர் கூறியது

## 1695) கொசுவை விரட்டிய கொள்கைச் செம்மல்கள்



ஒரு காலத்தில் கோபிசந்த் என்ற ராஜாவும், பர்த்ருஹரி என்ற ராஜாவும் அரசைத் துறந்து துறவிகளாயினர். ஆனால் மக்கள் அவர்களை விடவே இல்லை. தங்கள் அரசைத் துறந்த இத்துறவிகள் மிகுந்த புண்ணியவான்களாக இருப்பார்கள். அவர்களிடம் போய் குழந்தை வரம் பெறலாம். பணம், காசு பெறலாம். புகழ் பெறலாம். வரம் பெறலாம் என்று பாமர மக்கள் அத்துறவிகளைத் தொடர்ந்து தொந்தரவு செய்து கொண்டே இருந்தனர். அத்துறவிகள் நாம் அரசப் பதவியை விட்டு ஆன்மீக வழியில் புகுந்தாலும் பாமர மக்கள் நம்மை விடாமல் தொடர்ந்து துன்புறுத்துகிறார்களே.

இந்த ஊரை விட்டு ஓடிப் போய் தொலைவில் வாழ்வது தான் நல்லது. அவர்கள் இருவரும் அந்த நகரத்தின் கோடியில் இருந்த ஒரு குயவரின் குடிசையில் போய்த் தங்கினார்கள். தியானம் செய்தார்கள். நீண்டகாலம் அவர்களை யாரும் கண்டு கொள்ளவே இல்லை. அவர்களால் அமைதியாக தியானம் செய்ய முடிந்தது. ஆனால் மல்லிகையின் நறுமணத்தை எத்தனை காலம்தான் மறைத்து வைக்க முடியும்? விரைவிலேயே இந்தப் புண்ணிய புருஷர்களின் புகழ் ஊரெங்கும் பரவி விட்டது. அக்கம்பக்கத்து நகர மக்கள் குயவரின் குடிசையில் இருக்கும் புனிதத் துறவிகளை மறுபடியும் தொந்தரவு பண்ணத் தொடங்கினார்கள். அந்த ஊர் மன்னருக்கும் தகவல் போயிற்று. மன்னர் சொன்னார். ‘‘மந்திரியே இப்புனிதத் துறவிகளைப் போய் சந்திப்போம்.’’ அவர்கள் நாட்டில் உள்ள மக்கள் எல்லோரையுமே உசுப்பி விட்டு விட்டார்கள். மன்னரும், மந்திரியும் அரசவையினருடன் குயவரின் குடிசைப் பக்கம் நகர்ந்தார்கள். அவர்களைப் பார்த்து பிறரும் சேர்ந்து கொண்டார்கள். அவர்கள் குடிசையில் வந்து சேருவதற்குள் ஊரே தொடர்ந்து அவர்களோடு சேர்ந்து கொண்டது.

வெளியே எழுந்த ஓசையைக் கேட்ட கோபிசந்தும், பர்த்ருஹரியும் தம்முள் கலந்து பேசினார்கள். நாம் இழந்த தனிமையையும், அமைதியையும் திரும்ப எப்படிப் பெறுவது? எப்படியாவது இந்தக் கொசுக்களை விரட்டி அடிக்க வேண்டும் என்று இருவரும் பேசிக் கொண்டார்கள். இதற்குள் மன்னரும், மக்களும் குடிசைக்கு முன்னால் உட்கார்ந்து கொண்டார்கள். துறவியர் இருவரும் வெளியே வந்து ஆன்மீக உபதேசம் தருவதற்காக அவர்கள் காத்துக் கொண்டிருந்தார்கள். கோபிசந்தும், பர்த்ருஹரியும் தயாராகி குடிசையை விட்டு வெளியே வந்தார்கள். அவர்கள் கண்களில் போலிப் பகைமை நெருப்பென எரிந்தது. கோபிசந்த் கூறினார். இன்றைக்குப் பிச்சை எடுக்க நான் போவேன்.

பர்த்ருஹரி பதில் சொன்னார். ஓகோ, இதுதான் உங்கள் திட்டமா? உங்களுக்கு நினைவூட்டுகிறேன். நேற்று நீங்கள் பிச்சை எடுக்கப் போனீர்கள். கிடைத்த மிட்டாய் எல்லாவற்றையும் நீங்களே தின்று தீர்த்து விட்டீர்கள். எனக்கு ஒன்றுமே கிடைக்க வில்லை. ஒரு நிமிடத்திற்குள் அவ்விருவரும் ஒருவரோடு ஒருவர் சண்டை போடத் துவங்கி விட்டனர். மன்னர் வெறுப்புற்றார். இவர்கள் என்ன துறவிகள்! உணவுக்காக நாய்களைப் போல் சண்டை போடுகிறார்களே. எல்லோரும் வாருங்கள். இவர்களை விட்டு விலகிச் செல்வோம்.

இவ்வாறு சொல்லிவிட்டு மன்னரும் அரசவையினரும், போர்வீரர்களும், பொதுமக்களும் அந்த இடத்தை விட்டு அகன்றார்கள். கோபிசந்தும், பர்த்ருஹரியும் நிம்மதியாகப் பெருமூச்சு விட்டார்கள். கடவுளுக்கு நன்றி சொல்வோம். கொசுக்களை விரட்டியாயிற்று. இப்போது அமைதியுடன் பகவானை பக்தி செய்வோம்.

## 1696) தெரிந்தது போல் காட்டிக் கொள்ளாதீர்கள்

திருவாளர் திறந்த வெளியப்பர் தன் சீடர்களின் போலித்தனத்தை ஒழித்துக் கட்ட விரும்பினார். சீடர்களிடம் ஆளுக்கு ஒரு காகிதத்தைக் கொடுத்து இந்த மண்டபத்தின் நீளம் என்னவென்று எழுதுங்கள் என்று சொன்னார். சீடர்கள் ஒவ்வொருவரும் முழு எண்ணிக்கையாக 50 மீட்டர், 20 மீட்டர் என்று எழுதினார்கள். சிலர் கிட்டத்தட்ட என்ற சொற்றொடரைச் சேர்த்தார்கள். திருவாளர் திறந்த வெளியப்பர் அறிவித்தார். யார் எழுதிய பதிலும் சரியில்லை. சீடர்கள் கேட்டார்கள். சரியான பதில் என்ன? திருவாளர் பதில் சொன்னார். எனக்குத் தெரியாது என்பது தான் சரியான பதில்.

## 1697) உண்மையா, உரத்தக் குரலா?

ஒரு பேரணியில் சீடன் சிங்கக்குரலோன் எழுச்சி உரை ஒன்று ஆற்றினான். குருநாதரைப் பார்த்து என் பேச்சு எப்படி இருந்தது என்று கேட்டான். குருநாதர் பதில் கேள்வி கேட்டார். நீ கூறியது உண்மை என்றால் இவ்வளவு உரத்து சத்தம் போட வேண்டிய தேவை என்ன? பிறகு குருநாதர் சீடர்களிடம் எடுத்துரைத்தார். சத்தியத்தைப் பரிந்துரை செய்து பாதுகாப்பவர்களின் இரைச்சலால் சத்தியம் நஷ்டப்படுவது அதிகம். எதிரிகளின் தாக்குதலால் சத்தியம் நஷ்டப்படுவது குறைவு.

ஜே.பி. வாஸ்வானி கூறியது

## 1698) யார் பார்த்துக் கொள்கிறார்கள்

தாஹிர் என்பவர் ஒரு மன்னரின் சேவையில் உயர் அதிகாரியாகப் பணியாற்றி வந்தார். அவர் மனத்தில் செல்வத்தையும், அதிகாரத்தையும் துறந்து விட்டு இறைவனைத் தேடும் ஆசை எழுந்தது. இவையெல்லாம் என் பாதையில் இடைஞ்சல்கள். என் ஆத்மாவுக்கு விலங்குகள். என்னைக் கட்டிப் போடும் சங்கிலிகள்! இவற்றை உடைத்து அனைத்தையும் நான் துறக்க வேண்டும். இவ்வாறு அவர் தனக்குத் தானே சொல்லிக் கொள்வார். ஆனால் அவரை எதுவோ பிடித்துப் பின்னால் இழுத்தது. நீ அதிகாரத்தையும், சொத்தையும் துறந்து விட்டால் உனக்குத் தினம் தினம் யார் உணவு இடுவார்கள்? நீ எப்படி வாழ்வாய்?

ஒருநாள் தாஹிர் தன் உணவறையில் உட்கார்ந்து சாப்பிட்டுக் கொண்டிருந்தார். ஒரு பூனை அங்கு நுழைந்தது. தாஹிர் ஒரு ரொட்டித் துண்டை எடுத்து அதனிடம் வீசினார். பூனை அதை வாயில் கவ்விக் கொண்டு அறையை விட்டு வெளியே போயிற்று. சிறிது நேரம் அந்தப் பூனை திரும்பி வந்தது. கெஞ்சும் கண்களால் தாஹிரைப் பார்த்தது. தாஹிர் இன்னொரு ரொட்டித் துண்டை வீசி எறிந்தார். இதையும் வாயில் கவ்விக் கொண்டு பூனை வெளியே போயிற்று. இப்படி ஆறு, ஏழு தடவைகள் நடந்தன.

தாஹிருக்கு வியப்பாக இருந்தது. இந்தப் பூனை ரொட்டித் துண்டுகளை எங்கே கொண்டு போகிறது? பூனையின் பின்னால் போய் அவர் பார்த்தார். அடுத்த அறையில் கண் தெரியாத ஒரு குருட்டுப் பூனைக்குத் தான் அந்தப் பூனை ரொட்டித் துண்டுகளைக் கொண்டு போய் கொடுத்துக் கொண்டிருந்தது.

தாஹிரின் அந்தராத்மா குரல் கொடுத்தது. தாஹிர்! இந்தக் குருட்டுப் பூனைக்கு உணவு இடுபவர் யார்? அவர் உன்னையும் பார்த்துக் கொள்ள மாட்டாரா? மகத்தான அந்தக் கணத்தில் தாஹிர் உலகைத் துறந்து இறைவனின் பெயரால் துறவி ஆனார்.

ஜே.பி. வாஸ்வானி கூறியது

## 1699) அடிமைக்கு சுதந்திரம்

ரபியா மத்திய கிழக்கின் மகத்தான பக்தைகளில் ஒருத்தி ஆவார். மனித வரலாற்றில் புகழ்பெற்ற இறை ரகசிய பக்தையாக அவரைக் கொண்டாடுவார்கள். அவர் 717-ல் பிறந்து, 84 ஆண்டுகள் வாழ்ந்து 801-ல் இறந்து போனார். வறுமை மிகுந்த குடும்பத்தில் ரபியா நான்காவது குழந்தை. சிறு வயதில் தாயை இழந்தார். பெரும் பஞ்சம் வந்து குடும்பத்தினர் பிரிந்து போனார்கள்.

சிறுமி ரபியாவை யாரோ கடத்திக் கொண்டு போய் அடிமையாக ஆறு பணத்துக்கு விற்று விட்டார்கள். எஜமானர் இச்சிறுமியை மிக மோசமாக நடத்தினார், கொடுமைப்படுத்தினார். வேலைப்பளு மிக அதிகம். நாள் முழுவதும் சிரமப்பட்டு உழைக்க வேண்டும். உணவு உண்ணக்கூட நேரம் கிடைக்காமல் வேலை செய்த நாட்கள் உண்டு. ஆனால் எப்போதும் அவள் இறைவனையே நாடுவாள். அவள் இதயம் இறைவனை தரிசிக்கப் பெரும் விருப்பம் கொண்டது. இரவில் விழித்து இருந்து பிரார்த்தனை செய்வாள், தியானம் புரிவாள்.

ஒருநாள் இரவு அவளுடைய எஜமானர் இரவில் நேரம் கழித்து வீடு திரும்பினார். ரபியா வசித்த சிறிய அறையில் இருந்து முணுமுணுப்பு ஓசை கேட்டது. எஜமானர் சந்தேகம் கொண்டார். நள்ளிரவில் அடிமைப்பெண் யாருடன் பேசிக் கொண்டிருக்கிறாள்?

ஜன்னல் வழியாக எஜமானர் எட்டிப் பார்த்தார். அவருடைய ஆச்சரியத்திற்கு எல்லையே இல்லை. ரபியா பிரார்த்தனை செய்து கொண்டிருந்தாள். அவளை ஒரு பேரொளி சூழ்ந்து இருந்தது. கண்களை மூடி முழந்தாளிட்டு கைகளைக் கூப்பி அவள் பிரார்த்தனை செய்தாள். ‘‘இறைவா என் எஜமானனுக்கு அருள் புரிவாயாக.’’

அந்த எஜமானர் கருணையே இல்லாமல் ரபியாவை நடத்தினார். அடிக்கடி அவளைப் போட்டு அடித்தார். சொற்களால் சொல்ல முடியாத கொடுமைப்படுத்தினார். ஆனால் ரபியாவோ அவருக்கு அருள் வேண்டி பிரார்த்தனை செய்து கொண்டிருந்தாள். இறைவா! என்னுடைய எஜமானனுக்கு

அருள்புரிவாயாக! அவரிடம் கருணை காட்டுவாயாக! அவருடைய குற்றம் குறைகளை நீ மன்னிப்பாயாக! அவர் செல்வச் செழிப்புடன் விளங்கட்டும். இறைவா அவருக்கு அருள்புரிந்து உன் திருவடியை அவர் நெருங்கி வர கருணை காட்டுவாயாக. உன் அன்பு இதயத்தை அவர் நெருங்கி வர அருள்புரிவாயாக!

இந்தப் பிரார்த்தனையைக் கேட்டு, எஜமானர் அதிர்ச்சி அடைந்தார். தன்னுடைய அறைக்கு அவர் திரும்பினார். அவரால் தூங்கவே முடியவில்லை. அவர் சொல்லிக் கொண்டார். நான் பெரிய பாவம் செய்து விட்டேன். ரபியா சாதாரண அடிமை அல்ல. அவளை கடவுள் ஆசீர்வதித்து இருக்கிறார். அவள் இறைவனின் முனிவர்களுள் ஒருத்தி. அவளைப் போய் என் வீட்டில் வேலைக்காரியாக வைத்துக் கொண்டேனே!

மறுநாள் காலை எஜமானர் ரபியாவின் அறைக்கு வந்தார். அவள் காலில் விழுந்தார். ஓ இறைவனே! முனிவரே! என்னை மன்னியுங்கள். உங்களை நான் அடையாளம் கண்டுகொள்ளவில்லை. பெரும் பாவம் நான் செய்து விட்டேன். அது கடவுளுக்கே நான் செய்த துரோகம் ஆகும். என் வீட்டிலேயே தங்கி இருக்கும்படி உங்களை நான் கெஞ்சிக் கேட்டுக் கொள்கிறேன். அடிமையாக அல்ல. கௌரவ விருந்தினராக. உங்களுக்குப் பணிவிடை செய்யும் பாக்கியத்தை எனக்கு கொடுப்பீர்களா? என்றார் எஜமானர்.

பெட்டிச் செய்திகள்

தூத்துக்குடி மாவட்டம் புதியம்புத்தூரில் கேந்திரம், அரவிந்த் கண் மருத்துவமனை, அரிமா சங்கம், இவற்றுடன் பிரசன்னா மெட்ரிக்குலேசன் பள்ளியில் கண் முகாம் ஒன்றை நடத்திற்று. கேந்திரத் தொண்டர்கள் கருப்பசாமி, வெள்ளைச்சாமி, பரமகுரு ஆகியோர் முகாமை நடத்தினர். பள்ளித் தாளாளர் திருமதி ராஜேஸ்வரி, அரிமா திரு. மகராஜன், முகாமுக்கு ஏற்பாடுகளும் உதவிகளும் செய்து வாழ்த்தினர். 180 பொது நோயாளிகள் சோதிக்கப்பட்டு 28 பேர் அறுவைச் சிகிச்சைக்கு நெல்லை அழைத்துச் செல்லப்பட்டனர். தகவல் சு. கருப்பசாமி, தமிழ்ச்செல்வி. இதேபோன்ற கண் முகாம் ஒன்று ஆழ்வார் திருநகரியில் நடைபெற்றது. ஆசிரியை சீதா லெட்சுமி, பாரத் கேஸ் மண்டலப் பொறுப்பாளர் தனபால், மாளவியா பள்ளி தாளாளர் வேலுஜி, உள்ளூர் அன்பர் பாலசுப்பிரமணியம் ஆகியோர் நடத்தினர். பொது நோயாளிகள் 29 பேர். ஏற்பாடும், தகவலும் திரு. பரமகுரு, வெள்ளைச்சாமி, கருப்பசாமி.

# காடுகள்

பாரத நாட்டில் காடுகள் படுவேகமாக அழிந்து வருகின்றன. ஆண்டு ஒன்றுக்கு 13 லட்சம் ஹெக்டேர் காடுகள் அழிகின்றன. இது அரசாங்கம் ஒப்புக்கொள்வது போல் எட்டு பங்கு அதிக அளவினது ஆகும். தொழில்களுக்கு மரம் கிடைப்பது அரிதாகி வருகிறது. மீனவர்கள் கட்டுமரம் கிடைக்காமல் துன்புறுகிறார்கள். கட்டை வண்டிகள் செய்ய மரம் கிடைப்பது இல்லை. கலைப்பொருள்கள் செய்ய நல்ல வகை மரங்கள் கிட்டுவது இல்லை. இத்தொழில்கள் செய்யும் மக்கள் ஏற்கனவே ஏழைகள். அவர்கள் பாடு இன்னும் துன்பமயமாக ஆகிறது.

மரத்தொழில்கள், சுரங்கங்கள், அணைகள் ஆகியவை மலையின மக்களையும் அவர்களுடைய வாழ்க்கை நெறியையும் ஆபத்துக்கு உள்ளாக்கி விட்டன. காடுகள் தான் இம்மக்களின் வீடுகள், ஊர்கள், வாழும் சூழல்கள் ஆகும். காடுகள் அழியும் போது இவர்கள் பல முனைகளில் தாக்கப்படுகிறார்கள். காடு வளர்க்க பாரதநாடு நிறையப் பணத்தைச் செலவு செய்கிறது. விளைவு வெற்றியும், தோல்வியும் கலந்ததாக இருக்கிறது. ஒற்றைப் பண்பாடு உடைய ஒரே வகை மரமுள்ள காடுகள், ரப்பர், யூகலிப்டஸ் போன்றவை உண்மையில் மரப்பயிர்த் தோட்டங்களே. இவற்றைக் காடுகள் என்றே அழைக்கக்கூடாது. நாம் விரும்பும் பல்லுயிர்ப் பண்பை இக்காடுகள் வளர்ப்பது இல்லை. அவற்றால் காகிதத் தொழிற்சாலைகளுக்கும், பிளைவுட் தொழிற்சாலைகளுக்கும் மட்டும் தான் நன்மை கிடைக்கிறது. மலையின மக்களுக்கு வாழ்விடம் அளிக்க இக்காடுகளால் இயலாது.

**யூகலிப்டஸ் மரத்தினால்**
**மண்ணின்**
**நுண்ணுயிர்ச்**
**சத்துக்கள்**
**இழக்கப்படுகின்றன.**
**சிறிய தாவரங்கள்**
**செத்துப் போகின்றன.**



சமூகக்காடு வளர்ப்புத் திட்டம் தொடக்கத்தில் விவசாயிகளைக் கவர்ந்தது. ஆனால் காலம் செல்லச் செல்ல விறகுப் பஞ்சம் வந்தது. பருத்திச் செடியின் குச்சிகள் விவசாயிகளுக்கு இனாமாக அடுப்பு எரிக்கக் கிடைத்தன. நிலம் இல்லாத கூலிகளும் இவற்றைச் சேகரித்து அடுப்பு எரித்தனர். இந்த வசதி நின்று போனது. யூகலிப்டஸ் என்பது ஒற்றைப் பண்பாட்டுக் காடு ஆகும். இதைப் புறச்சூழல் அறிஞர்கள் வெறுக்கிறார்கள். மரத்தால் மண்ணின் நுண்ணுயிர்ச்சத்துக்கள் திருடப்படுகின்றன. சின்னச்சின்ன செடிகள் செத்துப் போகின்றன. பல வகையான செடிகள், புதர்கள், புல் வகைகள் ஆகியவற்றை யூகலிப்டஸ் மரம் வளர விடாது.

அரசின் காடு வளர்ப்புத் திட்டத்தால் நிலம் இல்லாத கூலித் தொழிலாளர்களுக்கு வேலை கிடைக்கிறது. அரை கோடியில் இருந்து ஒரு கோடி வரை கூலித் தொழிலாளர்கள் வேலை பெறுவார்கள்.

நம் லட்சியம் நாட்டின் பரப்பளவில் மூன்றில் ஒரு பங்கு காடாக இருக்க வேண்டும் என்பது. ஆனால் தற்போது 12 சதவிகிதம் தான் காடு இருக்கிறது.

இயற்கையான காடுகள் அழிவதைத் தடுத்து நிறுத்துவதில் கொஞ்சம் வெற்றி கிடைத்து இருக்கிறது. 1980-ல் பாரத நாட்டில் ஐந்து கோடியே ஐம்பத்தொரு லட்சம் ஹெக்டேர் இயற்கைக் காடுகள் இருந்தன. 1990-ல் ஐந்து கோடியே பதினேழு லட்சம் காடுகள் தப்பிப் பிழைத்தன.

பாரதக் காடுகள் பல்லுயிர்ப் பண்பில் பிரேசில் நாட்டையும், மலேசியா நாட்டையும் ஒத்தவை. மனிதன் புகாத தூய காடுகளைக் காப்பாற்றினால் தான் பல்லுயிர்ப் பண்பு காப்பாற்றப்படும்.

மரத்தோட்டம் வளர்க்கும் தனியார் நிறுவனங்கள் பெரிய அளவில் முயற்சி செய்தன. காட்டு நிலத்திற்கு வெளியே தேக்கு மரம் வளர்க்க அவை முயன்றன. ஆனால் முதலீடு செய்த மனிதர்களின் பணம் 2500 கோடி ரூபாய் நஷ்டமானது தான் கண்ட பயன். தேக்கு மரங்கள் வளரவில்லை. காடு வளர்க்கும் திட்டத்தில் மக்கள் நம்பிக்கை இழந்து, இந்த இயக்கத்திற்கே பெரும் பின்னடைவு ஏற்பட்டு விட்டது.

உள்ளூர் மக்களை வன நிர்வாகத்தில் ஈடுபடுத்தாமல் தோற்றுப் போனோம். இதனால் திருடர்கள், கொள்ளைக்காரர்கள், திருட்டு மரம் வெட்டுவோர், சந்தனக் கடத்தல்காரர்கள், யானைகளைக் கொன்று தந்தம் திருடுவோர் இந்த இடத்தைப் பிடித்துக் கொண்டார்கள்.

வனங்களில் பல நோய்கள் பெரும் அளவில் வெடித்தன. ஆனால் இன்னும் பொறுப்பாளர்கள் விழித்தெழவில்லை. ஆயிரக்கணக்கான சாலமரங்கள் துளைப்பான் நோயால் செத்துப் போயின. வன விஞ்ஞான ஆராய்ச்சி அவசரம் தேவை.

**பாரதக் காடுகள்:** 1995-ல் பாரத நாட்டில் ஏழு கோடியே 65 லட்சம் ஹெக்டேர் காடு இருப்பதாகக் கணக்குப் போடப்பட்டது. உண்மையில் இருந்த காடுகள் ஆறு கோடியே 33 லட்சம் ஹெக்டேர் தான். இதில் ரிசர்வ் செய்யப்பட்ட காடுகள் நான்கு கோடியே 17 லட்சம் ஹெக்டேர், பாதுகாக்கப்பட்ட காடுகள் இரண்டு கோடியே 23 லட்சம் ஹெக்டேர். வகைப்படுத்தப்படாத காடுகள் ஒரு கோடியே 25 லட்சம் ஹெக்டேர். பாரத நாட்டில் சதுப்புநிலக் காடுகள் ஐந்து லட்சம் ஹெக்டேர் இருப்பதாகக் கணக்கிடப்பட்டது. அரைகுறைக் காடுகள் 57 லட்சத்தி இருபதாயிரம் ஹெக்டேர் இருக்கின்றது. நம் நாட்டில் 25 மாவட்டங்களில் காடுகளே கிடையாது.



**உள்ளூர் மக்களை வனப் பாதுகாப்பில் ஈடுபடுத்தத் தவறியதால் திருடர்களும், கடத்தல்காரர்களும், கொள்ளைக் கூட்டத்தினரும் அந்த இடத்தைப் பிடித்துக் கொண்டனர்.**

காட்டு நிலத்தை நாம் எப்படி இழக்கிறோம்? விவசாயம், நதி அணைத் திட்டங்கள், தொழிற்சாலைகள், நகரியங்கள், மின்சாரம் எடுத்துச் செல்லும் வழிகள், சாலைகள், போடுவது இவற்றால் காட்டு நிலம் நாசமாகிறது. 1980-ம் ஆண்டுக்கு முன் 43 லட்சம் ஹெக்டேர் நிலத்தை இவ்விதத்தில் இழந்தோம். அரசு விழித்துக் கொண்டு காட்டைக் காக்கும் சட்டங்களைப் போட்டது. 1980-ல் இருந்து 94-க்குள் மூன்று லட்சம் ஹெக்டேர் காடுகள் தான் அழிந்தன. (அழியும் வேகம் குறைந்தது)

பாரத நாட்டில் காடுகளில் இருந்து கிடைக்கும் பயன் பொருள்கள் 1) மூங்கில், 2) யூகலிப்டஸ் தைலம், 3) சணல் வகைகள், 4) நார் வகைகள், 5) காட்டி என்னும் கோந்து வகைகள், 6) மூங்கில் கோந்து பிசின் போன்றவை, 7) கத்தா என்னும் வெற்றிலை பாக்குடன் சேர்த்து உண்ணப்படும் சாய கோந்து, 8) அரக்கு, 9) எலுமிச்சம் புல் எண்ணெய், 10) இலுப்பை எண்ணெய், 11) நெல்லிக்காய், 12) வேப்ப முத்து, 13) மற்ற எண்ணெய் வித்துக்கள், 14) பல்மா ரோசா என்னும் எண்ணெய், 15) பைன் மரத்து பிசின்கள், 16) ரோசின், 17) சால மரத்தின் எண்ணெய், 18) சால மரத்து விதைகள், 19) சந்தண எண்ணெய், 20) தெண்டு என்னும் பீடி சுற்றும் இலைகள், 21) சாயங்கள், 22) டர்பன்டைன், 23) தானே விளையும், உண்ண உதவும் தாவரப் பொருள்கள். 1993-ம் ஆண்டு காடுகளில் இருந்து எட்டாயிரம் கோடி ரூபாய் மதிப்புள்ள பொருள்கள் கிடைத்தன. விறகும், மரமும் ஆறாயிரம் கோடி ரூபாய்க்கு கிடைத்தன. மற்ற பொருள்கள் 1600 கோடி ரூபாய்.

**விறகை எரிக்கும் பாரத தேசம்:** நம் நாட்டில் ஆண்டு ஒன்றுக்கு 18 கோடி டன் மரக்கட்டைகளை விறகுக்குப் பயன்படுத்துகிறோம். இன்னும் குடிசைத் தொழில்கள் இரண்டரை கோடி டன்னையும், சடங்குகள் நான்கு கோடி டன்னையும் விறகாகப் பயன்படுத்துகின்றன. உணவு விடுதிகள் ஒரு கோடி டன் விறகை எரிக்கின்றன. இப்படி மொத்தம் 25 கோடியே 50 லட்சம் டன் விறகை நாம் எரிக்கிறோம். இதைத்தவிர மரக்கட்டைகள் இன்னும் நிறைய தேவைப்படுகின்றன. வீடு கட்ட, சாமான்கள் கொண்டு செல்லும் பெட்டிகள் செய்ய, மேஜை, நாற்காலி, விவசாயக் கருவிகள் இவற்றுக்கு ஆறுகோடி டன் மரக்கட்டை வேண்டும். தொழிற்சாலைகளில் காகித மரக்கூழ் செய்ய, ஃபிளைவுட் செய்ய ஒரு கோடியே 30 லட்சம் டன் மரக்கட்டைகள் தேவைப்படுகின்றன. இவ்விதம் முழு மரக்கட்டைகள் ஏழு கோடியே 30 லட்சம் டன் தேவைப்படுகிறது.

**வளம் குன்றா வளர்ச்சி - பெட்டிச் செய்தி**

## ஸ்பைக் மில்லிகன்

மரத்தை வெட்டினால் உன் உயரமும் குறையும்
நூறடி மரத்தை வெட்டி இறக்கினார்கள்
நாற்காலி செய்வதற்கு.
நான் ஒரு நாற்காலி வாங்கினேன்
என் உயரம் ஆறடி ஒரு அங்குலம்
நாற்காலியில் நான் அமர்ந்தேன்
இப்போது என் உயரம் நாலடி இரண்டு அங்குலம்
நூறடி மரத்தை வெட்டி
என்னைக் குட்டையாக்கி விட்டார்களே!

பெட்டிச் செய்திகள்

கீதை விழாக்கள் குமரி மாவட்டம் மேலக்காட்டு விளையிலும், தென்தாமரைகுளத்திலும், கண்ணம்பிவிளை, கல்லவீரியன்விளை, வெள்ளாளன்விளை, மேக்காடு கிராமத்திலும் தர்மசாஸ்தா கோவிலிலும், குறுந்தொட்டி விளையிலும், வடக்குப் பேயன்குழியிலும், பேரை, பாலைக்கா விளையிலும், தோட்டைக்காடு இசக்கியம்மன் கோவிலிலும் நடைபெற்றன. வல்லன்குமாரன் விளை, பேயன்குழி, கோட்டவிளை ஆகிய பாலர்பள்ளிகளிலும் கீதை அத்தியாயங்கள் ஓதும் விழா, சிறப்புரை, பஜனை, கீதை ஓதுதல், பிரசாத வினியோகம் இவற்றுடன் அழகும், பக்தியும் பொங்க பாலர்பள்ளி ஆசிரியைகளால் கொண்டாடப்பட்டது. ஊர் மக்கள் பக்தியுடன் கலந்து கொண்டு கீதை ஓதினர்.

# குடும்ப வாழ்க்கைக்குப் பலம் கொடுப்பது எப்படி?

## முரளி தேசாய்

1) முன்னுரை: 1994-ம் ஆண்டு அனைத்துலக குடும்ப ஆண்டு ஆகும். அதில் நோக்கமாக சமுதாயத்தின் இதயத்தில் விளங்கும் குடும்பத்தை ஒரு ஜனநாயக கட்டமைப்பாக மாற்ற வேண்டுமென்று கூறப்பட்டது. ஐக்கிய நாடுகள் சங்கத்தின் பல்வேறு பிரிவுகள், மாநாடுகள், அறிவிப்புக்கள், சில கருத்துக்களை வெளியிட்டன. 1) தனி மனிதருக்கு ஒரு குடும்பம் வைத்துக் கொள்ளும் உரிமை வேண்டும். 2) குடும்பத்திற்குள் தனி மனிதருக்கு உரிமைகளும், பொறுப்புக்களும் உண்டு. சுற்றுச்சூழலில் குடும்பத்தின் பொறுப்பும், கடமைகளும் வரையறுக்கப்பட வேண்டும். இவையே ஆதாரக் கருத்துக்கள் ஆகும்.

2) தனி மனிதரும், குடும்பமும்: ஒரு குழந்தை தம் பெற்றோருடன் இருப்பது இயற்கையான உரிமை ஆகும். இதற்குச் சமுதாயம் வழி காட்டலாம். நிதி உதவலாம். பகல்நேரக் குழந்தை காப்பகங்களை நடத்தலாம். அளவுக்கு மீறி குடும்பத்தில் பிறர் குறுக்கிட்டு குழந்தையையே குடும்பத்தில் இருந்து பிரித்து விடக்கூடாது. வயது வந்தவர்கள் திருமணம் செய்து கொள்ளவும், குடும்பத்தை உருவாக்கவும், உரிமை உண்டு. வயதானவர்களை அவர்களுடைய குழந்தைகள் பாதுகாக்க வேண்டும். அத்தகைய உரிமை முதியவர்களுக்கு உண்டு.

3) குடும்பத்திற்குள் தனிமனிதரின் உரிமைகளும், கடமைகளும்: குடும்ப உறவுகளில் இயற்கையான மனிதநேயமுள்ள நன்கு கவனிக்கும் நற்குணங்கள் அமைந்துள்ளன. அந்தஸ்து உரிமை, மரியாதை உரிமை, கண்ணியத்தைக் காப்பாற்றிக்கொள்ளும் உரிமை, சமத்துவம், ஏற்றத்தாழ்வு இன்மை, சுதந்திரம், குடும்ப வாழ்க்கைக்குள் சிலவற்றைத் தேர்ந்தெடுத்துக் கொள்ளும் உரிமை, சமுதாயப் பாதுகாப்பு ஆகியவை குடும்பத்திற்குள் இருக்கும் தனிநபரின் உரிமைகள் ஆகும்.

4) சமுதாயத்தில் குடும்பத்தின் உரிமைகளும், பொறுப்புக்களும்: 1) இனரீதியான, மொழி ரீதியான, மரபின ரீதியான, அரசியல் ரீதியான சமத்துவம் வேண்டும். 2) இயற்கையைக் காப்பாற்றும் பொறுப்பேற்க வேண்டும். 3) அடிமைத்தனத்தில் இருந்து விடுதலை பெறும் உரிமை வேண்டும். 4) ஆரோக்கியமான சுற்றுப்புறத்தில் குடி இருக்க உரிமை வேண்டும். 5) வேலை செய்யும் உரிமை, நுகர்வோர் பாதுகாப்பு, தர்க்கத்திற்கு ஒத்து வரும் வரிவிதிப்பு முறையில் உரிமைகள், கடமைகள், குடும்பத்திற்கு வேண்டும். 6) தகவல் அறியும் உரிமை, சமுதாயப் பாதுகாப்பு, சண்டை சச்சரவு இல்லாத அக்கம்பக்கம் இவற்றுக்கான உரிமையும், கடமையும் குடும்பத்திற்கு உண்டு.

**5) குடும்ப வாழ்க்கைக்கான சரியான மனப்பாங்கினை வளர்த்துக் கொள்ளுதல்:** இதைச் செய்ய குடும்பத்தின் வளங்களை நியாயமான முறையில் பங்கு போட்டுக் கொடுக்க வேண்டும். குடும்பப் பொறுப்புக்களை, பணிச்சுமைகளை எல்லோரும் பகிர்ந்து கொள்ள வேண்டும். தேர்ந்தெடுக்கும் உரிமை வேண்டும். முடிவுகளை எடுப்பதில் சுதந்திரம் வேண்டும். சண்டை, சச்சரவுகளைத் தீர்ப்பதில் அமைதியான முறைகள் வேண்டும். வரதட்சிணை, குழந்தைகளைத் துன்புறுத்துதல், பெண்கள் மீதான வன்முறை, இருதார மணம், குடும்பத்தை விட்டு ஓடிவிடுதல், பெற்றோரின் சொத்தில் பெண்களுக்கு உரிமை இவற்றில் சரியான மனப்பாங்கு வேண்டும்.

**6) குடும்பத்தை வளப்படுத்தும் கல்வி:** குடும்பத்தினருக்கு இடையே பேச்சு வார்த்தைகள் ஆக்கப்பூர்வமாக இருக்க வேண்டும். குடும்ப நடவடிக்கைகளில் நட்பும், இணைப்பும் போற்றிப் பாதுகாக்கப்படவேண்டும்.

**7) வயது முதிர்ச்சிக்கான கல்வி:** தனிமனிதருக்குக் கல்வி அளித்து உரிய வயதில் பொறுப்பேற்கும்படி செய்யவேண்டும். திருமணத்தில் தன் இணையைத் தேர்ந்தெடுத்துக் கொள்ளுதல், நிச்சயதார்த்தம், திருமணத்திலும் மாமியார், மாமனாருடன் ஒத்துப் போவதிலும், குழந்தை பெறுவதில் முடிவு எடுப்பதிலும், குழந்தை வளர்ப்பதிலும், சிறு குழந்தைகளுடன் சரிகட்டிக் கொண்டு போவதிலும், விடலைப் பருவத்தினரைச் சமாளிப்பதிலும், இளைஞர்கள், நடுவயதினர், முதியவர்கள், சாகக்கிடப்பவர்கள் இவர்கள் ஒவ்வொருவரையும் பேணிக் காப்பாற்றுவதிலும் குடும்பத்தினர் ஒவ்வொருவருக்கும் கல்விப் பயிற்சி கிடைக்க வேண்டும். குடும்பக் கல்வி என்பதே வயதாக, வயதாக மாறிவரும் தேவைகளை, குடும்பமே வழங்க பயிற்சி அளிப்பது தான்.

**8) அக்கம்பக்கத்தினருடன் நன்கு பழக குடும்பத்திற்கு பலமூட்டுவது எப்படி?** 1) குடும்ப சட்ட திட்டங்கள் 2) நுகர்வோர் கல்வி, 3) வருமானத்தைப் பெருக்குதல், 4) வரி கொடுத்தல் 5) வீட்டு வசதி, 6) கல்வி, 7) ஆரோக்கியம், 8) சமூக நலம், 9) குழந்தை வளர்ப்பு, 10) சமுதாயப் பாதுகாப்பு, 11) பஞ்சாயத்து ஆட்சி ஆகியவற்றை பலமூட்டி நியாயப்படுத்தினால் தான் குடும்பம் செழிப்பாக இருக்கும்.

**9) இதற்கான வழிமுறைகள் யாவை?** 1) வானொலி, தொலைக்காட்சி, பத்திரிக்கை மூலம் பயிற்சி தகவல்களைக் கொடுத்தல், 2) நாட்டார் ஊடகங்கள், தெருக்கூத்து, பொம்மலாட்டம், 3) கல்விக்கூடங்கள், கல்லூரிகள், கிளப்புகள், தொண்டு நிறுவனங்கள், சமுதாய மையங்கள், 4) சமுதாய விரிவாக்கத் திட்டங்கள், 5) அரசு ஊழியர்களையும், தொண்டு நிறுவனத்தையும் நெறிப்படுத்தப் பயிற்சி கொடுத்து குடும்பத்தின் மேம்பாட்டுக்கு உதவலாம். 6) தற்போது இருக்கும் திட்டங்கள் அனைத்திலும், குடும்பம் என்ற அமைப்பின் முக்கியத்துவத்தை அதிகரிக்கலாம்.

# ராமர் ஒருவர்; மக்களும் ஒன்றே!

## ராஜாஜி

என் மக்களுக்கு நான் செய்த மிகப்பெரிய சேவையாக ராமாயணத்தையும், மஹாபாரதத்தையும் சுருக்கித் தந்ததையே நான் கருதுகிறேன். அந்த காலகட்டத்தில் நானும் நிறைய வேலை செய்தேன். ஓயும் வயதில் இப்பணி எனக்கு திருப்தி தருகிறது. நான் அனுபவித்த பேரானந்தத்தை இந்த நூல்கள் குறிப்பிடுகின்றன. நம் ரிஷி முனிவர்கள் நம் அன்புக்குரிய பொது மக்களோடு அம்மக்களின் மொழியிலேயே பேசுவதற்கு நான் உதவி செய்தேன். மக்களின் மனத்தை உயர்த்துவதற்கு குந்தியின் துக்கம், கோசலையின் சோகம், திரௌபதியின் அவமானம், சீதையின் ஏக்கம் ஆகிய துன்பங்களை ஊடகமாகப் பயன்படுத்திக் கொண்டேன். இந்த நேரத்தில் நமக்கு என்ன தேவை? நமக்கும் நம் மண்ணின் ரிஷிகளுக்கும், இடையிலே பேச்சு வார்த்தை தொடர வேண்டும். அப்போது தான் நம் எதிர்காலம் உறுதியான அஸ்திவாரத்தின் மீது கட்டப்படும். மண்ணின் மீது அல்ல.

ராமாயணம் வரலாறோ, வாழ்க்கைச் சரிதமோ அல்ல. அது ஹிந்துப் புராணங்களின் ஒரு பகுதி. நாம் ஜீயஸ் அப்பாலோ, ஹெர்குலிஸ், மீனஸ், ஹெக்டார், ப்ரியம், அக்கில்லஸ், உலிஸ்சஸ் போன்றவர்களின் வாழ்க்கை வரலாற்றைப் படிக்காமல் கிரேக்க வாழ்க்கையையோ, கிரேக்க நாகரிகத்தையோ புரிந்து கொள்ள முடியாது. அதேபோல ராமனையும், சீதை, பரதன், லக்ஷ்மணன், இராவணன், கும்பகர்ணன், ஹனுமான் ஆகியோரைத் தெரிந்து கொள்ளாமல் ஹிந்து தர்மத்தை நம்மால் புரிந்து கொள்ள முடியாது. புராணக் கதைகள் வேண்டாம் என்று நாம் ஒதுக்கித் தள்ள முடியாது. தத்துவ ஞானம் மட்டும் போதாது. சடங்கு, வழிபாடு மட்டும் போதாது, புராணங்கள் மட்டும் போதாது. தொன்மையான மதங்கள் எல்லாவற்றிலும் இந்த மூன்று இழைகளும் காணப்படும். இந்த மூன்றையும் புரிந்து கொண்டு காப்பாற்றி எடுத்துச் சொன்னால் ஒழிய ஒரு குறிப்பிட்ட மனித இனத்தின் ஆன்மீக மனப்பாங்கை நம்மால் புரிந்து கொள்ள முடியாது.

கோடிக்கணக்கான பாரத நாட்டு ஆண்களுக்கும், பெண்களுக்கும், குழந்தைகளுக்கும் ராமாயணம் வெறும் கதை அல்ல. தம் சொந்த வாழ்க்கையின் சம்பவங்களை விட ராமாயணத்தில் அதிக சத்தியங்கள், அர்த்தமும் இருப்பதாக மக்கள் ஏற்கின்றனர். செடி, கொடிகள், சூரிய ஒளியில் வளருவது போல பாரத மக்களின் மனோபலமும், பண்பாடும் ராமாயணத்தின் தெய்வீக உற்சாகத்தினை உறிஞ்சி வளர்பவையே.

புராணக் கதை என்பது மதத்தின் பிரிக்க முடியாத பகுதி ஆகும். அது ஒரு பழத்தின் தோலும், நரம்பும் அப்பழத்தின் சாற்றையும், சுவையையும் பாதுகாத்து வைப்பது போல் சமயத்தின் தேசீயப் பண்பாட்டைப் பாதுகாக்க, தேவைப்படும். உட்பொருளைப் போலவே வெளி வடிவமும் மிகத் தேவை ஆகும். சமயத்தைப் பிழிந்து அதன் சாற்றை ஒரு பாட்டிலில் அடைத்து நாம் வைத்து விட முடியாது. அது பயன்தராது. நீண்டகாலம் நிலைத்திருக்காது. புராணக் கதைகளும், புனித மனிதர்களும் தேவை. அவைமூலம் தான் எந்தவொரு மகத்தான பண்பாடும் தன்னுடைய ஆன்மீக அடிக்கல்லின் மீது நிலைத்து நிற்க முடியும். மக்களுக்கு உயிருள்ள உற்சாகத்தைக் கொடுத்து வழிகாட்ட முடியும்.

நம்முடை மக்களை சாதிகளும், மாநிலங்களும், மொழிகளும் பிரிப்பது போல் தோன்றினாலும் ராமாயணமும், மஹாபாரதமும் கோடிக்கணக்கான நம் மக்களை ஒன்றாகக் கட்டிப் போட்டிருக்கின்றன. இந்த உண்மையை நாம் ஒரு போதும் மறந்து விடக்கூடாது. (பின்குறிப்பு: ராஜாஜி எழுதி பாரதிய வித்யா பவன் வெளியிட்ட **ராமாயணம்** நூலின் 33-வது பதிப்பின் முன்னுரையில் இருந்து)

# கொடுப்பதனை மட்டுமே அறிந்தவர்

**ஆங்கிலம் : நிவேதிதா ரகுநாத் பிடே**
**தமிழ் : ஆர்.சி. தாணு**

நீங்கள் நினைவஞ்சலிகளை மிக நன்றாக எழுதுகிறீர்கள். எங்களைப் பிரிந்த பிறகு உங்களுக்கு யார் எழுதுவார்கள்? எனவே அதற்கு முன்பு உங்களுக்காக இரங்கல் செய்தியை நீங்களே ஒன்று எழுதுவது தான் நல்லது என்று கோபால்ஜியிடம் கேலியாய் பேசினேன். அவர் சிரித்துவிட்டு நீங்கள் எனக்கு எழுதுங்களேன் என பதிலளித்தார். இல்லை கோபால்ஜி, நீங்கள் நன்றாக எழுதுவதால் உங்களுக்கு முன்பே சென்று விட ஆசைப்படுகிறேன். எனவே நம் இருவருக்கும் சேர்த்து எழுதுவது நல்லது என கூறினேன். அவர் ''சீ சீ என்ன பேசுகிறீர்கள். இதுமாதிரி பேசக்கூடாது'' என்றார். அத்துடன் உரையாடல் முடிவுற்றது. ஆனால் காலம் தொடர்ந்தது. இன்று (12, டிசம்பர் 2010, கோபால்ஜி தனது இன்னுயிர் நீத்த தினம்) நள்ளிரவுக்குப் பின்னும் அவரைப் பற்றி எழுத தூண்டுவதனை என்னால் தடுக்க இயலவில்லை. ஏக்நாத்ஜி இறந்த 1982-ம் வருடம் கோபால்ஜி ஒரு வானபிரஸ்தி தொண்டராக விவேகானந்த கேந்திரத்தில் தன்னை இணைத்துக் கொண்டார். பொதுவாக இளைய சேவகர்களின் நலத்தில் குறிப்பாக யுவதிகளைப் பற்றி ஏக்நாத்ஜி அதிகம் கவலைப்படுவதுண்டு, சிந்திப்பதுண்டு. அதனால் ஒருவேளை கடவுள் கிருபையால் கோபால்ஜி கேந்திரத்திற்கு அனுப்பப்பட்டிருக்கலாம் எனத் தோன்றுகிறது. அப்பொழுது இருந்தே அனைத்து இளைய சேவகர்களையும் (அவருக்கு முன்பாக கேந்திரத்தில் இணைந்து என்னைப் போன்றவர்களையும் சேர்த்து) ஒரு தாய் போல் அவர் கவனித்துக் கொண்டார். ஒரு வானப்பிரஸ்தி சேவகராகத் தன்னைத் தான் இணைத்துக் கொண்ட போதிலும் தன்னை விட 20-லிருந்து 30 வயதிற்கு

குறைவான சேவகர்களைக் காட்டிலும், சுறுசுறுப்பாகவும், விரைவாகவும் அவர் பணிபுரிந்தார். சாதாரணமான ஒருவர் எப்படி அடுத்தவர் மனங்களில் அசாதாரண இடத்தினை உருவாக்க முடியும் என்பதற்கு கோபால்ஜி ஒரு உதாரணம். மிகவும் எளிமை, பணிவு, அடுத்தவர்கட்கு உதவத் தயாராக இருக்கும் தன்மை ஆகியவற்றைக் குணங்களாகக் கொண்டவர். எந்தவிதப் பொறுப்பும் இல்லாது, அடுத்தவர்களைக் கவரும் ஆற்றல்களான பாடுதல், நாவன்மை அல்லது சாமர்த்தியம் போன்ற எதுவும் இல்லாத போதிலும், தனது இளகிய மனதால், இனிய வார்த்தைகளால், அடுத்தவர்க்கு ஊட்டுவிக்கும் தன்மையால், மற்றவர்கள் தன்னைக் கிண்டலடிக்க அனுமதிப்பதோடு மட்டும் இல்லாமல் தன்னை விமர்சனம் செய்யவும் ஊக்கப்படுத்துவதன் காரணமாக அனைவரிடமும் அவருக்கு ஒரு பிணைப்பு இருந்தது. தன்னைச் சுற்றி வாழ்வினில் எப்படிப்பட்ட வித்தியாசத்தை உருவாக்கினார் என்பது தான் ஒருவரின் உண்மையான மதிப்பு என சொல்லப்படுகிறது. அந்த வகையில் 1982-லிருந்தே கோபால்ஜி விவேகானந்த கேந்திரத்துக்கு ஒரு விலைமதிப்பற்ற இணைப்பு என்று தான் சொல்ல வேண்டும். யாராவது ஒருவருக்கு தனது மனநிலை சரியில்லாத நேரங்களில் அவர்கள் கோபால்ஜியிடம் செல்லலாம். சில எளிய கருத்துரைகளை கேட்டோ அல்லது கிண்டலுக்காய் அவருடன் விவாதம் செய்தோ தனது மனநிலையை சரிப்படுத்திக் கொள்ளலாம். யாராவது சிலவற்றை உண்ண ஆசைப்பட்டால் அதற்குரிய வழி கோபால்ஜி தான். கடிதங்கள், கட்டுரை, அறிக்கை போன்ற முதல் பிரதிகளில் ஏதேனும் திருத்தம் செய்ய வேண்டுமானால் கோபால்ஜி அவர்களே அதனை சரிவர செய்ய அங்கு இருக்க வேண்டும். ஒரு கட்டுரைக்கு தேவையான குறிப்போ அல்லது மேற்கோளோ கொண்ட புத்தகம் தேவைப்பட்டால் அதற்கு கோபால்ஜிதான் சரியான தீர்வு. அரசுத்துறை சார்ந்த அமைப்புகட்கு ஏதேனும் திட்டங்களை உருவாக்க வேண்டுமானால், அது சம்பந்தப்பட்ட குறிப்புக்களை ஆழ்ந்து படித்து, முதல் பிரதி உருவாக்க முடியுமென்றால் அது கோபால்ஜியால் மட்டுமே இயலும். சின்னச்சின்ன பல விஷயங்களில் கூட எளிமையாக உதவிகரமாக இருப்பதால் அவர் தள்ளி வைக்க முடியாத நபராக மாறினார். அவரை அதிகமாக இழந்து விட்டோம்.

அடுத்தவர்கட்கு ஊட்டுவிப்பது என்பது கோபால்ஜியின் ஒரு தீவிர உணர்வாகும். ''உங்களுக்காக நான் எதனை வாங்குவது? சில பொருட்களை கொண்டு வந்துள்ளேன். உங்களுக்குப் பிடித்தமான வாழைக்காய் வத்தல்களையோ அல்லது கடலை மிட்டாயையோ விரும்புகிறீர்கள்'' என்று தானாகவே விரும்பி வந்து கேட்பார். தங்களுடைய ஓய்வூதியத்தை ஏன் இப்படி செலவழிக்கின்றீர்கள் என சில நேரங்களில் நாங்கள் வழக்கமாகக் கூறுவதுண்டு. அதற்கு அவர் ''அரசாங்கத்திடம் இருந்து அதிக அளவு ஓய்வூதியம் வாங்குவதற்கு நாணுகிறேன். நான் வேலை செய்து கொண்டிருக்கும் போது கூட அந்தப் பணத்தை பெறவில்லை. அதிகப் பணத்தை வைத்து என்ன செய்யப் போகிறேன்'' என்று தாழ்மையுடன் மறுப்பார்.

# அன்னையின் ஆசி

**பலத்தையும், உயிர்த்துடிப்பையும் வளர்த்துக் கொள்ளுங்கள் ஸ்ரீ மாதா அமிர்தானந்தமயி 01/12/2009 அன்று விவேகானந்த பவுண்டேசன் பன்னாட்டு மையத்தை புதுடில்லியில் துவக்கி வைத்து ஆற்றிய உரை (மலையாளத்தில் இருந்து ஆங்கில வழியாகத் தமிழாக்கம் செய்யப்பட்டது)**

வேதாந்தம் என்பது மதத்தைப் பற்றிய பாரதத்தின் பார்வையின் அடிக்கல் ஆகும். அது அனைத்தையும் உள்ளடக்கிய தரிசனம் ஆகும். எல்லா மதங்களையும் ஒரே லட்சியத்தை நோக்கிச் செல்லும் பாதைகளாக வேதாந்தம் பார்க்கிறது. சுவாமி விவேகானந்தர் முன் மொழிந்தார். நவீன விஞ்ஞானம் எவ்வளவு தான் முன்னேறினாலும் சரி, வேதாந்தம் சொல்லும் சத்தியங்கள் உறுதியாக நிற்கும். எந்தச் சவாலையும் சமாளிக்கும். கடைசியில் உலகளாவிய வாழ்க்கை விதியாக உருவெடுக்கும்.

இறைவனின் படைப்பின் இயல்பே பல்விதத் தன்மை கொண்டது ஆகும். எந்தவொரு சமயத்தினாலோ, தத்துவத்தினாலோ இப்பிரபஞ்சப் படைப்பை விளக்கிச் சொல்லி விட முடியாது. அந்த அளவுக்கு இப்பிரபஞ்சம் சிக்கலானது. நமக்கு அமைதி தேவை, திருப்தி வேண்டும் என்றால், முன்னேற விருப்பம் என்றால் உலகம் ஒற்றுமையுடன் ஒருங்கிணைவதைப் புரிந்து கொள்ளச் செய்வதற்கு நாம் அதிக அளவில் உழைக்க வேண்டும். இந்த இசைவும், ஒருமையும் தான் சனாதன தருமத்தின் அடிப்படை நோக்கம் ஆகும். அது அனைத்தையும் ஏற்றுக் கொள்வது ஆகும்.

அம்மா இவ்வுலகம் முழுவதையும் ஒரு புஷ்பமாகப் பார்க்கிறார். ஒவ்வொரு மலர் இதழும் ஒரு தேசத்தைக் குறிக்கிறது. ஒரு மலர் இதழைப் பூச்சிகள் தாக்கி நோயுறச் செய்தால் அது மற்ற இதழ்களையும் பாதிக்கும். முழு மலரின் அழகும் கெட்டு விடும். நம் ஒவ்வொருவரின் பொறுப்பு என்னவென்றால் இந்த மலரைப் பாதுகாத்து வளர்த்தெடுப்பதே ஆகும். ஆகவே உலகின் தேசங்கள் எல்லாம் ஒன்றாகவே முன்னேற வேண்டும். கைகோர்த்து, பங்கு போட்டுக் கொண்டு பிறருடைய மதிப்புக்குரிய நற்பணிகளையும், உதாரணங்களையும் ஏற்றுக் கொண்டு தேசங்கள் முன்னேற வேண்டும். அம்மா இதைக் குறிக்கும் போது மேற்கு நாட்டில் சாலைகளின் காட்சி ஒன்று அம்மாவின் மனத்தில் தோன்றுகிறது. அம்மா வெளிநாடுகளுக்குப் போய் தார்போட்ட சாலைகளை பார்க்கிறார். அவை சுத்தமாக இருக்கின்றன. கட்டுப்பாடும், ஒழுங்கும் அங்கே காணப்படுகின்றன. பாரத நாட்டிலும் அதேபோல் இருக்க வேண்டுமென்று அம்மா ஆசைப்படுகிறார். சாலைகள் இன்னும் நன்றாக இருந்தால் பலப்பல

விபத்துக்களை நாம் தவிர்த்து விட முடியும். நாமும் அதேபோன்று தூய்மையின் தரத்தைக் கடைப்பிடித்தால் கொள்ளை நோய்களைத் தவிர்க்க முடியும். மற்ற நோய்களைத் தவிர்ப்பதும் எளிது ஆகும். நாமும் அதேபோன்று வேலை செய்யும் பண்பினைப் பழகிக் கொண்டால் பாரதத்தின் வளர்ச்சியும், முன்னேற்றமும் அதிக வேகத்தில் செழிக்கும். அதுபோல மேற்கு நாடுகளும், பாரதத்தின் மதிப்பிற்குரிய நற்பண்புகளை உள்வாங்கிக் கொள்ளலாம். குறிப்பாக பாரதத்தின் ஆன்மீக ஞானம்.

ஒரு உண்மையை பாரத குடிமக்கள் ஒவ்வொருவரும் நினைவில் வைத்துக் கொள்ளவேண்டும். நம்முடைய பாரம்பரியம் ஒப்பற்றது ஆகும். நம்முடைய நிகழ்காலத்தின் மீது ஒளி பாய்ச்சுவது எது தெரியுமா? நம்முடைய கடந்தகால எண்ணங்களும், செயல்களும் நமக்குள் ஏற்படுத்தி இருக்கும் பதிவுகள் தான். சம்ஸ்காரங்கள் தான். நாம் அன்னிய நாடுகளில் இருந்து நல்லவற்றை ஏற்றுக் கொள்ள வேண்டும். அதேநேரத்தில் நம்முடைய தேசபக்தியிலும், ஆன்மீகப் பண்பாட்டிலும் நாம் உறுதியுடன் வேர்கொண்டு நிற்க வேண்டும். ஸ்ரீராமர் வனம் போகும் போது அயோத்தி அரசின் எல்லைக்கு வந்தார். ஒரு கைப்பிடி மண்ணை எடுத்து, பெற்ற தாயும், பிறந்த பொன்னாடும் நற்றவ வானிலும் நனி சிறந்ததுவே என்று கூறினார்.

அமெரிக்க ஐக்கிய நாடுகளில் முதல் சுற்றுப் பயணம் செய்து விட்டு சுவாமி விவேகானந்தர் சென்னைக்கு வந்தார். அப்போது அவர் மண்ணில் விழுந்து புரண்டு கண்ணீருடன் பேசினார் என்று சொல்லப்படுகிறது. பல நாடுகளுக்குச் சென்று வந்தாலும், என்னுடைய தாயைப் போன்ற ஒன்றை நான் காணவே முடியவில்லை. அவர் ஐந்து நட்சத்திர விடுதியில் தங்கியபோதும், ஆடம்பரப் படுக்கையில் அவர் படுத்துறங்கவில்லை. கட்டாந்தரையில் படுத்து அவர் கண்ணீர் சிந்தி பாரத நாட்டில் பட்டினி கிடக்கும் ஏழைகளை நினைத்துக் கொண்டார். இத்தகைய தாய்நாட்டுப் பற்றும், பண்பாட்டில் மரியாதையும் நமக்கெல்லாம் உதாரணமாகத் திகழவேண்டும் – குறிப்பாக இளைஞர்களுக்கு நம்மைப் பெற்ற தாய் ஊற்றும் கஞ்சி மாற்றாந்தாயின் பாயசத்தை விடச் சுவையானது என்பதை நாம் மறந்து விடக்கூடாது. பாரதப் பண்பாட்டின் பெரும் செல்வங்களைப் பேராசையும், போக வாழ்வில் விருப்பமும் அரித்து தின்று கொண்டிருந்த காலக்கட்டத்தில் சுவாமி விவேகானந்தர் ஒரு அமுதக் குடத்துடன் நம் முன் தோன்றினார். அந்த அமுதம் ரிஷி பரம்பரையில் இருந்து அவர் பெற்றது.



இக்காரணத்தால் தான் சுவாமி விவேகானந்தர் குறைந்தகால கட்டத்தில் பாரத நாட்டிலும் உலகம் முழுவதிலும் இத்தகைய பெரும் பணியைச் சாதிக்க முடிந்தது.

சுவாமி விவேகானந்தரின் சொற்கள் மனிதகுலத்திற்கு பலமூட்டவல்லவை. தன்னம்பிக்கை ஊட்டவல்லவை. அதனால் மனிதகுலம் இமயமலை போன்ற தடைகளையும் எதிர்கொள்ள முடியும். கண்ணீர் நதிகளை நீந்திக் கடக்க முடியும். துயரப் பாலைவனங்களைத் தாண்டிக் கடக்க முடியும். சுவாமிஜி துன்பத்தையும், கஷ்டத்தையும் மிகப்பெரிய ஆசான்களாக ஏற்றுக் கொண்டார். அவர் வாழ்க்கையே ஒரு கலங்கரை விளக்கமாக விளங்கி நம்பிக்கையின்றி மூழ்கிக் கொண்டிருந்த மக்களுக்கு நம்பிக்கை ஒளியைக் காட்டிற்று. அவர் பிறக்குமுன் துறவு என்றால் உலகப் பிரச்சினைகளில் பற்றற்று முகத்தைக் திருப்பிக்கொள்ளுதல் என்று பொருளாக இருந்தது. சுவாமி விவேகானந்தர் தீவிரப் பற்றின்மையுடன் சேவை என்ற மனக்கூர்மையையும் இணைத்தார். அந்தச் சேவை அன்பின் இனிமையையும், வழிபாட்டின் நறுமணத்தையும் அடிப்படையாகக் கொண்டதாகும்.

பெட்டிச் செய்தி

# ரொம்பப் பெரிய விஷயம்

1) விஞ்ஞானிகள் நம் பால்வழியில் மட்டும் 5,000 கோடி கிரகங்கள் இருப்பதாகக் கணக்கிட்டுள்ளனர்.

2) ஐம்பது கோடி கிரகங்களின் தட்பவெப்பநிலை, அதிகச் சூடும் இன்றி, அதிகக் குளிரும் இன்றி இருக்கின்றன. இவற்றில் உயிரினங்கள் வாழ முடியும்.

3) கெப்ளர் டெலஸ்கோப் மூலம் அமெரிக்காவின் விண்வெளி ஆராய்ச்சி நிறுவனம் கிரகங்களின் எண்ணிக்கையைக் கணக்கெடுத்திருக்கிறது. இது ஒரு குத்து மதிப்புத்தான்.

4) கெப்ளர் இரவில் வானத்தில் 400 சில ஒரு பங்கு பரப்பளவைக் கணக்கில் எடுத்துக் கொண்டு, அதன் கண்டுபிடிப்புக்களை மற்ற பகுதிகட்கும் விரிவாக்கி உள்ளார்.

5) போரூக்கியும், சகவிஞ்ஞானிகளும் ''இரண்டு விண்மீன்களில் ஒன்றுக்கு, கிரகங்கள் இருக்கின்றன; 200 விண்மீன்களில் ஒன்றுக்கு உயிர்கள் வாழவல்ல கிரகங்கள் இருக்கலாம்'' என்று கணக்குப் போட்டிருக்கின்றனர்.

6) கிரகங்களும், நட்சத்திரங்களும், உயிர்வாழத் தகுதியானவற்றின் எண்ணிக்கை, இப்போது மனிதன் அறிந்திருப்பதை விட அதிகமாகவே இருக்கக்கூடும். ஏனெனில் பூமியில் இருந்து தொலைவில் இருக்கும் விண்மீன்கள், கிரகங்கள் பற்றிய நம் அறிவு குறைவானதே.

7) பல ஆண்டுகளாக, விஞ்ஞானிகள் 10,000 கோடி விண்மீன்கள் பிரபஞ்சத்தில் இருப்பதாகக் கணக்கிட்டிருந்தனர். 2010-இல் யேல் பல்கலைக்கழக விஞ்ஞானிகள் 20,000 கோடி விண்மீன்கள் இருக்கலாம் என்று கூறுகின்றனர்.

8) நாம் போட்டிருக்கும் கணக்குகள் (30,000 கோடி விண்மீன்கள் என்பதெல்லாம் நம் கேலக்ஸி பற்றிய கணக்குத்தான். படைப்பின் மொத்தம் 10,000 கோடி கேலக்ஸிகள் இருக்கின்றன.

# கேந்திர நிறுவனர் மா. ஏக்நாத்ஜியின் புனித வாழ்க்கை வரலாறு

## ஏக்நாத்ஜி

**ஆங்கிலம் : நிவேதிதா ரகுநாத் பிடே**
**தமிழ்: பொ. தங்கசுவாமி**

ஒரு அழகான மரம் – கேந்திரம் – வளரத் தொடங்குகிறது: புத்தக வெளியீட்டுத் துறையிலும் ஏக்நாத்ஜி பிரமாண்டமான திட்டங்கள் தீட்டியிருந்தார். கேந்திரம் ஸ்தாபிக்கப்பட்டபின்பு அதன் புத்தக வெளியீட்டுத் துறை செயல்படத் துவங்கியது. **விவேகானந்த கேந்திரப் பத்திரிக்கை** என்ற ஆறு மாதங்களுக்கு ஒருமுறை வெளிவரும் **பத்திரிக்கையும்** (எடுத்துக் கொண்ட ஒரு பொருள் பற்றிய கட்டுரைகள் அடங்கிய பத்திரிக்கை), **யுவபாரதி** என்ற ஆங்கில மாத இதழும் தொடக்கத்திலேயே ஆரம்பிக்கப்பட்டன. சமயம் கிடைக்கும் போதெல்லாம் ஏக்நாத்ஜி **"விவேகானந்த கேந்திரம் அழைக்கிறது"** என்ற தலைப்பில் தலையங்கம் எழுதுவது வழக்கம். சுவாமி விவேகானந்தரின் தீவிர



SHRI EKNATHJIRANADE
1914-1982

பக்தரான ஸ்ரீ அளசிங்கப் பெருமாள் **"பிரம்மவாதின்"** என்ற இந்திய தத்துவ சாஸ்திரத்தை அடிப்படையாகக் கொண்ட காலாண்டுப் பத்திரிக்கையைத் தொடங்கினார். அந்தப் பத்திரிக்கை சுவாமி விவேகானந்தரின் அவாவின்படி ஆரம்பிக்கப்பட்டது. இப்பத்திரிக்கை சுவாமிஜியின் உதவியால் வெளியிடப்பட்டு வந்தது. ஆனால், அதனை பின்னாட்களில் தொடர்ந்து நடத்த முடியாமல் போயிற்று. ஏக்நாத்ஜி அதை மீண்டும் வெளியிட விரும்பினார். தேவையான

அடிப்படை வேலைகளுக்குப் பின் அதை அவர் தொடங்கினார். **"கேந்திர பாரதி"** என்ற இந்தி மாத இதழும் தொடங்கப்பட்டது. இவ்வாறு நூல் வெளியிடும் பணி வளரத் தொடங்கியது.

ஆயுட்காலத் தொண்டர்களுக்காக ஏக்நாத்ஜி பொதுவாக இரண்டு தொடர் சொற்பொழிவுகளை நிகழ்த்தினார். ஒன்று விவேகானந்தர் பாறை நினைவாலயம் பற்றியது. இரண்டாவது சேவைப்பணியை ஆன்ம சாதனையின் பாவனையோடு செய்தால் எவ்வாறு அது சாதனை ஆகிறது என்ற பொருள் பற்றியது. பின்பு இந்த இரண்டு தொடர் சொற்பொழிவுகளும் புத்தக வடிவில் முறையே **த ஸ்டோரி ஆஃப் விவேகானந்த ராக் மெமோரியல் அஸ் டோல்ட் பை ஏக்நாத்ஜி, ஸாதனா ஆஃப் ஸர்வீஸ்** என்ற தலைப்பில் வெளியிடப்பட்டன. தொடக்கத்தில் பயிற்சி வகுப்பின்போது சங்கத்தின் **"ப்ராதஸ்மரண்"** முறையாகப் பாடப்பட்டு வந்தது. ஆனால் அவர் வடகிழக்கு மாநிலங்களின் சூழ்நிலையைக் கருத்தில் கொண்டு வேறு ஒரு **"ப்ராதஸ்மரண்"** வேண்டுமென்று விரும்பினார். அதன்படி திரு எஸ்.பி. வர்ணேகர்ஜிக்கு 03.04.1975 அன்று ஒரு கடிதம் எழுதினார். "பாஸிகாட்டில் சம்ஸ்கிருதத்தில் காலைப் பிரார்த்தனையை ஆரம்பிப்பது விரும்பத்தக்கது ஆகும். அது தற்போதைய காலை வணக்கத்திலிருந்து வேறுபட்டதாக இருக்க வேண்டும். தற்போதைய காலைப் பிரார்த்தனை நீண்டதாகவும், பல பெயர்களைக் கொண்டதாகவும் இருக்கிறது. அதற்குப் பதிலாக 12 வரிகளுக்கு மிகாமல் ஒரு சிறிய பாடலைப் பற்றி நான் யோசித்துக் கொண்டிருக்கிறேன். தாய்நாட்டைப் புகழ்ந்தும், மனப்பூர்வமான பிரார்த்தனையோடும் அது இருக்க வேண்டும். பாரத மாதாவை தருமத்தில் ஊன்றி நிற்பவளாகவும், உலகம் முழுவதற்கும் ஆன்மீக ஒளியைத் தருபவளாகவும் அந்தப் பிரார்த்தனை வருணிக்க வேண்டும். வந்தே மாதரத்தைப் போல பாரதத்தை வழிபடும் கருத்தைச் சொல்லும் ஒரு உதாரண ஸ்தோத்திரமாக அக்கவிதை இருக்க வேண்டும். நீங்கள் இத்தகைய கவிதை ஒன்றை இயற்றி முடிப்பீர்கள் என்று நான் நிச்சயமாக நம்புகிறேன்.

இதனுடன் சூரியக் கடவுளை வழிபடும் பிரார்த்தனை ஒன்றையம் தனியாக அறிமுகம் செய்ய வேண்டும். ஏனென்றால் அங்கு இருக்கும் மக்கள் சூரினையும், சந்திரனையும் வழிபடுபவர்கள்."

பின்பு ஸ்ரீ சங்கராச்சார்யரால் இயற்றப்பட்ட சிறிய **"ப்ராதஸ்மரண்"** அவசர நிலைக் காலத்தின் போது தேர்ந்தெடுக்கப்பட்டு கன்னியாகுமரியிலும் மற்ற கிளை மையங்களிலும் பாடப்பட்டது. சில வருடங்களுக்குப் பின், ஏக்நாத்ஜி டாக்டர் எஸ்.பி. வர்ணேக்கருடன் சேர்ந்து கேந்திரப் பிரார்த்தனையைத் தொகுத்தார். பயிற்சியாளர்கள் தங்களுடைய ஐந்து வருடப் பயிற்சியை முடித்ததும், ஏக்நாத்ஜி அவர்களுக்கு தீட்சை வழங்கும் விழாவுக்கு ஏற்பாடு செய்தார். கேந்திரத்தின் குருவான ஓம்காரத்தின் முன்னிலையில் ஆயுட்காலத் தொண்டர்கள் மந்திரங்கள் கிடைக்கப் பெற்றனர். 1978-இல் முதல் ஆயுட்காலத் தொண்டர்கள் குழுவினருக்கு தீட்சை வழங்கும் விழாவிற்குப் பின் கேந்திரத்தின் எல்லாக் கிளை மையங்களிலும் கேந்திரப் பிரார்த்தனை அறிமுகம் செய்யப்பட்டது.

1979 செப்டம்பரில் அருணாச்சல் பிரதேசில் உள்ள ஏழு விவேகானந்த கேந்திர வித்யாலயாவின் அனைத்து மாணவர்களுக்கான சங்கமம் ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டது. ஏக்நாத்ஜி அந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்டார். இந்த விவேகானந்த கேந்திர வித்யாலயாவின் அருணாச்சல் பிரதேச சின்னஞ்சிறார்கள் பல நிகழ்ச்சிகள் அவர்களுடைய அர்ப்பண உணர்வு கொண்ட ஆசிரியர்களின் வழிகாட்டுதல்படி நடத்திக் காட்டினர். அந்த நிகழ்ச்சியில் ஒன்று கோபி–கிருஷ்ணா நாட்டியம். அந்தச்சமயத்தில் அனைத்துப் பள்ளிகளும் ஆண்கள் மட்டும் பயிலும் பள்ளிகளாக இருந்ததால் சிறுவர்கள் கோபியர்களாக வேடம் பூண்டிருந்தனர். சிறுவர்கள் மிகவும் அழகாகவும், ஒய்யாரமாகவும் நடனமாடி பார்வையாளர்களின் பலத்த கரகோஷத்தைப் பெற்றனர். ஆசிரியர்கள் ஏக்நாத்ஜியிடமிருந்தும் அதே அன்புப் பாராட்டை எதிர்பார்த்தனர். ஆனால் அவர் ஆசிரியர்களுக்கு சுட்டிக் காட்டினார். அருணாச்சல் பிரதேச மக்கள் பலம் வாய்ந்தவர்கள், பராக்கிரமசாலிகள், அவர்களுடைய இயல்பான குணநலன்களை நாம் பராமரித்து வளர்க்க வேண்டும். சிறுவர்களை சிறுமிகள் போன்று நடனமாடச் செய்வது கேடு விளைவிக்கும் பயிற்சியாகும்; வருங்காலத்தில் இவ்வாறு செய்யாதிருக்குமாறு அவர் கூறினார்.

பள்ளி முதல்வர்களின் கூட்டத்தில் ஒவ்வொருவரும் எவ்வாறு விவேகானந்த கேந்திர வித்யாலயா பள்ளிகள் நன்கு நடைபெற்று வருகின்றன. எவ்வாறு உள்ளூர் மக்கள் அவற்றைப் பற்றி மகிழ்ச்சியாக உள்ளனர். எவ்வாறு அரசு நிர்வாகம் போற்றிப் புகழ்கிறது என்று தெரிவித்தனர். ஏக்நாத்ஜி அவர்கள் கூறியவற்றை சிறிதுநேரம் கேட்டுக் கொண்டிருந்த பின் கூறினார். நீங்கள் எல்லோரும் இருபத்து நான்கு மணிநேரமும் பள்ளியில் இருக்கும்போது வேறு என்ன நிகழவேண்டுமென்று எதிர்பார்க்கிறீர்கள்? பள்ளிகள் நன்கு நடைபெற்று வருகின்றன. அதில் என்ன சிறப்புத்தன்மை உள்ளது? நீங்கள் கூறுங்கள். நமது பள்ளிகளினால் சுற்றியுள்ள வேறு பள்ளிகள் முன்னேற்றம் அடைந்துள்ளனவா, அங்குள்ள சமுதாயம் அதனுடைய பாரம்பரியத்தின் மீது கொண்டுள்ள நம்பிக்கை வலுவடைந்துள்ளதா? கேந்திரத்தின் செயல்பாடுகள் சமுதாயத்தில் ஒருதாக்கத்தை உருவாக்க வேண்டுமென்றும் அது வெறும் ஒரு ‘‘நன்கு நிர்வாகிக்கப்படும்’’ செயல்பாடாக மட்டும் இருந்தால் போதாது என்று ஏக்நாத்ஜி எதிர்பார்த்தார்.

தொடர்ந்தாற்போல் பயிற்சியாளர்களின் அணிகள் பயிற்றுவிக்கப்பட்டு நாட்டின் பல பகுதிகளுக்கு அனுப்பப்பட்டன. இதனால் ஏக்நாத்ஜியின் பணி பல மடங்கு அதிகரித்தது. நாட்டின் பல பகுதிகளிலிருந்து தங்களுக்கென்று ஒரு சுயசிந்தனையை அமைத்துக் கொண்டு வரும் கார்யகர்த்தாக்களுக்கு பயிற்சி அளிக்க வேண்டும். ஆனால் அதுமட்டும் போதுமானதல்ல. தொடர்ந்து அவர்களுக்கு வழிகாட்டுவது, அவர்களது சிந்தனையை ஸ்தாபனத்தின்பால் திருப்புவது ஒரு கடினமான பணியாகும். அதற்குக் கூடுதல் கால அவகாசம் தேவைப்பட்டது.

ஏக்நாத்ஜி தன்னந்தனியாக பயிற்சியிலும், நன்கொடை திரட்டுவதிலும் கிளை மையங்களை ஆரம்பிப்பதிலும், மேலும் அது சம்பந்தமான அனைத்து தேவைகளிலும் கவனம் செலுத்த வேண்டியதிருந்தது. கேந்திரம் நிறுவப்படும் முன்பே பாறை நினைவாலயப் பணியாலும் ஏக்நாத்ஜி நாட்டில் உள்ள மிகவும் முக்கிய பிரமுகர்களோடு நடத்திய சீரான, உறுதியான பேச்சுவார்த்தைகளினாலும் கேந்திரம் எல்லோருக்கும் நன்கு அறிமுகமாகியிருந்தது. எனவே சமுதாயத்தின் எதிர்பார்ப்பு மிக அதிகமாயிருந்தது. அவர்களுடைய பகுதிகளில் பணி ஆரம்பிக்கப்படவேண்டும் என்ற வற்புறுத்தல்கள் ஏராளமாக இருந்தன. ஆகையால் பணி மிக வேகமாக விரிவடைந்தது. உண்மையில் பலர் உதவினர். ஆனால் அப்போதுதான் கேந்திரத்தின் காணும் திறன் விரிவடையத் தொடங்கியது. பிறருக்கு அதை உள்வாங்குவதற்கு நேரம் பிடிக்கும். மேலும் கேந்திரத்தில் இணைத்துக் கொண்ட பல இளம் பட்டதாரிகளுக்கு ஸ்தாபனச் செயல்முறை அனுபவம் புதிதாக இருந்தது.

ஏக்நாத்ஜிக்கு ஒன்று அல்லது இரண்டு அனுபவமிக்க ஆர்.எஸ்.எஸ். பிரச்சாரகர்களை கேந்திரப் பணிக்காக பெறும் எண்ணம் இருந்தது. அவர் திரு. லட்சுமண்ராவ் பிடே, திரு. சுதர்ஷன்ஜி மற்றும் திரு. சூர்யநாராயணராவ் ஆகியோரை தெரிந்தெடுத்ததாகத் தெரிகிறது. அதுபற்றி சங்கத்திடம் தெரிவித்தார். ஆனால் சங்கம் பல துறைகளில் வளர்சியடைந்து வந்ததால் இயல்பாகவே அதன் பணிகளுக்கே நிறையப்பேர் தேவைப்பட்டார். மேலும் அவசர நிலை காலத்தில் அடைந்த பணி பின்னடைவுகளால், ஆர்.எஸ்.எஸ். அந்த குறிப்பிட்ட ஸ்வயம் சேவகர்களை உடனேயே விடுவிக்க இயலாத நிலையில் இருந்தது. ஏக்நாத்ஜியை நன்கு அறிந்திருந்த ஆர்.எஸ்.எஸ். வரும் காலத்தில் அனேகமாக கேந்திரத்திற்குள்ளேயே தலைமையை அவரால் வளர்ச்சியடையச் செய்ய முடியும் என்று எண்ணியது. உண்மையில் ஏக்நாத்ஜியால் முடியும். ஆனால் அதற்கு கால அவகாசம் தேவைப்பட்டது. பரிணாம வளர்ச்சி முறையை துரிதப்படுத்த இயலாது. ஏக்நாத்ஜி கேந்திரத்தின் கார்யகர்த்தர்களுக்கு தொடர்ந்து பயிற்சி அளித்து வந்தார். கேந்திரப் பணியையும் தொடர்ந்து விரிவுபடுத்தி வந்தார். 1971-ல் ஏற்பட்ட மாரடைப்புக்குப்பின் ஏக்நாத்ஜிக்கு மீண்டும் 1973 மற்றும் 1976-ல் மாரடைப்பு ஏற்பட்டது. ஆனால் டாக்டர்களின் அனுமதி கிடைத்ததுமே மீண்டும் அவர் பணியில் மிகத்தீவிரமாக செயல்பட்டார்.


பெட்டிச் செய்தி

**ஸ்ரீ ஏக்நாத்ஜி** என்ற இந்த வாழ்க்கை வரலாற்று நூல் புத்தக வடிவில் **விவேகானந்த கேந்திரப் பிரகாசன் டிரஸ்ட், 5, சிங்கராச்சாரி தெரு, சென்னை - 600 005** என்ற முகவரியில் வெளியிடப்பட்டுள்ளது. விலை ரூ. 70/-

# சகோதரி நிவேதிதை

*திருமதி வி. ஜானகி புஷ்பம்*

*மங்கையர் வாழ்வில் மங்காத தீபமாய்*

''ஜகன்மாதாவின் உயிருள்ள வடிவங்களாகத் திகழும் பெண்களை உயர்வடையச் செய்தலே பாரதம் உயருவதற்குச் சரியான வழியாகும். அச்சமூட்டி அடக்கி வைத்திருப்பதனால் நமது தாய்மார்கள் இன்றைக்கு குள்ளநரிகள் போன்று ஆகிவிட்டனர். சிங்கங்கள் போன்று அவர்கள் பராக்கிரமம் படைத்து எழுந்திருக்கும் காலம் ஒன்று விரைவில் வரும். முறையான கல்வியறிவைப் பெண்கள் பெறவேண்டும்'' என்ற சுவாமிஜியின் வார்த்தைகள் நிவேதிதையின் உள்ளத்தில் எப்போதும் அலைமோதிக் கொண்டிருந்தன. அவள் இந்தியாவிற்கு வந்த நாள் முதலே அவளை இந்தியப் பெண்கள் மிகவும் கவர்ந்து விட்டார்கள். இந்தியப் பெண்களின் நாணமும், ஒதுங்குகின்ற சுபாவமும், மென்மையும் அன்பும், நளினமும் கண்டு அவள் வியந்து போனாள். இத்தகைய பெருமை வாய்ந்த பாரதப் பெண்கள் இன்று அந்நியர் ஆட்சியால் தங்கள் கலாச்சாரத்தை மறந்து மேல்நாட்டுக் கலாச்சாரத்தைப் பின்பற்றக்கூடிய அவலநிலைக்குப் போய்விடக்கூடாது. தங்கள் வீட்டுக் குழந்தைகளைச் சரியான நேரத்திற்கு பள்ளிக்கு அனுப்புவதில்லை. எனவே அவள் தாய்மார்களுக்கு முதலில் கல்வியறிவு புகட்ட விரும்பினாள். தன் பள்ளிக்கு குழந்தைகளை விட வரும் பெண்களிடம் மெதுவாகப் பேசிப்பழகி அவர்களுக்கு பொம்மை செய்தல், கைத்தையல், நூல்நூற்றல், வர்ணம் தீட்டுதல் போன்ற கலைகளை முதலில் அவள் கற்றுக் கொடுத்தாள்.



நிவேதிதா, சுவாமி விவேகானந்தர் முதல் சந்திப்பு

தன் பள்ளியில் துர்காபூஜையை விமரிசையாகக் கொண்டாட விரும்பிய நிவேதிதை, தன் பள்ளி மாணவிகளுடன் பெற்றோர்களையும் பூஜைக்கு வரும்படி ஏற்பாடு செய்தாள். வாசலில் போடப்பட்டிருந்த மாக்கோலம் அனைவரையும் கவர்ந்தது. காளிதேவி சிலைக்கு விசேஷ அலங்காரம் செய்யப்பட்டு, நிவேதனம் படைக்கப்பட்டிருந்தது. மாணவிகள் பஜனைப் பாடல்கள் பாடப்பாட, வந்திருந்த

பெற்றோர்கள் அனைவரும் சேர்ந்து பாட ஆரம்பித்தனர். நிவேதிதை தன் உரையில் நம் பாரதநாடு வீராங்கனைகளின் நாடு. சீதையும், சாவித்திரியும், உமையும், காந்தாரியும், பின்பற்றி வாழ்ந்த உன்னதக் குறிக்கோள்களை எண்ணிப் பாருங்கள். அத்தகைய வாழ்க்கை முறையை நீங்கள் வாழ்ந்து காட்டி, உங்கள் குழந்தைகளுக்கும் போதிக்க வேண்டும். அகல்யாபாய், லட்சுமிபாய் முதலிய வீரப்பெண்மணிகள் இறுதி மூச்சுவரை நம் பாரத நாட்டிற்காக ஆற்றிய தொண்டினைப் புரிந்து கொள்ளுங்கள். இத்தகைய வீரப் பெண்மணிகளை நாம் உருவாக்க வேண்டும். கடவுள் பக்தியும், கல்வியும் உள்ள தாய்மார்கள் வாழ்கின்ற வீட்டில் சிறப்பாகக் கொண்டாடவேண்டும். அப்போதுதான் நம் கலாச்சாரத்தின் மகிமைகளை நமது குழந்தைகளும் புரிந்து கொள்வார்கள் என்று கூறினாள். காளிதேவிக்கு சிறப்பு பூஜைகளும், தீபாராதனையும் நடைபெற்றன. அனைவரும் பக்திப்பூர்வமாக வழிபட்டனர். பிரசாதத்தை அனைவரும் வரிசையில் அமர்ந்து உண்டனர். மகிழ்ச்சியுடன் விடைபெற்றுச் சென்றனர். எவ்வளவு சிறப்பான பூஜை. நம் வீட்டில் கூட இப்படிச் செய்ய மாட்டோம். நம்முடைய பண்பாட்டை நமக்கு எவ்வளவு அழகாக எடுத்துக் கூறுகிறார்கள். நம் தெருக்குழந்தைகளை நிவேதிதா பள்ளியில் சேர்க்க நாம் ஏற்பாடு செய்ய வேண்டும், என்று தாய்மார்கள் தங்களுக்குள் வியந்து பேசிக் கொண்டே சென்றனர்.

ஒருநாள் நிவேதிதை கிறிஸ்டைனுடன் தம் பள்ளியைப் பற்றி பேசிக் கொண்டிருக்கையில், நம் பள்ளிக்கு நிறைய மாணவிகள் இப்போது வருகிறார்கள். அர்களுக்கு அவர்கள் தாய்மொழியிலேயே பாடம் புகட்ட வேண்டும். வங்கப் பெண்களை ஆசிரியப் பணியில் அமர்த்த வேண்டும் என்று கூறினாள். புஷ்பாதேவி என்ற பெண் நிவேதிதா பள்ளியில் சிறிதுகாலம் பணியாற்றினாள். அவர்களுக்கு திருமணம் ஏற்பாடானதும் அவள் பணியிலிருந்து விலகிவிட்டாள். இவ்வாறு சிலபெண்கள் பணியில் சேர்ந்தும், விரைவில் திருமண ஏற்பாடு நடைபெறுவதால் பணியிலிருந்து விலகுவதுமாய் இருந்தனர். சுதீராதேவி என் பெண் கிறிஸ்டைனுடன் நிவேதிதா பள்ளியில் பொறுப்பெடுத்துக் கொண்டாள். தன் நேரத்தில் பெரும் பகுதியை அவள் பள்ளிப் பணியில் செலவிட்டாள். விதவைப் பெண்களை ஆசிரியப் பணியில் அமர்த்தி, அவர்கள் வாழ்க்கையை, பயனுள்ளதாக நிவேதிதை மாற்றினாள். நிவேதிதை தன் வகுப்பு மாணவிகளுக்கும், உடற்பயிற்சி வகுப்புக்கும் ஏற்பாடு செய்தாள். பள்ளியில் மாணவிகளைக் கொண்டே அவள் ஒரு தோட்டம் போட்டாள். வகுப்பறையில் நிவேதிதை மாணவிகளிடம் கண்டிப்புடன் நடந்து கொள்வாள். நிவேதிதை வகுப்பில் பாடம் நடத்தும்போது மாலா என்றொரு மாணவி அடிக்கடி எழுந்து குதித்துக் கொண்டே வகுப்பில் நடக்கும் பாடங்களுக்கு சம்பந்தா சம்பந்தமில்லாமல் பதில் அளித்துக் கொண்டிருப்பாள். நிவேதிதை மாலாவைக் கண்டித்து பாடங்களை மற்றவர்களைத் தொந்தரவு செய்யாமல் கவனிக்கும்படிக் கூறினாள். மாலா அழுதாள். மாலா தன் பழக்கத்தை மாற்றிக்கொள்ளும்வரை நிவேதிதை அவளைப் பொருட்படுத்தவில்லை. ஒருநாள் மாலை ஒரு வீட்டில்

நடைபெறும் பண்டிகைக்குச் சென்றிருந்த நிவேதிதை மாலாவைச் சந்தித்தாள். மாலாவைத் தன் அருகில் வரும்படி அழைத்து தன் அருகில் அன்புடன் அமர்த்திக் கொண்டாள். மாலாவின் பயம் போயே போய்விட்டது. நிவேதிதையின் அன்பைப்பற்றித் தன் அம்மாவிடம் சொல்லி அவள் மகிழ்ந்தாள். இப்படி நிவேதிதைத் தன் உண்மையான அன்பால் மாணவிகளின் உள்ளத்தில் கல்வி ஒளியை ஏற்றினாள்.

நிவேதிதை தன் சிறிய அறையை மாணவிகள் செய்த விளையாட்டுப் பொம்மைகளாலும், வரைந்த ஓவியங்களாலும், சம்ஸ்கிருதம் எழுதிய பனை ஓலைகளாலும், அலங்கரித்து அழகுபட வைத்திருந்தாள். தன் அறையில் தன்னைச் சந்திக்க வரும் பெரிய மனிதர்களிடம் அவற்றைக் காட்டி அவள் மகிழ்வாள். நிவேதிதையைச் சந்திக்க வந்த ஓவியக்கலை வல்லுநர் ஆனந்த குமாரசாமி அந்த ஓவியங்களைக் கண்டு புகழ்ந்து பாராட்டி மகிழ்ந்தார். நிவேதிதை மாணவிகளுக்கு எடுக்கும் சரித்திர வகுப்புக்கள் மிகவும் சுவாரஸ்யமானவை. வகுப்பறையில் இருப்பதை மறந்து சரித்திர சம்பவம் நடைபெற்ற இடங்களுக்கே தனது வர்ணனையால் நிவேதிதை மாணவிகளை அழைத்துச் சென்று விடுவாள். பூரி, புவனேஸ்வர், சித்தூர், உஜ்ஜைன் ஆகிய இடங்களில் நடந்த வரலாற்றுச் சம்பவங்களை வர்ணிக்கும்போது மாணவிகள் அங்கேயே சென்று வந்தது போல உணர்ந்தார்கள். ராஜபுத்திரப் பெண்களின் வாழ்க்கைக் கதைகளை அவள் விவரித்துக் கூறி, பாரதத் தாயின் புதல்விகளே, நீங்கள் ராஜபுத்திரப் பெண்களைப் போல தைர்யம் உடையவர்களாக விளங்கவேண்டும் என்ற நிவேதிதை தன் மாணவிகளுக்குக் கூறினாள். சித்தூர் ராணி பத்மினியின் கதையைக் கூறி, தான் சித்தூருக்குச் சென்று வந்த அனுபவத்தை மாணவிகளுக்குக் கூறினாள்.

ஒருநாள் நிவேதிதை மாணவிகளை அழைத்துக் கொண்டு தட்சிணேஸ்வரத்திற்கு ஓடத்தில் சென்று கொண்டிருந்தாள். வேகமாக அலைவீசியதால் ஓடம் அங்குமிங்கும் வேகமாக ஆடியதைக் கண்டு மாணவிகள் பயத்தில் அலறிவிட்டனர். நிவேதிதை அவர்களிடம் பயப்படாதீர்கள். நல்ல ஓடக்காரன் நம் ஓடத்தை ஓட்டிச் செல்கிறான். வேகமான அலைகளுக்கிடையில் ஓடத்தை சாமர்த்தியமாக ஓட்டுவான் என்று நம்பிக்கை வையுங்கள். அதேபோல வாழ்க்கை என்னும் ஓடத்தில் கடவுள் நம்மை வழிநடத்துவார். வாழ்க்கையில் ஏற்படும் துன்பங்களைக் கண்டு நாம் பயப்படத் தேவையில்லை என்று கூறி, மாணவிகளின் பயத்தை நீக்கி, தைரியம் ஊட்டினாள். ஒருநாள் மாணவிகளை அழைத்துக் கொண்டு நிவேதிதை மிருகக்காட்சி சாலைக்குச் சென்றாள். ஒவ்வொரு மிருகமாகக் காட்டி அவற்றைப் பற்றி விளக்கம் அளித்து வந்தாள். கங்காருவின் அருகில் அவர்கள் வந்ததும், கங்காருக் குட்டிகளைச் சுட்டிக்காட்டி, கங்காருக் குட்டிகள் சந்தோஷமாகக் குதித்து வியைாடுவதைப் பாருங்கள். தன் பகைவரைக் கண்டதும் குட்டி தாவி தன் தாயின் மடியில் பாதுகாப்பாக அமர்வதைப் பாருங்கள்.

நமக்கும் நம் பாரதத்தாய் இருக்கிறாள். நமக்கு துன்பம் நேரும்போது. நம் தாயின் மடியில், சரண்புகுவோம். அவள் நம்மைக் காப்பாள் என்று நிவேதிதை கூறினாள்.

ஒருநாள் நிவேதிதை தன் மாணவிகளை தொல்பொருள் ஆராய்ச்சி ஞாபகச் சின்னங்கள் உள்ள அருங்காட்சியகத்துக்கு அழைத்துச் சென்றாள். அங்கு ஒரு சிறு பாறையில் கல்வெட்டு சாசனம் ஒன்று இருந்தது. அப்பாறையின் அருகில் அமர்ந்து பிரார்த்தனை செய்தால் ஆசைகள் நிறைவேறுமாம். அசோகர் இப்பாறையருகில் அமர்ந்து பிரார்த்தனை செய்வாராம். தன் மாணவிகளை அப்பாறையின் அருகில் அமரச் செய்து, பாரத நாட்டிற்காகப் பணியாற்ற வேண்டும் என்ற ஆசையை வேண்டிப் பிரார்த்தனை செய்ய நிவேதிதை கூறினாள். பேலூர் மடத்திற்கு நிவேதிதை தன் மாணவிகளை அழைத்துச் சென்று, அன்னை சாரதா தேவியை அடிக்கடி தரிசிக்கச் செய்து அன்னையின் ஆசிகளை அவர்கள் பெறும்படி செய்தாள். சுவாமி விவேகானந்தரின் வாழ்க்கை வரலாற்றையும், உபதேசங்களையும் மாணவிகளுக்கு எடுத்துக் கூறி சுவாமிஜியின் சிஷ்யைகளாக மாணவிகளை அவள் உருவாக்கினாள். சில பெண்களால் ஒழுங்காகப் படிக்க வரமுடியவில்லை. அவர்கள் பள்ளிக்கு தாமதமாக வருவார்கள். இன்னும் சில பெண்கள் அடிக்கடி விடுமுறை எடுப்பார்கள். அவர்கள் வீட்டிற்கு நிவேதிதை சென்று குடும்பத்தினருடன் அன்பாகப் பேசி அப்பெண்களின் கல்வி ஒழுங்காக நடைபெற ஏற்பாடு செய்தாள். கிரிபாலாகோஸ் என்ற இருபத்திரண்டு வயது விதவைப் பெண் தன் குழந்தையுடன் தன் மாமாவின் வீட்டில் வசித்து வந்தாள். அவள் நிவேதிதைப் பள்ளியில் சேர்ந்து படித்து வந்தாள். இந்த வயதில் அவள் பள்ளிக்குச் செல்வதை அக்கம்பக்கத்தவர்கள் கேலி செய்யவே, கிரிபாலாகோஷ் பள்ளிக்கு வரவில்லை. ஒருநாள் கிரிபாலாவின் பாட்டி நிவேதிதை பள்ளி வழியாகக் கங்கைக்கு குளிக்கப் போனாள். அப்படிச் செல்லும்போது பள்ளி மாணவிகள் பக்தியுடன் பாடும் பிரார்த்தனைப் பாடல்களைக் கேட்டாள். பாடல்களினால் லயித்துப் போன பாட்டி, இதுபோல தன் பேத்தி கிரிபாலாவும் பாடவேண்டும் என்ற ஆசையுடன் மீண்டும் கிரிபாலாவைப் பள்ளியில் சேர்த்தாள். கிரிபாலா நிவேதிதை பள்ளிக்கு ரிக்ஷாவில் சென்று வந்தாள். அவள் வீடு இருக்கும் தெரு மிகவும் குறுகலானது. அதனால் ரிக்ஷா அவர்கள் தெருவிற்குள் வரமுடியாது. கிரிபாலா அவர்கள் தெருவில் நடந்து வந்து ரிக்ஷாவில் ஏறி பள்ளிக்கு வரவேண்டும். சிலசமயம் அவள் நடந்து வருவதற்குள், ரிக்ஷா காத்திராமல் சென்று விடும். அன்று அவள் பள்ளிக்கு வரமாட்டாள்.

ஒருநாள் ரிக்ஷா ஒரு வீட்டின் சுவரில் இடித்து பழுதடைந்து விட்டது. ரிக்ஷா வராததால் கிரிபாலாவை அவள் மாமா பள்ளிக்கு அனுப்பவில்லை. நிவேதிதை கிரிபாலா கல்வியறிவு பெற்று அப்பள்ளிக்கு ஆசிரியையாக வரவேண்டும். கிரிபாலாவின் வாழ்வில் மாற்றத்தை ஏற்படுத்த வேண்டும் என்று விரும்பினாள். நிவேதிதை அவள் வீட்டிற்குச் சென்று அவள் மாமாவைச்

சந்தித்தாள். விதவைப் பெண்ணான கிரிபாலா தெருவில் நடந்து சென்று பள்ளிக்குச் செல்வதை நான் விரும்பவில்லை என்று மாமா நிவேதிதையிடம் கூறினார். நிவேதிதை அவரிடம் உங்கள் வீட்டுப் பெண்கள் குளிப்பதற்கு கங்கைக்குச் செல்கிறார்கள். ஆனால் பள்ளிக்கு அனுப்பக்கூடாதா? கிரிபாலாவின் வாழ்க்கையை கல்வி ஒளி கொடுத்து மலரச் செய்யுங்கள் என்று கூறினாள். நிவேதிதையின் சுயநலமற்ற அன்பு மாமாவின் மனதை மாற்றியது. கிரிபாலாவை பள்ளிக்கு அனுப்ப சம்மதித்தார். தான் கொண்டு வந்திருந்த சால்வையை நிவேதிதை கிரிபாலாவின் தோள்களில் போர்த்திவிட்டு இதைப் போர்த்திக் கொண்டு நீ பள்ளிக்கு வரவேண்டும் என்று அன்புடன் கூறினாள். கிரிபாலாவின் கல்வி தொடர்ந்தது. நிவேதிதை பள்ளியில் படித்த பெண்கள் அனைவரும் பண்பாட்டுடன் கூடிய கல்வியறிவைப் பெற்று, தங்கள் வாழ்வில் பெரும் ஆனந்தத்தை அடைந்தனர். சமுதாயப் பணிகளிலும் பெண்கள் பங்கு கொண்டனர். மங்கையர்கள் வாழ்வில் மங்காத தீபமாய் ஒளிவீசினாள் சகோதரி நிவேதிதை.

பெட்டிச் செய்தி

# நான் செய்த பிரார்த்தனையும், கடவுள் தந்த வரமும்

1) கடவுளிடம் நான் பலம் கேட்டேன். அவர் எனக்குக் கஷ்டங்களைக் கொடுத்து எனக்கு பலமூட்டினார்.

2) கடவுளிடம் நான் செல்வ வளம் கேட்டேன். அவர் எனக்கு மூளையையும், கைத்தசைகளையும் அருளினார். உழைத்துப் பிழைப்பதற்கு!

3) கடவுளிடம் நான் தைரியம் வேண்டினேன். அவர் எனக்கு ஆபத்துக்களை அளித்து அவற்றைத் தாண்டி வா என்றார்.

4) நான் கடவுளிடம் கேட்டது அன்பை. அவரோ என்முன் துன்பப்படும் மக்களை நிறுத்தி அவர்கட்கு உதவு என்றார்.

5) நான் கடவுளிடம் சலுகைகளைக் கேட்டேன்! அவர் எனக்கு வாய்ப்புக்களை அருளினார்.

நான் கேட்டது எதையும் அவர் தரவில்லை. எனக்குத் தேவையானது எல்லாம் எனக்குக் கிடைத்து விட்டது.

(எம். சுந்தரம்)

2009 - 2010-க்கான ஆசிரியர்களுக்கான கட்டுரைப் போட்டியில் முதல் பரிசு பெற்ற ஆக்கம், ஆங்கில மூலம் **திருமதி ஏ. டார்சிஸ், தாவரவியல் துறைத்தலைவர், சீதாலட்சுமி ஆச்சி மகளிர் கல்லூரி, பள்ளத்தூர்,** தமிழாக்கமும், சுருக்கமும் திருமதி செ. கலைச்செல்வா,

# புவி வெப்பமயமாதலின் விளைவுகளும், கட்டுப்படுத்தும் முறைகளும்

**முன்னுரை:** சுற்றுச்சூழலே மனிதனின் வீடாகும். அவன் வாழ்வதும் அந்தச் சுற்றுச்சூழலில்தான். அவன் சார்ந்திருப்பதும் அதையேதான். அவனைச் சுற்றுச் சூழலினின்று பிரிக்கவே இயலாது. எந்தப் பொருட்கள் சூழலின் மீது தூக்கி வீசப்படுகின்றதோ, அதன் விளைவே மனிதனின் மீது எதிரொளிக்கப்படுகிறது. மனிதன் தனது சுற்றுச்சூழலைத் தொந்தரவு செய்தால், அதுவும் பதிலுக்கு அவனுக்குத் தொந்தரவைக் கொடுக்கும். (மனித நடவடிக்கைகளால் ஏற்படும் காற்று மாசுபடும், புவி வெப்பமயமாகும். இவையே சுற்றுச்சூழலுக்கு மிகப்பெரும் தீங்காக அமைந்துள்ளன)

மாசுபாடு (பொல்லூஷன்) என்பது நாம் அறுவடை செய்ய இயலாத வளங்களே ஆகும். நாம் அவற்றைப் பரவ அனுமதித்திருக்கிறோம். ஏனெனில், நாம் சுற்றுச்சூழலின் மதிப்பினை இன்னும் அறிந்திருக்க வில்லை.

**மாசுபாடு ஏற்படுத்தும் சில காட்சிகளாவன:** 1) உலக தட்ப வெப்பநிலை மாறுபாடு, 2) அச்சுறுத்தும் மனித உடல்நலம், 3) தேய்கின்ற ஓசோன் அடுக்கு, 4) புவி வெப்பமயமாதல், 5) நிலைகுலைய வைக்கும் சூழ்நிலை மண்டலப் பாதிப்பு.

நமது புவிப்பரப்பில் கடந்த ஒரு நூற்றாண்டில் ஒரு டிகிரீ பாரன்ஹீட் வெப்பநிலை உயர்ந்துள்ளது. புவி வெப்பமயமாதல் என்பது புவியின் தரைப்பரப்பு மற்றும் வளிமண்டலத்தின் படிப்படியான வெப்பநிலை உயர்வைக் குறிக்கிறது.

சூடான புவியானது மழைப்பொழிவில் மாற்றங்கள், கடல் நீர்மட்ட உயர்வு மற்றும் மரங்கள், காட்டு வாழ்க்கை மூலம் மனித வாழ்வில் மிகப்பெரிய அளவிலான தீய விளைவுகளை ஏற்படுத்தும். அறிவியலாளர்களின் கருத்துப்படி, மனிதச் செயல்பாடுகளே அதிக அளவிலான புவி வெப்பமயமாதலுக்குக் காரணமாக அமைந்து, தட்பவெப்ப நிலையிலும் மாற்றத்தை ஏற்படுத்துகின்றன.

புதை படிவ (உதாரணம் நிலக்கரி, பெட்ரோலியம்) எரிபொருள்களின் பயன்பாடு, வாகனப் போக்குவரத்து மற்றும் காடுகளை அழித்து விளைநிலங்களாக்குதல் முதலிய செயல்களின் விளைவாக தற்போது கார்பன்-டை-ஆக்ஸைடு, மீத்தேன், நைட்ரஸ் ஆக்சைடு உள்ளிட்ட பசுமை இல்ல வாயுக்களின் அளவு அதிகரிக்கிறது. கடந்த இருபது ஆண்டுகளில் பசுமை இல்ல

விளைவானது அதிக அளவில் வளர்ச்சி அடைந்து இருக்கிறது. புவி வெப்ப மயமாதலானது பசுமை இல்ல வாயுக்களின் வெளியீட்டால் மட்டுமே நடந்திருக்கின்றது என்று நாம் நம்பலாம். அபரிமிதமான பசுமை இல்ல வாயுக்களின் அடர்த்தியானது இயற்கையான பசுமை இல்ல விளைவினை இப்புவியில் அதிகரித்திருக்கிறது. இதோடு கூட இவ்விளைவானது காட்டு வாழ்க்கை உயிரினங்களின் பல்லுயிர்ப் பண்புக் காடுகள், வேளாண்மை, நீர் ஆதாரங்கள் மற்றும் உடல் நலத்தையும் பாதிக்கிறது.

* * * * * * * * * * * * * * * * * * * *

வெள்ளைத் தாமரையின் இதழ்கள்

# பாரதப் பண்பாடு என்ன சொல்கிறது?

தொகுப்பு இல. நாராயணன்

**வெளியீடு – ஆதித்யா பதிப்பகம், எப் – 2, 'அஞ்சநாத்ரி' பிளாக் 2, 18 விசுவநாதபுரம் முதல் தெரு, சென்னை – 600 024, 272 – பக்கங்கள் விலை ரூ. 80/–**


பாரதப் பண்பாட்டில் வினா விடைக்கு முக்கியத்துவம், அதிகாரம் உண்டு. பல உபநிஷதங்கள், கீதை, சைவ சித்தாந்தம், வேதாந்த உரைகள், திருவாசகம் இவை முழுவதுமோ சில பகுதிகளோ வினாவிடையாக அமைந்தவை. ஆதிசங்கரர், சைவ சித்தாந்த உரையாசிரியர்கள் ஆகியோர் எதிர்க்கட்சியினர்கள் கேட்கக் கூடிய வினாக்களைத் தாமே எழுப்பி, எதிராளியின் ஆயுதங்களைப் பறித்துக் கொள்வதும் உண்டு. இயன்றவரை நம் தர்மத்தின் பல அம்சங்களைத் தர்க்கத்துக்கு உட்படுத்தி விடைகள் காண்பது தன் வாழ்க்கையின் முக்கியப் பணிகளில் ஒன்று என்பார் சுவாமி விவேகானந்தர்.

மதம் என்பதே தற்காலத்தில் நம்பிக்கை என்ற தளத்தில் இருந்து அறிவு, அனுபவம் ஆகிய தளங்களை நோக்கி நகர்ந்து கொண்டிருக்கிறது. பிரஜ்ஞை உணர்வு பற்றிய ஆராய்ச்சிகள் உலகளாவியவை. அவற்றில் வேதாந்தமும், சைவ சித்தாந்தமும் தம் நிலைகளை நன்கு தக்க வைத்துக் கொண்டிருக்கின்றன.

இல. நாராயணி தொகுத்துள்ள **பாரதப் பண்பாடு என்ன சொல்கிறது.** 'விஜய பாரதம்' வார இதழில் வந்த வினாவிடைத் தொகுப்பு.

கடவுள் உருவ வழிபாடு எனும் முதல் பகுதி, பல இறை வடிவங்கள் ஏன் என்பதை விளக்க முன் வருகிறது.

ஆகமங்கள், ஆலயம், வழிபாடு பற்றியது இரண்டாம் பகுதி. திருக்கோவில் பூஜை, ஜபம், தியானம் என்ற கருத்து மூன்றாம் பகுதியில் விளக்கப்பட்டுள்ளது.




வேதங்களைப் பற்றிய சுருக்கமான தகவல்களை நான்காம் பகுதி (42 பக்கங்களில்) தருகிறது. உயிர் பலி, புலால் உண்ணல், ஏன்? பற்றிய விபரங்கள் ஹிந்து மதம் என்ற பொதுத் தலைப்பில் பேசப்படுகின்றன.

மதங்களை ஒப்பிடுவது வரலாற்று ரீதியான கட்டாயம். அப்பணியை 6-ம் பகுதி செய்கிறது.

மரணத்திற்குப் பிந்தைய வாழ்வை, உபநிஷதம், கீதை, பிரம்ம சூத்திரங்கள் ஆகியவையும் வருணிக்கின்றன. 7-ம் பகுதி அதைப் பேசும்.

நம் காலக் கணக்கு முறை (பஞ்சாங்கம்) தொன்மையானது. அது அடுத்த பகுதியில் வருகிறது. கடைசிப் பகுதி (9) பிற தலைப்புகளில் அடங்காத விஷயங்களாகிய, தர்மமும், பெண்களும், சித்த வைத்தியம், சமய நிறுவனங்கள், மடங்கள், 64 கலைகள் முதலியவற்றை அலசுகிறது.

எளிமையை ஆழத்துடன் இணைக்கும் கடினமான பணி இந்நூலில் அழகுறச் செய்யப்பட்டுள்ளது. இரண்டே மாதங்களில் இரண்டாம் பதிப்பு விற்றுத் தீர்ந்திருப்பது, இந்நூலின் சுவைக்கு கிடைத்த வெற்றி. ஒன்றரை ஆண்டுகளில் மூன்றுப் பதிப்புக்கள் வெளியாகின்றன என்றால் சும்மாவா! இந்நூலைக் காசு கொடுத்து வாங்குங்கள்; வீட்டில் படியுங்கள், நண்பர்களுக்குப் பரிசாகக் கொடுங்கள். பயன் விரியும்.



# அலையும் துறவி

## ஆர்.சி. தாணு



204) ராத்திரி
கேத்ரி பயணம்.
ஆத்ம திருப்திக்காய்
கேத்ரி ராஜா
அடுக்கடுக்காய்
வினாக்களை
வீசினார்.

205) காலைக் கதிரவனை
சோலை மேகங்கள்
காலை கொண்டு
மறைக்க முடியுமா?
''வாழ்வு என்பது''
அஸ்தமிலாதது என
பந்தத்துடன் கொண்ட
பற்றினை அகற்றி
விடுதலை காண
சடுதியில் செய்யும்
அயரா முயற்சியே!

206) ''சமயம் என்பது?''
மனத்து மறைந்து
மாயமாய் நிற்கும்
தெய்வ சக்தியை
தெரியப்படுத்தி
வையகத்தை
மாண்புறச் செய்யும்
மகத்தான சாதனை!
''கல்வி என்பது?''
குறைகளைக் குளிப்பாட்டி
நிறை மனிதனை
நிரந்தரமாக்கும் கலை''

207) பதில்களால்
பக்குவமடைந்தார்
கேத்ரி ராஜா.
பாணினியின்
இலக்கணமும்
பக்குவமானது
சுவாமிக்கு.

208) இரஜபுதனம்
ஆங்கிலேயன் அகந்தை
அடக்கப்பட்ட இடம்.
செருக்கு
செயலிழந்து போன இடம்
கிண்டல்கள்
கிறுக்கலாய் போன இடம்.
ஆங்கிலேயர்
இருவருடன்
இரயில் பயணம்.

209) ஆங்கில மொழியை
அறிந்திரார் என எண்ணி
அந்நியர்
அவர்கள் மொழியில்
ஆத்ம நேயனை
அனலாய்ச் சுட்டெரித்தனர்
நிறுத்தம் ஒன்றில்
நீராவி என்சின் நின்றது.
நிறுத்தாமல் சுவாமியை
தவறாக நிறுத்துப் பார்த்தவர்கள்.
நிறுத்தத்தில் தமது
நிகழ்வுகளை நிறுத்தினர்.

# நோயில்லா வாழ்வில் உடலில் இயற்கை வேகங்களின் பங்கு

டாக்டர் வே. கணபதி எம்.டி – சித்தா

**சிறுநீர்:** சென்ற இதழில் சிறுநீர் எனும் உடலின் இயற்கை வேகம் பாதிக்கும் போது ஏற்படும் குறிகுணங்களுடன் மற்ற குறிப்புக்களையும் கண்டோம்.

**நோய்க்கணிப்பில் சிறுநீர்:** நோய் கணிக்க சித்தர்கள் அறிவுறுத்தும் எட்டுவிதத் தேர்வுகளில் ஒன்று சிறுநீர். சிறுநீரின் நிறம், மணம், நுரை, எடை அத்துடன் தொஞ்சல் எனப்படும், வெளிப்படும் சதைத்துணுக்குகள் இவைகளைக் கொண்டு குணம் கணக்கிடப்படுகிறது. இளம் வெளிர் நிறத்தில் நோயில்லா நிலையில் செல்லும் சிறுநீர் உடலின் உள்ளே நோய்நிலைகளால் மாற்றம் பெறும்போது சிறுநீரின் ஒட்டுமொத்தத் தன்மையும் மாற்றம் பெறுகிறது. பருகும் நீருக்கு ஏற்ப இதன் அளவு மாறுபட்டு இருந்தாலும் மிகத்தெளிவாக நோய்நிலையின் போது நீரின் தன்மை பேதப்படும். சிறுநீரில் சுத்தமான நல்லெண்ணெய் இட்டு, எண்ணெயானது சிறுநீரில் பரவும் தன்மையைப் பொறுத்து, சிறுநீர் நெய்க்குறி எனும் தன்மையின் கீழ் நோய்க் கணிக்கப்படுகிறது. நோய்க் கணிப்பதுடன், நோயாளியின் சாத்திய, அசாத்தியக் குறிகுணங்களும், மரணநிலைக் குறிகளும் கண்டறியப்படுகின்றன. மிகப்பெரிய தலைப்பிலுள்ள சிறுநீரைக் கொண்டு நோய்க்கணிக்கும் முறையை விவரிக்க வேண்டுமானால் ஏறத்தாழ 100 பக்கங்களுக்கு மேல் விரிக்கலாம். உடல் உள்நிலையை சிறுநீர் எனும் இயற்கை வேகம் எளிதில் காட்டிவிடும்.

**மருத்துவத்தில் சிறுநீர்:** பல நோய் நிலைகளை நீக்கவும் சிறுநீர் மருந்தாகப் பயன்படுகிறது. ''அமுரிநீர் தாரணை'' என்ற தலைப்பில் கீழ் சிறுநீர் பருகும் நிலை தெளிவாக சித்தர் நூற்களில் விளக்கப்படுகிறது. நோய் வராது காக்கும் காயகற்ப நிலைக்கும், விஷக்கடி உள்ளிட்ட நச்சுக் கடிக்கும், மயக்கம், பைத்திய ரோகம் ஆகிய நிலைக்கும் சிறுநீர் உயர்ந்த மருந்தாக தற்போதும் வழக்கில் இருந்து வருகிறது. எட்டு வயதுக்குட்பட்ட ஆண், பெண் குழந்தைகளின் சிறுநீர் மிகச்சிறந்த மருந்தாகக் கருதப்படுகிறது. தற்போது சிறந்த ''ஆண்டிடோட்'' என நிரூபிக்கப்பட்டுள்ளது.

**சிறுநீர் சுத்தி:** சிறுநீரை சுத்தப்படுத்தும் உத்தி நமது பாரம்பரிய மருத்துவத்தில் கூறப்பட்டுள்ளது. அதிகாலையில் நோயில்லாத நிலையில் பெறப்பட்ட சிறுநீரை

மெல்லிய காடாத்துணியில் வடிகட்டி எடுத்துக்கொள்ள வேண்டும். இந்த வடிகட்டுதல் நான்கு முதல் 11 தடவை வரை வடிகட்டி எடுத்துக் கொள்ள வேண்டும். சிறுநீரை ஒருநாழிகைக்குள் (24 நிமிடத்திற்குள்) மருந்தாக வழங்க வேண்டும் என்பது நியதி.

1) சிறுநீரை ஒரு பாத்திரத்தில் பிடித்து அடுப்பில் ஏற்றி காய்ச்சும் போது ஏற்படும் சிறுநீரின் மணத்தைக் கொண்டும் சிறுநீரின் குணம் அறியப்படுகிறது. அதேபோல ஈ, எறும்பு சிறுநீரில் மொய்க்கும் நிலை கொண்டும் நோய்க் கணிக்கப்படுகிறது.

**பொதுக் குறிப்புக்கள்:** 1) தற்காலத்திலும் சிறுநீரை சிறிதுநேரம் கூட அடக்கி வைக்கும் தன்மை பெரும்பாலான மக்களிடம் குறைந்து வருகிறது. எந்த காலநிலை, சூழ்நிலை இருந்தால் சிறுநீர் வெளிப்படும் உணர்ச்சி வந்தது. எனில் உடனடியாகக் கழிக்க வேண்டும் என்ற நிலையிலிருப்போரும், சிறுநீர் கழிக்க ஆயத்தமாகும் முன்பு அதிவிரைவாக சிறுநீர் ஆடைகளில் நனைந்து விடுவதும் வழக்கில் காண்பது அதிகமாகி விட்டது. இதற்கு முக்கிய காரணம் சிறுநீர் எனும் இயற்கை வேகம் நமது உடல் உஷ்ண நிலையால் மாறுபட்டு இருப்பது தான். ஒரு காலத்தில் மேற்கூறிய நிலை வயோதிகர்களிடம் மட்டும் இருந்தது உண்மை. ஆனால் தற்போது இளவயதினரிடமும் இருப்பது மனஉளைச்சல், தீவிரப் படபடப்பு ஆகியன காரணமாகும். இதற்குத் தீர்வு சிறுநீர் செல்லவேண்டும் என்ற உணர்வு வந்தவுடன் அதனைக் கழித்துவிடவேண்டும்.

2) பெண்களுக்கு மேகப்போக்கு எனும் மேக வெள்ளை சிறுநீர் அதிகநேரம் அடக்கி வைப்பதாலும் ஏற்படுகிறது. எங்ஙனம் எனில் சிறுநீரை அடக்க, அடக்க அதன் உஷ்ண வேகம் அதிகப்பட்டு, அருகிலுள்ள கருப்பைச் சுவரிலும் உஷ்ண உந்துதல் ஏற்பட்டு வெள்ளைப் போக்கு வரக் காரணமாகிறது. இதற்குத் தீர்வு எண்ணெய்க்குளியல் அல்லது தொப்பூழ் பகுதியில் விளக்கெண்ணெய், அல்லது பசுநெய் தடவல் முக்கியமானதாகும்.

3) மலத்தை வெளியேற்ற பேதிக்கு மருந்துகள் எடுத்து உடலை சுத்தப்படுத்துவது போல் சிறுநீரை வெளியேற்ற சிறுநீர் பேதியும் மேற்கொள்ளப்படவேண்டும். இதற்கு துணையாக இருப்பவை இளநீர், மோர், நீர்க்கஞ்சி வகை உணவுகள், வெள்ளரிக்காய், சுரைக்காய், நீர்ப்பூசணிக்காய், பார்லி, சோம்பு மற்றும் பல மருந்துகள் ஆகும். அவற்றை உடல் நிலைக்கு ஏற்ப உண்டு நீர்ப்பேதி உண்டாக்கப் படவேண்டும்.


4) சிறுநீரகத்திற்குள் சிறுசிறு கற்கள் ஏற்படுவது தற்போது சாதாரணமாகிவிட்டது. சிறுநீரகப்பாதை, சிறுநீர்ப்பை இவைகளில் கற்கள் ஏற்படுவது இயல்பு என்றாலும் சிறுநீரகத்திற்குள்ளேயே அவை ஏற்படுவது சிறுநீரகம் அதிகளவில் உஷ்ண நிலையில் இருப்பது காரணமாகும். இதைப் போக்கவே நீர்ப்பேதி மேற்கொள்ள வேண்டும்.

5) சிறுநீரின் இயற்கை வேகம் சரிவரச் செயல்படுவதற்கு உடல் பயிற்சி மிக அவசியம். சிறுநீரின் பணியை தோல் குறைக்கும் என்றாலும் சிறுநீர் சற்று மாறுபட்டு உடலுக்குச் சென்றால் அதனால் ஏற்படும் யூரியா, யூரிக் அமிலம் இவற்றை இரத்தத்திலிருந்து வெளியேற்ற நாம் என்ன பாடுபடவேண்டும் என்பதை அனைவரும் அறிவோம். ஆக இரத்தத்தில் சிறுநீர் தன்மை மிகாமல் இருக்க உடற்பயிற்சி மிக அவசியம் என்பதை உணர்ந்து கடைப்பிடிக்க வேண்டும்.

6) சிறுநீரின் அபானத் தன்மையைச் சீரழிக்கக் காரணமாகும் முதல் உணவு ''மாறுபட்ட அசைவ உணவு''. பிற உயிரின் உடல் சதையை உணவாக உட்கொள்ளும் போது சிறுநீரகத்தின் பணி பளு அதிகமாகும். மிகக் கடினப்பட்டு அந்த உணவின் கழிவையும் நம் உடலின் கழிவுடன் வெளியேற்ற பாடுபடும். இறுதியில் சிறுநீரின் இயற்கை வேகம் பாதிப்படையும். இதனால் சிறுநீரகப் பிணிகள் இரத்தத்துடன் ஏற்படுத்தும். எனவே அசைவ உணவைத் தவிர்க்க முயலுதல் நல்லது. தற்காலத்தில் சிறுநீரகப் பிணியாளர்கள் அதிகமாவதற்கு இது முதற் காரணமாகும் என்பதை அறிவோம்.

7) நமது சிறுநீரை உற்பத்தி செய்யும் சிறுநீரகங்கள் அண்டத்திலுள்ள சுக்ரனுக்கு (வெள்ளிக்கிரகம்) இணையானது. வெள்ளிக்கிரகம் போல் சிறுநீர் வெளிப்பட வேண்டும் என்பது உண்மை.

மொத்தத்தில் சிறுநீரை வெளியேற்றும் அபான வாயு தென்றலாக வீசி, சிறுநீர் வெளியேற்றப்பட வேண்டும். புயலாக வீசினாலோ, சுழல் காற்றாக இருந்தாலோ அல்லது காற்றின்றி இருந்தாலோ சிறுநீரின் இயற்கை வேகம் பாதிப்படையும். எனவே சிறுநீர் கழிக்கவும் நேரம் ஒதுக்குவோம். முழுமனதுடன் சுகமாக கழிப்போம். இல்லையெனில் வேகமாகச் செல்லும் நமது வாழ்வில் அது பெருந்தடைக்கல்லாக இருந்து விடும்.



**விவேகானந்த கேந்திரம் – கன்னியாகுமரி**

**கிராம முன்னேற்றத்திட்டம், ஏக்நாத் பவன், 7 – பி, சிவந்தாகுளம் முதல் தெரு, தூத்துக்குடி – 628 003, தொலைபேசி: 0461 – 2376666,**

**ஈமெயில்:** rdp@vkendra.org

## பள்ளி, ஆசிரியர்களுக்கான கட்டுரைப் போட்டியில் பரிசு பெற்ற ஆசிரிய, ஆசிரியைகளுக்கான விபரப் பட்டியல் (2010–11)

**தலைப்பு:** 'குடிபோதை, தீய தொலைக்காட்சிகள், தீய திரைப்படங்கள் இவை தனி மனிதரையும், குடும்பத்தையும், சமுதாயத்தையும் எப்படி பாதிக்கின்றன? அத்தீய விளைவுகளை எதிர்கொண்டு தடுத்து நிறுத்தும் சக்தியை, தனிமனிதரும், குடும்பமும், சமுதாயமும் எப்படிப் பெறுவது?'

**முதல் பரிசு:** திரு. பூ. குமார், முதுகலை ஆசிரியர், அரசு மேல்நிலைப்பள்ளி, உமரிக்காடு – 628 151, தூத்துக்குடி மாவட்டம்

**இரண்டாம் பரிசு:** செல்வி/திருமதி ச. ரேவதி, ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி, தேவர்குளம், மேலநீலிதநல்லூர் ஒன்றியம், திருநெல்வேலி மாவட்டம்.

**மூன்றாம் பரிசு:** செல்வி/திருமதி கு. சாந்தி லெட்சுமி, ச.வெ. அண்ணாமலையம்மாள் நடுநிலைப்பள்ளி, விருதுநகர் – 626 001.

**நான்காம் பரிசு:** செல்வி/திருமதி செ. அகஸ்டா ஜான்சி ராணி, ச.வெ.அண்ணாமலையம்மாள் நடுநிலைப்பள்ளிகள், விருதுநகர் – 626 001.

**ஐந்தாம் பரிசு:** செல்வி/திருமதி பா. வசந்தா, ஸ்ரீதேவி பெண்கள் மேல்நிலைப்பள்ளி, கொல்லம்கோடு, கன்னியாகுமரி மாவட்டம் – 629 160.

**ஆறுதல் பரிசுகள்:** 1) செல்வி/திருமதி ஏ. சுபா, லக்ஷ்மி வித்யா நிகேதன் மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி, அம்பாசமுத்திரம் – 627 401, 2) செல்வி/திருமதி இரா. சுப்புலட்சுமி, இடைநிலை ஆசிரியை, ஸ்ரீராவ் பகதூர் எ.கா.த. தர்மராஜா பெண்கள் மேல்நிலைப்பள்ளி, இராஜபாளையம் – 626 117, 3) திரு. அப்துல் காதர், முதுகலை பட்டதாரி, ஸ்ரீ வீரப்பா வித்யாலய மேல்நிலைப்பள்ளி, குல்லூர்சந்தை – 626 053, விருதுநகர் மாவட்டம், 4) செல்வி/திருமதி கி. ஜெயந்தி, தமிழாசிரியை, அரசு மேல்நிலைப்பள்ளி, களக்காடு – 627 501, 5) திரு. ஜி. வேல்மயில், ஸ்ரீ ஜெயேந்திரா வித்யாலயா, கொட்டாரம் ரோடு, செங்கோட்டை – 627 809, 6) செல்வி/திருமதி பா. பத்மாவதி, கணித ஆசிரியை,

ஸ்ரீராவ் பகதூர் எ.கா.த. தர்மராஜா பெண்கள் மேல்நிலைப்பள்ளி, இராஜபாளையம் – 626 117, 7) செல்வி/திருமதி பெ. சுப்புலட்சுமி, உடற்கல்வி இயக்குநர், ஸ்ரீராவ் பகதூர் எ.கா.த. தர்மராஜா பெண்கள் மேல்நிலைப்பள்ளி, இராஜபாளையம் – 626 117, 8) செல்வி/திருமதி வி. பிரியா, உடற்கல்வி ஆசிரியை, ஸ்ரீராவ் பகதூர் எ.கா.த. தர்மராஜா பெண்கள் மேல்நிலைப்பள்ளி, இராஜபாளையம் – 626 117, 9) செல்வி/திருமதி அ. குளோரி, ஆசிரியை ஸ்ரீரெங்க நாயகர் ஆரம்பப் பாடசாலை, கோவிலூர், தேவதானம் அஞ்சல் – 626 145, விருதுநகர் மாவட்டம், 10) செல்வி/திருமதி எம். பொன்னம்மாள், விவேகானந்த கேந்திர வித்யாலயா மெட்ரிகுலேசன் மேல்நிலைப்பள்ளி, ஏர்வாடி ரோடு, வள்ளியூர் – 627 117, திருநெல்வேலி மாவட்டம், 11) செல்வி/திருமதி மு. உமாபொன்னு, ஸ்ரீராவ் பகதூர் எ.கா.த. தர்மராஜா பெண்கள் மேல்நிலைப்பள்ளி, இராஜபாளையம் 626 117, 12) செல்வி/திருமதி ரா. லெட்சுமி, ச.வெ. அண்ணாமலையம்மாள் நடுநிலைப்பள்ளி, விருதுநகர் 626 001, 13) செல்வி/திருமதி கு. விஜயலெட்சுமி, ச.வெ. அண்ணாமலையம்மாள் நடுநிலைப்பள்ளி, விருதுநகர் – 626 001, 14) செல்வி/திருமதி ஏ. மரிய ஜான்சி, ஸ்ரீ ஜெயேந்திரா வித்யாலயா, கொட்டாரம் ரோடு, செங்கோட்டை – 627 809, 15) செல்வி/திருமதி த. மாலதி, அரசு உயர்நிலைப்பள்ளி, நல்லூர், கன்னியாகுமரி மாவட்டம் – 629 704, 16) செல்வி/திருமதி ச. வளர்மதி, ச.வெ. அண்ணாமலையம்மாள் நடுநிலைப்பள்ளி, விருதுநகர் – 626 001, 17) செல்வி/திருமதி ஆ. விநாயக சுந்தரி, தலைமை ஆசிரியர், சங்கரக்குமார் தொடக்கப்பள்ளி, கோவில்பட்டி, 18) செல்வி/திருமதி வீ. வீரலட்சுமி, உடற்கல்வி ஆசிரியை, அரசு மேல்நிலைப்பள்ளி, கீழராஜகுலமான் – 626 136, 19) செல்வி/திருமதி இரா. இன்பவல்லி, விவேகா நர்சரி மற்றும் பிரைமரி பள்ளி, சுந்தரபாண்டியம், விருதுநகர் மாவட்டம் – 626 126, 20) செல்வி/திருமதி செ. உயில்சி, ச.வெ. அண்ணாமலையம்மாள் நடுநிலைப்பள்ளி, விருதுநகர் – 626 001, 21) திரு. கே. சந்தான கிருஷ்ணன், எம்.ஜி பப்ளிக் மேல்நிலைப்பள்ளி, 2/164, பேராவூர், திருச்சி – ராமேஸ்வரம் என்.ஹெச். ரோடு, ராமநாதபுரம் – 623 504, 22) செல்வி/திருமதி இரா. சிவசங்கரி, எம்.ஜி பப்ளிக் மேல்நிலைப்பள்ளி, 2/164, பேராவூர், திருச்சி – ராமேஸ்வரம் என்.ஹெச். ரோடு, ராமநாதபுரம் – 623 504, 23) செல்வி/திருமதி கி. அம்புஜம், ஓவிய ஆசிரியை, ஸ்ரீராவ் பகதூர் எ.கா.த. தர்மராஜா பெண்கள் மேல்நிலைப்பள்ளி, இராஜபாளையம் – 626 117, 24) செல்வி/திருமதி வி. காளீஸ்வரி, உதவி ஆசிரியை, ச.வெ. அண்ணாமலையம்மாள் நடுநிலைப்பள்ளி, விருதுநகர் – 626 001, 25) செல்வி/திருமதி ரா. லீலாவதி, விவேகா நர்சரி மற்றும் பிரைமரி பள்ளி, சுந்தரபாண்டியம், விருதுநகர் மாவட்டம் – 626 126, 26) செல்வி/திருமதி இரா. செல்வி, ச.வெ. அண்ணாமலையம்மாள் நடுநிலைப்பள்ளி, விருதுநகர் – 626 001, 27) ஜெ. கார்திகைச் செல்வி, ச.வெ. அண்ணாமலையம்மாள் நடுநிலைப்பள்ளி, விருதுநகர் – 626 001, 28) செல்வி/திருமதி பு. வீரச்செல்வி, ஆசிரியை, ஸ்ரீரெங்க நாயகர் ஆரம்பப்

பாடசாலை, கோவிலூர், தேவதானம் அஞ்சல் – 626 145, விருதுநகர் மாவட்டம், 29) செல்வி/திருமதி ஜி. ராதாபாய், நேஷனல் மழலையர் மற்றும் தொடக்கபள்ளி செபத்தையாபுரம் – 628 251, தூத்துக்குடி மாவட்டம், 30) செல்வி/திருமதி ர. மாலதி, அரசு மேல்நிலைப்பள்ளி, ஆரல்வாய்மொழி – 629 301, கன்னியாகுமரி மாவட்டம், 31) செல்வி/திருமதி ச. கலைச்செல்வி, பயோனியர் பள்ளி, வெட்டூர்ணிமடம், நாகர்கோவில் – 3, 32) செல்வி/திருமதி உ. மணிமேகலை, முதுகலை ஆங்கில ஆசிரியை, ஸ்ரீராவ் பகதூர் தர்மராஜா பெண்கள் மேல்நிலைப்பள்ளி, இராஜபாளையம், 33) செல்வி/திருமதி அ. செல்வராணி, பாரதி பாலர் தொடக்கப்பள்ளி, இராமசாமி நகர், விருதுநகர் மாவட்டம், 34) செல்வி/திருமதி வே. சாந்தினி, கலைமகள் தொடக்கப்பள்ளி, திருத்தங்கல், 35) செல்வி/திருமதி கா. முத்துலட்சுமி, ஊராட்சி ஒன்றிய துவக்கப்பள்ளி, படந்தால் – 626 203, 36) செல்வி/திருமதி எம். பிரபாவதி, கிரீன் ஃபீல்ஸ் நர்சரி & துவக்கப்பள்ளி, வத்திராயிருப்பு – 626 132, 37) செல்வி/திருமதி கு. கந்த யோகேஸ்வரி, பாரதி பாலர் தொடக்கப்பள்ளி, இராமசாமி நகர், விருதுநகர் மாவட்டம், 38) திரு ஆர்.ஏ.வி. ஜெயராமன், காந்தி வித்யாலயம் மேல்நிலைப்பள்ளி, இராமசாமிநகர், விருதுநகர் மாவட்டம் – 626 159, 39) செல்வி/திருமதி ம. சண்முக லட்சுமி, பாரதி பாலர் தொடக்கப்பள்ளி, இராமசாமி நகர், விருதுநகர் மாவட்டம்.

**விவேகானந்த கேந்திரம் – கன்னியாகுமரி**

**கிராம முன்னேற்றத்திட்டம், ஏக்நாத் பவன், 7 – பி, சிவந்தாகுளம் முதல் தெரு, தூத்துக்குடி – 628 003, தொலைபேசி: 0461 – 2376666,**

**ஈமெயில்:** rdp@vkendra.org

## கல்லூரி ஆசிரியர்களுக்கான கட்டுரைப் போட்டியில் கலந்து கொண்ட ஆசிரிய, ஆசிரியைகளுக்கான விபரப் பட்டியல் (2010–11)

**ஆறுதல் பரிசு:** 1) செல்வி/திருமதி ஆர். தெய்வ வீரலெட்சுமி, பேராசிரியை, கோவிந்தம்மாள் ஆதித்தனார் மகளிர் கல்லூரி, திருச்செந்தூர்.30) செல்வி/திருமதி ர. மாலதி, அரசு மேல்நிலைப்பள்ளி, ஆரல்வாய்மொழி – 629 301, கன்னியாகுமரி மாவட்டம், 31) செல்வி/திருமதி ச. கலைச்செல்வி, பயோனியர் பள்ளி, வெட்டூர்ணிமடம், நாகர்கோவில் – 3,



## 17.02.2011 முதல் 20.02.2011 வரை கன்னியாகுமரியில் நடைபெற்ற குழந்தைகள் கலைவிழாவில் முதல் பரிசு பெற்ற செல்வன் விஜய நம்பியின் உரை

ஆக்கியோர் இரா. அழகுமுத்து

# நம் பண்பாட்டையும், கலாச்சாரத்தையும் கட்டிக் காத்த லட்சியப் பெண்மணிகள்

அனைவருக்கும் வணக்கம்!

''பாருக்குள்ளே நல்ல நாடு – எங்கள் பாரத நாடு'' என்று பாடினார் மகாகவி பாரதியார். நமது பாரதம் இந்த உலகத்தை வெற்றி கொண்டே ஆகவேண்டும். இதில் வேறு எந்தப் பேச்சுக்கும் இடமே இல்லை என்று வீர முழக்கமிட்டார் சுவாமி விவேகானந்தர்.

இதற்கெல்லாம் காரணம் மேலை நாடுகளில் இல்லாத உயர்ந்த பண்பாடும், கலாச்சாரமும் நமது பாரம்பரியத்தில் இருந்ததேயாகும். இத்தகைய பண்பாட்டையும், கலாச்சாரத்தையும் கட்டிக் காத்த லட்சியப் பெண்மணிகள் இதோ வருகிறார்கள்! அவர்களைக் கைகூப்பி வணங்குவோம்.

'மங்கையராகப் பிறப்பதற்கே – நல்ல
மாதவம் செய்திடல் வேண்டுமம்மா' என்று பாடினார் கவிமணி தேசிய வினாயகம் பிள்ளை.

எங்கள் புனித பாரதத்தில் பிறந்த பெண்களே! நீங்கள் செல்வத்தை இழந்தாலும் தாங்கிக் கொள்வீர்கள், சீரிய வாழ்வை இழந்தாலும் தாங்கிக் கொள்வீர்கள், ஆனால் உங்களின் மாங்கல்யத்திற்கு ஒரு மரியாதைக் குறைவு என்றால் உமிழ்ந்து நீரைக்கூட சாம்பலாக்கி விடுவீர்கள் என்பது பாரத வரலாறு கண்ட உண்மை.

சத்தியத்தின் சாகாவரம் பெற்ற அரிச்சந்திரனின் மனைவி சந்திரமதியே! உனது கணவரைப் பிரிந்த போது நீ கனலை வீசவில்லை! மகன் இறந்தபோதும் கூட நீ மரித்துப் போய் விடவில்லை. அரிச்சந்திரனே என்பது கூடத் தெரியாமல் சுடுகாட்டில் பிணத்தை எரிக்கின்ற ஒரு புலையனின் கண்களுக்கு உனது மாங்கல்யம் தெரிந்து விட்டதே என்று நீ கதறிக் கதறி அழுதாயே. அங்கு தான் நீ பாரதத்தின் பண்பாட்டைக் காத்தாய்! பாரதத்தின் கலாச்சாரத்தைக் காத்தாய்.

'வள்ளுவனும் வாசுகியும் போல் வாழ்க' என்று கூறுவது வார்த்தை ஜாலங்கள் அல்ல! அவை வாழ்வின் அர்த்தங்கள். 'நாயே' என்று ஒரு கணவனை மனைவி திட்டிவிட்டால் அதோடு அவனின் மரியாதையான வாழ்வு முடிந்து விட்டதாக அர்த்தம். கணவனிடம் பெண்கள் எப்போதும் மரியாதையாகவும், இனிமையாகவும் பேசவேண்டும் என்பது நமது பண்பாடு.

வள்ளுவனின் வாழ்க்கையிலே வாசுகி ஒருநாள் கூடச் சுடுசொல் கூறவில்லை. உலகம் போற்றும் திருக்குறளை அவர் எழுதுவதற்கு உறுதுணையாக இருந்தார். உனக்கு வேறு பிழைப்பே கிடையாதா என்று வள்ளுவரைப் பார்த்து வாசுகி கூறியிருந்தால் ஏடும், எழுத்தாணியும் எங்கோ பறந்திருக்கும்.



ஐயோ திருவள்ளுவரே. திருக்குறளை நீங்கள் எழுதவில்லை. உங்களது மனைவி காட்டிய அன்பும், பண்பும், கலாசாரமும், பண்பாடும் தான் எழுத வைத்தன. அதனால்தான் பாரதிதாசன் கூட

'வண்மை உயர்வு மனிதர் நலமெல்லாம்

பெண்மையினால் உண்டென்று பேசவந்த பெண்ணழகே' என்று பாடினார்.

இந்த இப்பிறவிக்கு இருமாதரைச் சிந்தையிலும் தொடேன் என்று இராமன் கூறியது அதிசயம் இல்லை. இராமன் தடுக்கி விழுந்திருந்தாலும் கூடத் தகர டப்பாவின் ஓசையைப் போல சற்று நேரத்தில் அது அடங்கியிருக்கும்.

ஆனால் சீதையின் நிலையே வேறு. ராவணனால் கவரப்பட்டு பத்து மாதங்கள் அசோகவனச் சிறையிலே இருந்தபோது அசம்பாவிதம் ஏதாவது நடந்திருந்தால் ஆலயத்தின் மணியோசையைப் போல அது அகிலத்தையே உலுக்கியிருக்கும். ராமகாவியம் என்பது ராவண காவியமாகத்

திசைமாறிச் போயிருக்கும். சீதையே என் தாயே! நீ காத்தது உன் கற்பை மட்டும் அல்ல. எங்கள் பாரதத்தின் பண்பாட்டையும், கலாச்சாரத்தையும்.



ஒருவனுக்கு ஒருத்தி என்ற கோட்பாடு – இந்த உலகத்தைக் காக்கும் நல்ல ஏற்பாடு.

இதனை ராமனும் கடைப் பிடித்தான். சீதையும் கடைப்பிடித்தாள்.

ஓ நளாயினியே. தொழுநோய் பிடித்த உனது கணவனைக் கூட நீ கூடையில் தூக்கிச் சுமந்தாயாமே. எப்படியம்மா.... முடிந்தது? உன்னால் எப்படி முடிந்தது? நீ தூக்கிச் சுமந்தது உனது கணவனை அல்ல. நமது பாரதத்தின் பண்பாட்டையும், கலாச்சாரத்தையும் நீ தூக்கிச் சுமந்தாய்.

இதுபோன்ற சம்பவங்களை மேலை நாடுகளில் கற்பனை செய்து கூடப் பார்க்க முடியாது. அங்கே கணவன்–மனைவி உறவு என்பது வெறும் காகிதத்தில் எழுதப்படுகின்றது! ஆனால் நமது பாரதத்திலோ அது கல்வெட்டுப் போல நிலைத்திருக்கின்றது.

நமது பண்பாட்டையும், கலாச்சாரத்தையும் கட்டிக் காத்த பெருமை அன்னை சாரதா தேவிக்கும், சகோதரி நிவேதிதைக்கும் உண்டு என்றால் அதை யாரும் மறுக்க முடியாது.

இந்த இரண்டு குத்து விளக்குகளாலும் நமது பாரதமே ஒளி பெற்றது. தனது கணவர் இராமகிருஷ்ண பரமஹம்சரின் இறைப்பணி தொடர்வதற்கு மனைவி என்ற ஸ்தானத்தை விலக்கிவிட்டு ஒரு தாயாய் மாறித் தாங்கிய பெண்மணியே. இந்த பாரதத்தின் கண்மணி நீங்கள்.

உங்களைப் போன்ற பெண்மணிகள் இல்லாவிட்டால் நமது பண்பாடு என்றோ பறந்து போயிருக்கும். கலாச்சாரம் காலாவதியாகிப் போயிருக்கும்.

தன்மீது குற்றச்சாட்டு என்றால் கூட ஒரு பெண் தாங்கிக் கொள்வாள். ஆனால் தன் கணவன் மீது ஒரு குற்றச்சாட்டு கூறப்பட்டால் அவள் தாங்கிக் கொள்ளமாட்டாள். அதுவும் பொய்யான குற்றச்சாட்டு என்றால் ஆழிப் பேரலை போல ஆங்காரமாய்ச் சீறிடுவாள்.

ஓ கண்ணகியே! பாண்டியன் அவையிலே மாணிக்கப் பரல்கள் சிதற உனது கால்சிலம்பைத் தரையிலே ஓங்கி அடித்து நொறுக்கி உனது கணவன்

கள்வன் அல்ல என்பதை நிரூபித்து விட்டு வானுலகம் சென்றாயே. வணங்குகிறோம் தாயே. உன்னை வணங்குகிறோம்.



உனது கணவன் கோவலனிடம் குறைகள் இருந்தாலும், பண்பாடு, கலாச்சாரம் கருதி அவனை மன்னித்துத் தன்னந்தனி ஒரு பெண்ணாய் தலைவிரி கோலத்துடன் புயலைப் போல சீறிப் போராடி என் கணவன் குற்றமற்றவன் என்பதை நிரூபித்தாயே!

உனது பண்பாட்டுக்கு முன்னே மேலை நாடுகள் அனைத்தும் உன் கால் தூசுக்குப் பெறாது என்பதில் நாங்கள் பெருமை கொள்கின்றோம்.

ஓ மேலை நாடுகளே! எங்கள் பாரதத்திலே சகோதர பாசம் சங்கீதமாய் இசைக்கின்றது. கணவன் மனைவி உறவு கற்கண்டாய் இனிக்கின்றது. தாய் தந்தையைப் பேணுவது வியக்கும் விதமாய் இருக்கின்றது. குழந்தைகளைப் பேசுவதில் கொடிகட்டிப் பறக்கின்றது. இவை அனைத்தையும் எங்கள் பாரதப்பெண்கள் கடைப்பிடிக்கிறார்கள். கலாச்சாரமும், பண்பாடும் அவர்களால் கட்டிக் காக்கப்படுகின்றது.

'கொக்கென்று நினைத்தாயோ கொங்கணவா' என்பதைக் கூட எங்கள் பாரதப் பெண்தான் பேசினாள்.

கணவனுக்கு உதவாத தனது உடம்பைப் பிறர் பார்த்து ரசித்து விடக்கூடாது என்பதற்காக, தன்னைப் பேயாக மாற்றிக் கொண்டு தலைகீழாய் நடந்து சிவனை நோக்கிச் சென்றார் காரைக்கால் அம்மையார்.

தாயும், தந்தையும் ஆன அந்தச் சிவனே அப்போது மெய் சிலிர்த்து 'என் அம்மை வருகிறாள்' என்று காரைக்கால் அம்மையாரை இறைவனே தனது தாயாகப் பாவித்தாரே. அங்கு தான் நமது பாரதப் பெண்களால் காக்கப்பட்ட பண்பாடு வென்றது. கலாச்சாரம் நின்றது. வாழ்க பாரதம்! வாழ்க பாரதப் பெண்கள் என்று கூறி எனது உரையை நிறைவு செய்கிறேன்.

# சங்க இலக்கியங்கள்

என்.எஸ்.பி

பாட்டும் தொகையும் பண்டைத் தமிழ் இலக்கியங்கள். பாண்டியர் சங்கம் வைத்து தமிழ் வளர்த்த காலத்தினவாகப் போற்றப்படுவன. எனவே சங்க இலக்கியங்கள் என எடுத்துரைக்கப்படுவன.

பாட்டு என்பது பத்துப்பாட்டு, பத்து நெடிய மலர் மாலைகள் போல்வன. தொகை என்பது எட்டுத் தொகை, எட்டு மலர்க் கூடைகள் போல்வன. அகம்-புறம் என்னும் பொருளிலக்கணப் பகுப்பு சங்க இலக்கியங்களுக்கு அமைந்த தனி மாண்பாகும். அகம் காதல் வாழ்வை மையங்கொண்டது. புறம் சமூக வாழ்வை மையங்கொண்டது. இவ்விரண்டின் திணை-துறைப்பகுப்பு நலம் உலக இலக்கிய வளத்துக்குத் தமிழ் தந்த தனிச்சிறப்புடைய நன்கொடையாகும். பிற்றைத் தமிழ் இலக்கியங்களிலோ, பிற மொழி இலக்கியங்களிலோ இப்பார்வை அழகு காணக் கிடைப்பதில்லை.

அகப்பொருளில் வகுக்கப்பட்ட அன்பின் ஐந்திணை மரபு காதல் உலக நுட்பங்களை எழில்மிகு சொல்லோவியங்களாகத் தீட்டித் தருகின்றது. இங்கெல்லாம் சொல்லோவியச் சித்திரிப்பு மனநுட்பங்கள் பற்றியது; உடலழகில் அவ்வோவிய வண்ணங்கள் மிக அரிதாகவே பயன்பட்டுள்ளன. புறப்பொருள் செய்திகளும் திணை-துறை வழியே வழங்கப்பட்டுள்ளன. அங்கு சங்ககாலச் சமூகமனவோட்டம் தெளிவாகப் பதிவு பெற்றுள்ளது. வீரம், மானம், கொடை, நட்பு போலும் மனித மதிப்பீடுகளின் எழில்மிகு சித்திரங்கள் அங்குள.

அகப்பொருள் இலக்கியம் இயற்கை அரங்கையும் வாழ்க்கை அரங்கையும் இசைவுபடுத்தும் முறையும் தனி அழகுடையது. முதல்-கரு-உரி எனப் பகுத்துக் காணும் பார்வை தனிச்சிறப்பாகும். முதற்பொருள் என்பது நிலமும் பொழுதும் பெறும் பின்னணிச் சித்திரம், கருப்பொருள் என்பது விலங்கும். புள்ளும், பிறவும் பெறும் சித்திரம். உரிப்பொருளோ கவிதையின் உணர்ச்சி மையம். இப்பார்வை அழகோடு உவமை, உள்ளுறை, இறைச்சி போல்வனவும் சங்க இலக்கிய எழிலுக்கு எழிலூட்டும் உத்திகளாகும்.

தலைவனை நினைந்து விழிநீர் விரலால் சுண்டிடும் அரசமாதேவி படுத்திருக்கும் நெடுநல்வாடையின் தந்தக் கட்டிலும், விலங்கும் புள்ளும் அஞ்சிடப் பலவற்றையும் புரட்டி உருட்டி வலிமையுடன் ஓடி வரும் திருமுருகாற்றுப் படையின் பழமுதிர்சோலை அருவியும், வலைவலந்தன்ன மரநிழலின் கீழ் புதுமணப்

பெண்போல் பொலிவுடன் சுடர்விடும் பொருநராற்றுப்படை விறலிகையாழும், மழை பெய்து பெருக்கிய புது வெள்ள நீராடிப் பின் 99 வகைப் பூக்களை இலயித்துப் பறித்திடும் குறிஞ்சிப் பாட்டின் இளம் பெண்களும், கோழி எறிந்த மகளிர் குழை சிறார்களின் மூன்றுருளைச் சிறுதேரைத் தடுக்கும் பட்டினப்பாலையின் செல்வர் முன்றிலும், இன்னும் இதுபோலும் பல சொல்லோவியங்களும் இலக்கிய நெஞ்சங்களுக்கு இனிய நல்விருந்து.

செம்புலப்பெயல் நீர்போல அன்புடை நெஞ்சங்கள் கலந்தினிக்கும் காதற் சித்திரங்கள், எட்டுத் தொகையில் பல உள. யாதும் ஊரே யாவரும் கேளிர்; வினையே ஆடவர்க்குயிரே, பண்பெனப்படுவது பாடறிந்தொழுகல் என்ன போலும் ஒற்றை வரி உன்னதங்களும் அங்கு பல.

சங்க இலக்கிய மாண்பு தமிழின் இனிய பெருமிதம் என்பதில் நாமும் பெருமை கொள்வோம்.


Printed by : Shri. Pravin V. Dabholkar at M/s RNR Printers and Publishers, 8, Thandavarayan Street, Triplicane, Chennai - 600 005.

Published by : Shri. Pravin V. Dabholkar for Vivekananda Kendra Prakashan Trust, 5, Singarachari Street, Triplicane, Chennai - 600 005.

Editor : Shri. P. Parameshwaran, President, Vivekananda Kendra, Vivekanandapuram, Kanyakumari - 629 702.